Registered as a Newspaper in Srilanka

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் உங்கள் கரங்களில்... வார இதழாக மக்கள் கருத்துக்களுடன்!


# முஸ்லிம் குரல்

Muslim Kural صوت المسلم முஸ்லிம் குரல்

18 ஜுலை 2003 - வெள்ளிக்கிழமை ☆ 19 ஜமாதுல் அவ்வல் - 1424 ☆ சுவடு - 14 ☆ தருகை - 15 ரூபா





# அரசியல் பேச்சுவார்த்தை மேசையில் முஸ்லிம்களின் தனித் தரப்புக் கோரிக்கை புலிகளால் நிராகரிப்பு!

## வட்டுக் கோட்டைக்கு வழி கேட்டால் துட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு என்கிறார்கள் நமது அரசியல் தலைமைகள்!



முஸ்லிம் மக்கள் தொடர்பாக புலிகளின் ஆதிக்க அடக்கு முறை நிலைப்பாடு மீளவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. முஸ்லிம்களுக்கு நியாயமாக உரித்தான அடிப்படை அரசியல் ஜனநாயக உரிமையான "தனித்துவத்தரப்பு" நிலைப்பாட்டை புலிகள் வழமையான பாணியில் உதாசீனப்படுத்தி நிராகரித்துள்ளனர். இந்நிராகரிப்பினை விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் கடந்த சில தினங்களுக்கு முன் வெளிப்படுத்தியுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைக்காணும் பேச்சுவார்த்தை மேசையிலோ அல்லது தற்காலிகத் தீர்வாகப் புலிகளால் கோரப்படும் "இடைக்கால நிர்வாகப்" பேச்சுவார்த்தையிலோ முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்து கொள்ளவே முடியாது என்பதே புலிகளின் நிலைப்பாடாக உள்ளது.

அப்படியானால் புலிகள் முஸ்லிம்கள் பற்றி என்னதான் சொல்கிறார்கள். "ஓர் இனத்தின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற அரசியல் முன்னெடுப்புகள் நடைபெற்று வருகையில், தனிப்பட்ட அரசியல் இலாபத்திற்காகச் செயற்படாது, இதனை யதார்த்த பூர்வமாக முஸ்லிம்கள் அணுக வேண்டும். முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்குபற்றும் நிலை இன்னும் ஏற்படவில்லை" என்கிறது புலிகள் அமைப்பு.

புலிகள் அமைப்பின் இக்கருத்தானது நமது அரசியல் அரங்கில் மிக உன்னிப்பாக நோக்கப்படவேண்டியதாகிறது. இன்று நடைபெறுகிற அரசியல் பேச்சுவார்த்தை என்பது தமிழ் மக்களுடைய தலைவிதியை நிர்ணயிக்கவே நடாத்தப்படுகிறது என்றும், முஸ்லிம்கள் அப்பேச்சுவார்த்தையில் தனிப்பட்ட இலாபங்களை அடைந்து கொள்வதற்காக செயற்படுகிறார்கள் என்றும், முஸ்லிம்கள் உண்மைக்குப் புறம்பாகவே நடந்து கொள்கிறார்கள் எனவும் அவதூறு கற்பிக்கும் வகையிலான குற்றச்சாட்டுக்களை புலிகள் அமைப்பு முஸ்லிம்கள் மீது சுமத்தியுள்ளது; தொடர்ந்தும் சுமத்தி வருகிறது.

புலிகளின் அரசியல் கபடத்தனம் மிக்க இக்குற்றச்சாட்டுக்கள் முஸ்லிம்களின் மீது சுமத்தப்படுவதன் உள்நோக்கம் தேசிய அரசியல் அரங்கிலிருந்து முஸ்லிம் களை அகற்றி விடுவதேயாகும். முஸ்லிம்களின் அரசியல் ஜனநாயக அடிப்படை உரிமைகளை நிராகரிப்பதற்கு தனக்குள்ள ஏக போகத்தை நிலைநாட்டுவதை அரசியல் நோக்கமாகவும் கொண்டுள்ளது.

புலிகளின் கபடத்தனமான இக்குற்றச்சாட்டுக்களை அரசியல் அர்த்தத்தில் நாம் பார்ப்போமானால் முஸ்லிம்கள் ஒரு தனியான தேசிய இனம், வடக்குக் கிழக்கு முஸ்லிம்களினதும் தாயகம், சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடையோர். அரசியல் பேச்சுவார்த்தை அரங்கில் சமத்துவத் தரப்பினர் என்கிற முஸ்லிம்களின் அடிப்படை அரசியல் நிலைப்பாடுகளை புலிகள் ஏற்றுக்கொள்ளவே தயாராக இல்லை என்பதை நாம் தெளிவாகவே புரிந்து கொள்ளலாம். விடிய விடிய இராமாயாணம் விடிந்த பின்பு இராமன் சீதைக்கு என்ன முறை" என்பதே புலிகளின் கதையாக உள்ளது.

தனித்துவத் தரப்பாகப் பேசப் போகிறோம் என ஊடகங்களுக்கு உரைத்துவரும் நமது அரசியல் தலைமைகளும் தனித்தரப்பாகப் போவதற்கு வழிசமைத்த தலைவருக்கு பாராட்டி தீர்மானமெடுக்கும் கட்சி அபிமானிகளும் புலிகளின் இந்நிலைப்பாட்டை அடுத்து இப்போது என்ன சொல்லப் போகிறார்கள்?

நமது மக்களோ மிக இக்கட்டான அரசியல் சூழலில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். மக்களைக் காப்பாற்ற வேண்டிய சமூகப் பொறுப்பு நமது மக்களின் அரசியல் பிரதிநிதிகளுக்கு உள்ளது. நமது அரசியல் தலைமைகள் நமது மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகளை வென்று கொள்ள மக்களாகிய நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை இப்போதாவது சொல்வார்களா? ஒன்று தங்களால் முடியும் அல்லது முடியாது என்று.

## இனப்பிரச்சினைத் தீர்வில் புதியதோர் எஜமான்!

இலங்கை இப்போது சர்வதேச நாடுகள் பலவற்றின் அக்கறைக்குரியதளமாக மாறிவிட்டது. சர்வதேச நாடுகளின் வேட்டைக்காடாகி விட்டது நமது நாடு என்பதை மிக வெளிப்படையாகவே நாம் கண்டு வருகிறோம்.



இலங்கையின் மீது பல்வேறு நாடுகளின் ஆதிக்க விருப்புகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் ,பல சர்வதேச நாடுகளுக்கிடையில் இலங்கையின் மீதான ஆதிக்கம் தொடர்பாக பனிப்போர்களும் மூளத் தொடங்கிவிட்டன. இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் நீண்ட காலமாய் அக்கறை காட்டி வந்தது இந்தியத்தரப்பு. 1990 க்குப்பின் ஏற்பட்ட சூழலில் அமெரிக்கா நேரடியாக தனது ஆர்வத்தினை வெளிப்படுத்தி வந்தது. பின்னர் நோர்வே, ஐரோப்பிய யூனியன் என்பன வெளிப்படையான நோக்கில் இலங்கையின் மீது தங்களது ஆர்வத்தினை பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்தி வந்தன. இவை பொருளாதார உதவி, ஆயுத உதவி, தொழில் நுட்ப உதவி என பல்வேறு வழிகளின் ஊடாக இலங்கைக்குள் கால் பதித்து வந்தன.

2002 இல் ஏற்பட்ட அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையை காரணம் காட்டி, ஜப்பான் தனது நேரடித்தலையீட்டை இலங்கையில் மேற்கொள்ள வழிசமைத்து உள்ளது. இலங்கையைக் கட்டி எழுப்புவதற்கான பொருளாதார உதவி என அதிக தாராளத்துடன் இலங்கை அரசியலினுள் கால் பதித்த ஜப்பான், இன்று நேரடியாக தனது அரசியல் ஆதிக்கத்தினை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு வழிகளிலும் செயற்பட்டு வருகிறது.

## மூதூரில் மீனவர்கள் மீது தாக்குதல்



அப்துல் ரஸாக் ஜுனைது(43)



வெள்ளைத்தம்பி முஹம்மது ரிஸ்பின் (23)



முஹம்மது ஜலீல் (36)

கடந்த 7ம் திகதி மூதூர் நாவலடி முகத்துவாரப் பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற தக்வா நகரைச் சேர் ந்த மீனவர்களை புலிகள் துப்பாக்கி மூலம் மிரட்டி,கடத்திச் சென்று மிக மோசமாக சித்திரவதை செய்துள்ளனர். சித்திரவதைக்குட்பட்ட மீனவர்கள் மோசமான காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## அறிவுறுத்தல் - 01

## நஷ்டஈடும் நாமும்

இழப்புக்களை அதிகமாக சந்திக்கும் போது நஷ்டஈடு கோருவதும் அதிகமாகியே விடும் - இழந்த மனித உயிர்களுக்கு நஷ்டஈடு என்று எதுவுமேயில்லை. அதனை எந்தப்பிரதியீட்டினாலும் நிவர்த்திக்கவே முடியாது - இழந்தது இழந்ததுதான் - நமது உயிர்களின் இழப்புக்களை நாம் தொடர்ந்தும் சமகால அரசியல், சமூக நிலையில் செலவுக் கணக்கீட்டிலேயே வைத்துக் கொண்டிருக்கிறோம். இவை செலவுக் கணக்கீட்டில் வைக்கப்படவேண்டிய கழிவீனங்கள் அல்ல. உன்னதமான போர்க்களத்தில் உயிர் நீத்த தியாகத்தின் வித்துக்கள்.

அரசியல் சமூக அர்த்தத்தில் இது நமக்கு மிகப் பெரும் வரவுகள். என்ன செய்யலாம்? நம்மில் பலர் இம்மரணங்களை அர்த்தமிக்கதான இழப்புக்களாக மாற்ற யோசிப்பதே இல்லை. அதனால்தான் உன்னத உயிர்த் தியாகங்கள் எல்லாம் வெறும் மரணத்தின் கணக்கீட்டில் பதியப்பட்டு வருகின்றன. இனியாவது நாம் சத்தியம் செய்வோம். எந்த உயிரையும் அர்த்தமில்லாமல் இழப்பதில்லை என்று...

இந்த உன்னத சமாதானக் காலத்திலும்? நஷ்டஈடு கோருவோரில் முஸ்லிம்கள்தான் முன் நிற்கிறார்கள் போல் உள்ளது - இழந்த சொத்துக்களுக்காக..... அது பற்றிய கோரிக்கைகள், நிகழ்வுகள் அதிக கரிசனைக்குரியதாக இப்போது மாறிவிட்டிருக்கிறது. அவை தொடர்பாக ஒரு சில செய்திகளை இங்கு மாதிரிக்கு தொகுத்துத் தருகிறோம்!

## வாழைச்சேனை சம்பவத்திற்கு இதுவரை நஷ்டஈடு இல்லை

கடந்த வருடம் வாழைச்சேனை முஸ்லிம்கள் மீது நடைபெற்ற திட்டமிட்ட இன வன்முறையில் பல முஸ்லிம் உயிர்கள் உட்பட பல கோடி ரூபா பெறுமதியான உடமைகள் அழிக்கப்பட்டது யாவரும் அறிந்ததே - இச்சம்பவத்திற்கு காரணமானவர்களை உலகம் நன்கறியும்.

சர்வதேச கவனத்தையும் ஈர்த்த வாழைச்சேனை முஸ்லிம்கள் மீதான தாக்குதலுக்கு நஷ்டஈடு வழங்கப்படுமென அரசாங்கம் உறுதியளித்தும் இதுவரை எவ்விதமான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை. சம்பவத்தில் மரணமடைந்தவர்களுக்கு அடக்கச் செலவுக்காக வழங்கப்படும் 2,000 ரூபா நஷ்டஈட்டைத் தவிர.

சம்பந்தப்பட்ட அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினர்களும் பல முறை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாக்குறுதிகள் அளித்தும் இதுவரை அவ்வாக்குறுதிகள் செயலுக்கு வரவில்லை. வீடுகள், கடைகள் →12

இலங்கை முஸ்லிம்களின் சொந்தக்குரல்! சுதந்திரக்குரல்!! ஆதரவு தாருங்கள் ,வாங்கிப் படியுங்கள், எழுதுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்களிடமிருந்து மனுக்கள்... நடவடிக்கைக்காக...

## சமமில்லாத சமகல்வி வாய்ப்பு! கணனிக் கல்வி முஸ்லிம்களுக்கு மறுப்பு!! முஸ்லிம் எம்.பி.க்களுக்கு எப்போது விழிப்பு!!!

வடக்கு கிழக்கு மாகாண அமைச்சினால் இம்மாகாண பாடசாலை நூலகங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இணையத்தள வசதிகளுடன் கணனிகள் வழங்குவதென தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் பட்டியலில் இம்மாகாண முஸ்லிம் பாடசாலைகள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளன

மாகாணக்கல்வியமைச்சின் இந்த அநீதியை வன்மையாக கண்டித்து இதில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டுமென இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. மாகாணக் கல்வியமைச்சின் செயலாளராகவும் மாகாணக் கல்விப் பணிப்பாளராகவும் தமிழர்கள் இருப்பதும், முஸ்லிம்கள் ஒருவர்தானும் இம்மாகாணசபையின் உயர் பதவிகளில் இல்லாதிருப்பதும் இந்நிலைமைகளுக்குக் காரணம் எனச் சுட்டிக் காட்டி உள்ளார் இஸ்லாமிய ஆசிரிய சங்கத்தின் செயலாளர்.

அரசோ, சம்பந்தப்பட்ட அமைச்சோ, மாகாணக் கல்வி அமைச்சோ, இம்மாகாணத்தின் சார்பில் ஆளும் தரப்பிலும், எதிர்த்தரப்பிலும் அமர்ந்திருக்கும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களோ இது சம்பந்தமாக எதுவித கவனமும் செலுத்தியதாக தெரியவில்லை.

இம்மாகாணத்தின் 8 மாவட்டங்களிலும் 24 கல்வி வலயங்கள் உள்ளன. இவற்றில் கல்முனை, கல்வி மாவட்டத்திலுள்ள கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, மற்றும் திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர் என்பன முஸ்லிம் அதிகாரிகளால் நிர்வகிக்கப்படுகின்றன. இங்குள்ள 1987 பாடசாலைகளில் 41 பாடசாலைகளுக்கு இந்த இணையத்தள வசதிகளுடன் கூடிய கணனிகள் வழங்கப்பட்டுள்ளன. இது 48 பாடசாலைகளுக்கு ஒன்று என பங்கிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்திலுள்ள சனத் தொகையில் முஸ்லிம்கள் 39.38 வீதமும் தமிழர்கள் 33.21 வீதமும், சிங்களவர்கள் 26.95 வீதமும், ஏனையவர்கள் 0.46 வீத முமாக காணப்படுகின்றனர். மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த அடிப்படையில் முறையே 8,5,3 என்ற மக்கள் செறிவும், மக்கள் தெரிவும் இருக்க, 26 வீதசிங்களவர்களுக்கு 4781.41 சதுர கிலோ மீற்றர், 33 வீததமிழர்களுக்கு 3505.32 சதுர கிலோ மீற்றர், 39 வீத முஸ்லிம்களுக்கு 1335.87 சதுர கிலோ மீற்றர் என்ற நில ஒதுக்கீடு முதல் கிழக்கு மாகாணத்திலுள்ள 283 சிங்கள பாடசாலைகளுக்கு 7(40:1), 420 தமிழ் பாடசாலைகளுக்கு 10(42:1), 292 முஸ்லிம் பாடசாலைகளுக்கு 5(58:1) என்ற நவீன கல்விக்கான ஒதுக்கீடுகள் வரை இனப்பாகுபாடும் புறக்கணிப்புகளும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

இம்மாகாணத்தில் உள்ள 15 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் கண்ணை மூடிக்கொண்டு பேசா மடந்தைகளாக இருக்கும் வரை இந்நிலை தொடரத்தான் செய்யும். ஒரு தமிழ் பாராளுமன்ற உறுப் பினரின் வார்த்தையுடன் மாகாணசபையில் முஸ்லிம்களுக்கென்றிருந்த ஒரேயொரு பதவியும் பறிக்கப்பட்டு விட்டது.

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் கண்கள் திறக்கும் வரை, வாய்கள் பூட்டப்பட்டிருக்கும் வரை இந்நிலை தொடரத்தான் செய்யும்.

-இப்னு மன்சூர்

# வாரமொரு உரைகல் - மருதூர் மெய்யொளி

## நேரத்தைச் சரியாகப் பயன்படுத்துபவரே புத்திசாலி!

"கழிந்து போன நேரத்தைத் தவிர, மனிதன் இழக்கும் எதனையும் பெரும்பாலும் திரும்பப் பெற்றுக் கொள்ள முடியும். மனிதனுடைய சொத்துக்களில் மிகப் பெறுமதியானது நேரமாகும்.

ஓர் உலோபி மிகப் பெறுமதியான செல்வங்களை அடைந்து கொள்ள வேண்டுமென்ற ஆசையிலேயே சதாவும் காலம் கழிக்கின்றான். ஆனால், ஒரு புத்தி ஜீவியோ தன்னை எதிர் நோக்கி வரும் நாட்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பான்.

*ஓர் உலோபி தன்னை வந்தடையவிருக்கும் செல்வத்தில் சிறு பகுதியேனும் கைதவறிப் போவதை விரும்பமாட்டான். இதே போன்று புத்திசாலியும் தனது நேரத்தைப் பயன்படுத்திக் கொள்வான்"*
*(ஆதாரம் : ஹுலுகுல் முஸ்லிமின்)*

நேரம் என்பது இஸ்லாத்தில் மிக முக்கிய பாத்திரம் வகிக்கின்றது. இஸ்லாத்தின் கட்டாயக் கடமைகளுள் தொழுகை, நோன்பு என்பனவற்றை நிறைவேற்றுவதிலும் நேரம் முக்கிய பங்கு பெறுகின்றது.

உண்மையில் நமக்கு வாய்த்திருக்கும் நேரங்களின் பெரும் பகுதிகளை இறைவிருப்பிற்குரியவற்றில் கழிப்பதன் மூலமே இம்மை, மறுமை ஆகிய உலகின் வெற்றி தங்கி இருக்கின்றது.

இதற்கு நேர் எதிர் திசையில் நமக்கு கிடைத்த நேரங்களை கழிப்பதன் மூலம் இறை தண்டனைக்கும், அடுத்தவர்களின் விமர்சனத்திற்கும் ஆளாகவும் நேரிடும். ஈற்றில் நரகத்தையும், நஷ்டத்தையும் ஈட்டிவைக்கும்.

ஆகவே, நமது வாழ்வில் நாமடைந்து கொள்கின்ற நேரங்களை பெறுமதி மிக்கவையாகக் கொண்டு, அதனை இறைவிருப்புக்குரியதாகப் பேணிக் கொள்வதிலேயே நமது புத்திசாலித்தனம் தங்கி இருக்கின்றது.

# குருதியின் தற்கொலை

மொட்டையாய் கிடந்த
அந்த
நிலாக்கடிகாரத்தினைப் பார்த்துத்தான்
இரவு
சோனிகள் மௌத்தாக்கப்பட்ட
நேரத்தை எழுதிக்கொண்டிருந்தேன்
ஒரு கவிதையாக

ஒவ்வொரு
காயங்களிலிருந்தும்
வலி தாங்க முடியாமல்
தற்கொலை புரிந்தது
குருதி.
சோனகத்தெருவிலிருந்து
அகதிகளாகிப்போன
சோனிகளுக்கும்



தீ
பொன்னாடையிட்டு
கௌரவிப்பதாய்
காற்று வந்து
எனது
காது முழுங்க ஊதின!

எனது
கண்ணீர்த்துளிகள்
ஊரடங்கு சட்டத்தை மீறி
இமைக்கதவுகளை திறந்து - எனது
கவிதையை கூட
தணிக்கை செய்தேன்
சமாதானத்திற்காக!

-எம்.எம்.எம்.நகீபு

# வடக்கு, கிழக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் சேவை அவசியத்திலும் அவசியமாகும்!

இன்று சமாதானம் தேவையென்ற கோசத்தை முன்வைத்து நமது நாட்டில் யுத்தம் நிறுத்தப்பட்டு பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தப் பேச்சுவார்த்தை தோல்வியடைந்து மீண்டும் ஒரு யுத்தம் நடைபெறுமா? என்பது பெரும்பாலும் சாத்தியமாகாதென்றே தோன்றுகின்றது.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டாலும் கூட இப்பேச்சுவார்த்தைகள் தொடரலாம் என்பதே பெரும்பாலானவர்களின் கருத்தாகவிருக்கின்றது. இந்த நிலையில் முஸ்லிம்களாகிய எமது நிலைதான் இன்று தெளிவில்லாமல் இருந்து வருகின்றது. நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் தமிழ் மக்களின் உரிமைகள் பற்றியே பெரும்பாலும் பேசி முடிவில் ஒரு தீர்வுக்கு வரலாம். அத்துடன் ஏதோ ஒரு வடிவில் தமிழ் மக்களுக்கு ஆட்சி, அதிகாரமும் வழங்கப்படலாம். அப்படியானால் முஸ்லிம்களாகிய எமது நிலையென்ன என்பதுதான் இன்றைய அவசரமான கேள்வியாகும்.

கடந்தகால கசப்பான சம்பவங்களால் நமது முஸ்லிம்கள்பட்ட துன்பங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. புலிகளுக்கு அரச அதிகாரம் கிடைக்காமலேயே இவ்வளவு பாதிப்புக்கள் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டதென்றால் அவர்களுக்கு அதிகாரம் கிடைத்தால் எப்படி முஸ்லிம்களை நடத்துவார்கள் என்பதை யாரும் புரிந்து கொள்ள முடியும். தமது எண்ணங்கள் நிறைவேற இன்று முஸ்லிம்கள் பற்றி போலியான வாக்குறுதிகளை அவர்களின் தலைவர்கள் வழங்கி வருகின்ற போதிலும் அவர்களை நம்பி நாங்கள் மோசம் போகத் தயாராக இல்லை. எனவேதான் எந்தத் தீர்வு கிடைக்க முன்னும் எமது வருங்காலத்தைப் பற்றி முன்னேற்பாடாக நாங்கள் சிந்திக்க வேண்டும். இன்றைய நிலையில் முஸ்லிம்கள் மத்தியில் கட்சி வேறுபாடுகளுக்கப்பால் நின்று சமுதாய நலனை மட்டும் சிந்திக்கின்றதோர் நிலைமை நம்மக்கள் மத்தியில் தோன்றியிருப்பது முன்னரைவிட நமக்கு திருப்திதரக் கூடியதாக இருக்கின்றது. அதிஷ்டவசமாக இன்றுள்ள வடக்கு, கிழக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட அதற்கு விதிவில க்கல்ல. எனவேதான் நாங்கள் ஒரு முகமாகப் பேசி சரியானதோர் தீர்மானமொன்றினை எடுத்து எமது நிலைப்பாட்டை சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தில் உள்ள உறுப்பினர்கள் பல கட்சியைச் சேர்ந்தவர்களாயினும் முஸ்லிம் சமூகத்தின் விடயங்களைப் பொறுத்தவரை ஒரே கொள்கையைக் கொண்டவர்களாக இருப்பது இன்று அவசியத்திலும் அவசியமாகும். தற்போதைய நிலையில் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் தலைமையும் இவர்களிடத்திலேயே உள் ளது. இவர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளே நமது வருங்கால சமுதாயத்தின் தலைவிதியை தீர்மானிக்கவிருக்கின்றன.

இன்றைய நிலையில் தற்போது நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளில் எமது நிலையை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டவர்களும், முஸ்லிம்களை சரியான பாதையில் வழி நடத்தத்தகைமையுள்ளவர்களும் வடக்கு, கிழக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களே என்பது மறைக்கவோ மறுக்கவோ முடியாத விடயமாகும். இதற்கான ஆணையை வெவ்வேறு வடிவில் மக்கள் இவர்களுக்கு வழங்கியிருக்கின்றார்கள்.

எனவே, இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு வடக்கு, கிழக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒரு தாய் மக்கள் போன்று ஒருமித்த கருத்தோடு நமது சமூகத் தின் உடனடிப் பிரச்சினைகளுடன் கூடிய எதிர்காலத்தின் நிரந்தரமான தொரு தீர்வொன்றினைப் பெற மிகவும் விவேகமாகவும் செயல்பட வேண்டுமென நமது சமூகத்தின் பேரால் வேண்டிக் கொள்கின்றோம். உங்களின் தலை மைகளில் வழிநடக்க இலட்சக்கண க்கான மக்கள் காத்துக் கிடக்கின் றனர். உங்களின் உண்மையான சமூக அக்கறைகளையும், உழைப்பையும் அவதானித்தே இனி வருங்காலத்தில் அவர்கள் வாக்களிப்பார்கள் என்பதையும் பொறுப்புள்ள நீங்கள் புரிந்து கொள்வீர்களென நம்புகின்றோம்.

மருதமுனையிலிருந்து.
எம்.எல்.எம்.முஸ்தபா.

# போஷாக்கு மிக்க எதிர்கால சந்ததியினரை உருவாக்குதல்

2001 முதல் 2005 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் உலகில் பாரிய வறுமை, வரட்சி, உணவுப் பற்றாக்குறை, போஷாக்கின்மை போன்ற பிரச்சினைகள் ஏற்படும் என எதிர் பார்க்கப்படுகிறது. இவற்றிலிருந்து எமது எதிர்கால சந்ததியை பாதுகாப்பதற்கான திட்டங்களை தீட்டுவது எம்முன்னால் உள்ள சவால்களில் ஒன்றாகும். 21 ஆம் நூற்றாண்டில் உலகில் பாரிய வரட்சி, உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்பதாக பரவலாக ஊடகங்கள் மூலமாக அறிவிக்கப்படுகிறது. இந்நிலையையே எமது நாடும் எதிர்நோக்கவுள்ளது. இது குறித்த விடயத்தில் அதிக கவனம் செலுத்துவது அவசியம். தற்பொழுது 40 வீதமானோர் போஷாக்கின்மையால் கஷ்டப்படுகின்றனர். எதிர்காலத்தில் இந்த வீதம் கூடும் அபாய நிலை காணப்படுகிறது.

இதனை தீர்க்கும் ஒரு வழிமுறையாக உள்நாட்டு விவசாய உற்பத்திகளை பெருக்குவது அவசியமாகும். விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் சகல உற்பத்தி பொருட்களும் (உள்நாட்டு) அரச சார்பான நிறுவனங்களால் பொருத்தமான விலை கொடுத்து கொள்வனவு செய்யப்பட வேண்டும்.

எதிர்கால உணவுத் தேவையை நிறைவு செய்வதனால் விவசாய உற்பத்தி துறையில் கூடிய கவனம் செலுத்தப்படுவது அவசியம். இத்தகைய சீரிய நடவடிக்கை மூலம் எதிர்காலத்தில் போஷாக்கு மிக்க இளம் சந்ததி ஒன்றை உருவாக்க முடியும். எதிர்பார்க்கப்படும் வறுமை, வரட்சி, உணவுப் பற்றாக்குறை, போஷாக்கின்மை ஆகியவற்றுக்கெதிராக போராடி வெற்றி பெற இப்பொழுதிலிருந்தே தயாராக வேண்டும்.

இது குறித்து மக்களுக்கு அறிவுறுத்துவது எமது பொதுக் கடமையாக இருக்க வேண்டும்.

# 7 அமைச்சர்களின் தொலைபேசிக் கட்டணம் 59 இலட்சம்

இத்தொகையில் காரியாலய உபயோகம், தனிப்பட்ட பாவனை என்று பிரிக்கப்படவில்லை. இதில் தனிப்பட்ட பாவனைகளும் உள்ளடங்கியே இருக்கிறது. இத்தகைய பாரிய தொகை பொதுமக்களின் செல்வத்திலிருந்தே செலவிடப்படுகின்றது. கடந்த தேர்தலின் போது ஊழல், வன்முறை, பொதுமக்களின் செல்வத்தை விரயமாக்கல் என்பவற்றை கடுமையாக விமர்சித்த அமைச்சர்கள் இவ்வரசில் அவற்றை மறந்து வீண் விரயம் செய்வதே ஆச்சரியமாக உள்ளது.

| அமைச்சரின் பெயர் | தொலைபேசிகளின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| 1. ரவி கருணாநாயக்க | 08 | 2542,460/- |
| 2. மஹிந்த சமரசிங்க | 13 | 670871/- |
| 3. திஸ்ஸ அத்தநாயக்க | 17 | 450789/- |
| 4. காமினி லொகுகே | 15 | 549167/- |
| 5. ஜயலத் ஜயவர்த்தன | 11 | 558048/- |
| 6. எஸ்.பி.திஸாநாயக்க | 13 | 282398/- |
| 7. ரோகித்த போகொல்லகம | 19 | 820066/- |
| மொத்தம் | 96 | 5873803/- |

இத்தொகையானது 7 மாதங்களுக்கு உரியது மட்டுமே.

# சின்ன ம:ஃரூப் என்ன சொல்கிறார்?

பதில் வேண்டும்!

குழப்பகரமான விடயங்களை உருவாக்கி சர்ச்சைக்குரிய அரசியல்வாதியாக அறியப்பட்டுவரும் திருகோணமலை மாவட்ட ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் சின்ன ம:ஃரூப் அவர்களது (27-04-2003 வீரகேசரி) அறிக்கையானது. குறிப்பாக திருமலை மாவட்ட முஸ்லிம்களையும் பொதுவாக இலங்கைவாழ் முஸ்லிம்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது.

இவ்வறிக்கையினையிட்டு கிண்ணியா, மூதூர் முஸ்லிம்கள் விசனமடைந்துள்ளனர்.

கிண்ணியா, மூதூர் ஆகிய முஸ்லிம் பாரம்பரியப் பிரதேசங்களுக்கிடையே மிக நீண்ட காலமாக நல்லுறவு நிலவி வருகிறது. கடந்த ஐம்பது வருடங்களாக கிண்ணியா அரசியல் தலைவர்களை உருவாக்குவதில் மூதூர் மக்கள் தோள் கொடுத்துதவி வருகிறார்கள். அதேபோல அரை நூற்றாண்டுக்கும் மேலாக கிண்ணியா பிரதிநிதிகளுக்கு வாக்களித்து வரும் மூதூர் மண்ணில் பிறந்த ஒருவரை பா.உ. ஆக்க வேண்டும் என கிண்ணியா மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் வாக்களித்தனர்.

1987ஆம் ஆண்டு மூதூர் முஸ்லிம்கள் புலிகளால் குதறப்பட்டபோது, மூதூர் மக்கள் அனைவரையும் கிண்ணியா மக்கள் அரவணைத்தெடுத்து தம் மண்ணில் வைத்துப் பாதுகாத்து மூதூர் மக்களின் மனங்களில் இலங்கிக் கொண்டிருக்கின்றனர்.

அண்மையில் மூதூர் முஸ்லிம்களை யாழ்ப்பாணப் பாணியில் புலிகள் இனச்சுத்திகரிப்புச் செய்ய முற்பட்ட வேளையில் நிவாரணப் பொருட்களை அனுப்பியும் "துஆ" இறைஞ்சியும் உதவியவர்கள் கிண்ணியா மக்கள். மேலும் காலாகாலமாக வியாபாரம், திருமணம், பரஸ்பர உறவு என இவ்விருபிரதேச மக்களும் தங்களுக்குள் சுக துக்கங்களில் பங்கெடுத்து வாழ்கின்றனர்.

மேற்படி உண்மைகளை அனுசரித்து அதனை வளர்த்தெடுக்கும் பாங்கிலேயே இப்பிரதேச அரசியல் வாதிகளும் செவ்வனே செயற்பட்டனர். இத்தகைய முன்னோடிகளின் பாணியில் அரசியல் செய்யத் தெரியாத அரசியல் வாதிகள்தான் "பிரதேசவாதம்" என்ற மக்கள் விரும்பாத ஒன்றை மக்கள் மத்தியில் திணித்து அரசியல் செய்ய முற்படுகின்றனர்.

தேர்தல் காலங்களில் பிரதேசத்திற்குப் பிரதேசம் சர்ச்சைக்குரிய விடயங்களைப் பேசிக் குழப்புவதை மக்கள் நன்கறிவர். கிண்ணியாவில் "நான் ஐ.தே.க.க்காரன் என இனங்காட்டிப் பேசி ஏனைய கட்சிகளைத் தூசிப்பார். மூதூருக்குப் போனால் "நான் இம்மாவட்டத்திற்கு மு.கா.வை கொண்டு வந்தேன் என்ற அடிப்படையில் நான் ஒரு மு.கா.க்காரன்தான் எனக்கூறி ஏனைய கட்சிகளைத் தூசிப்பார். இவ்வாறு அவர் பிரதேசங்களை மூட்டிவிட்டு பேசிய பேச்சின் ஒலிநாடாக்கள் இன்றும் கிண்ணியா, மூதூர் மக்களிடம் உள்ளன. அவசியப்படும் பட்சத்தில் சாட்சியங்களுடன் அவற்றைச் சமர்ப்பிக்கவும் தயாராகவுள்ளனர். ஆக மூதூர் கிண்ணியாப் பிராந்தியத்தில் பிரதேசவாதம் பற்றி வெளிப்படையாகப் பேசக்கூடியவர் சின்ன ம:ஃரூப் அவர்கள்தான்.

அன்னாரின் அறிக்கையின் இன்னுமொரு இடத்தில் "மூதூரில் 2 இளைஞர்கள் காணாமல் போனமைபற்றி புலிகளை சந்தேகித்துக் கருத்துக் கூற முடியாது. அது தொடர்பாக சகல விடயங்களை யும் நான் பிரதமரிடம் கூறியுள்ளேன் என்று கூறியுள்ளார்.

மேற்படி கூற்று மூதூர் மக்களின் மனங்களில் நிரந்தர வேதனையை ஏற்படுத்தி விட்டது. 2 இளைஞர்களையும் புலிகள் தான் கடத்திக் கொன்றார்கள் என்பதை சர்வதேச ஊடகங்கள் அனைத்தும் ஐயத்துக்கிடமின்றி நிரூபித்திருக்கிறது. அதற்குத் தக்க சான்று மூதூர் மக்களிடம் இருக்க, மக்கள் பிரதிநிதியான சின்ன ம:ஃரூப் அவர்கள் இதனை மறுத்துக் கூறுவதானது. "மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போலாகும்." சின்ன ம:ஃரூப் அவர்களின் இக் கூற்று, மக்களைக் குழப்பிவிடும் உள்நோக்கம் கொண்டதாகும். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும்.

மக்களின் நலன்கருதி நடந்து கொள்வதாக இருந்தால் சின்ன ம:ஃரூப் அவர்கள் பிரதேசவாதம் பற்றி இனிப் பேசாது விடவேண்டும். அப்படிச் செய்யும் பட்சத்தில் அது உருவாகாமலே போய் விடும்.

இன்று முஸ்லிம்கள் தங்களால் உருவாக்கப்பட்ட அரசாங்கத்தினாலும், புலிகளின் பாசிச நடவடிக்கைகளினாலும் இம்சிக்கப்பட்டு வருகின்றனர். இதனைத் தவிர்க்க சின்ன ம:ஃரூப் அவர்கள் தன்னால் இயன்றதைச் செய்ய முன்வரவேண்டும். ஏனெனில் மூதூரில் பாதிக்கப்பட்ட இதே முஸ்லிம் கள் தான் சின்ன ம:ஃரூப் அவர்களுக்கும் வாக்களித்துள்ளனர். எனவே குறைந்தது "அரசு முஸ்லிம்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் எனத் தொடர்ந்து பொய்யுரைத்தால் எதிர்கட்சி வரிசையில் உட்காருவேன்" என்றாவது கூற வேண்டும். செய்வாரா?

முஹம்மதலி ஜின்னா (J.P)

# இது எப்படியிருக்கிறது?

அம்பாறை பொது வைத்தியசாலைக்கான இரண்டுமாடி நிர்வாகக் கட்டிட நிர்மாணத்திற்கு முன்னாள் புனர்வாழ்வு அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ர :ஃப் அவர்கள் பொது முன்னணி அரசின் போது பல கோடி ரூபா ஒதுக்கீடு செய்திருந்ததாக அறிய முடிந்தது. தற்போது குறித்த கட்டிடம் தற்பேதைய ஐ.தே.மு அரசின் சுகாதார போஷாக்குத் துறை அமைச்சருமான பி. தயாரத்னவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஆயினும் இக்கட்டிடத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்தவர் பற்றியோ திறந்து வைத்தவர் பற்றியோ நினைவுப் படிகம் பொறிக்கப்படவில்லை.

ஆனால் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரும், நெடுஞ்சாலைகள் அமைச்சரான ஏ.எல்.எம். அதாவுல்லாவோ அல்லது கிழக்கு அபிவிருத்தி அமைச்சர் ரவூப் ஹக்கீமோ தமது கையா லாகாத்தனம் இதில் பிரதிபலிப்பதையும். முஸ்லிம்களுக்கெதிரான காய்கள் நகர்த்தப்படுகின்றன என்பதையும் உணர்வீர்களா?

எம். ஏ. மகுறுன் நிசா

# முஸ்லிம் குரல் மகத்தானது!

இலங்கை தேசத்தின் முஸ்லிம்களின் சுயநிர்ணய உரிமைக்காக குரல் கொடுக்க உதித்திருக்கும் உதயமே! உனது சேவை மகத்தானது. இதுவரைக்கும் நாம் எத்தனையோ பத்திரிகைகளை வாசித்துள்ளோம். ஆனால், தெட்டத் தெளிவாக, நேரடியாக பார்ப்பது போன்று உனது அரசியல், சமூகச் செய்திகள் எம்மை மெய்சிலிர்க்க வைத்து விட்டன. எமது இனத்துக்காக எமது இனத்தின் தனித்துவத்தையும், எமது இனத்துக்கு இழைக்கப்படும் துரோகங்களையும் உலகத்துக்கு வெளிச்சமிட்டுக் காட்டும் ஒரே குரல் முஸ்லிம் குரல் என்றால் மிகையாகாது.

மேலும் எங்களது ஊரைப் பொறுத்தவரை "முஸ்லிம் குரல்" கிடைக்கவில்லை என்று ஏமாற்றத்துடன் செல்பவர்களே அதிகம். பத்திரிகை உரிய நேரத்துக்கு கிடைக்காததை இட்டு அதிகம் மனம் வருந்துகிறோம்.

குரலிலே பிரசுரிக்கப்படும் அனைத்து செய்திகளும் முஸ்லிம் சமூகத்தின் எழுச்சிக்கு கால்கோளாக அமையும் என்பதில் ஐயமில்லை. முஸ்லிம்களின் குரலாகவும், முஸ்லிம்களின் தனித்துவ குரலாகவும் இப்பாரினிலே தவழ வேண்டும். அதற்கு எல்லாம் வல்ல நாயன் துணை புரிய வேண்டும்.

எம்.எஸ்.எம்.தானீஸ்,
தோப்பூர் 06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவர்களும் நீங்களும்

அவர்கள் தேர்தலில் போட்டி போடுவார்கள்.
நீங்கள் தேர்தலில் பங்கு பற்றுவீர்கள்
அவர்கள் ஆக்ரோஷமாய் பிரசங்கிப்பார்கள்
நீங்கள் ஆவேசத்தோடு கை தட்டுவீர்கள்.
அவர்கள் தேர்தல் மேடையில் வெற்று வாக்குகளை வாரி
இறைப்பார்கள்.
நீங்கள் தேர்தல் நிலையத்தில் நிஜ வாக்குகளை வாரி
வழங்குவீர்கள்
அவர்கள் ராஜ பவனி வருவார்கள்
நீங்கள் பாரம் சுமந்து பாடுபடுவீர்கள்.
அவர்கள் வண்ணத்துப் பூச்சிகளாய் வானில் சிறகடிப்பார்கள்.
நீங்கள் மயிர் கொட்டிகளாய் மாய்ந்து போவீர்கள்.
அவர்கள் ஆனந்தமாகக் குளிர் காய்வார்கள்.
நீங்கள் விறகுக் கட்டைகளாய் எரிக்கப்படுவீர்கள்.
அவர்களது நிழற்படங்கள் கிழிக்கப்பட்டதற்காக நீங்கள்
நிஜமாகவே கோபப்படுவீர்கள்.
உங்களது நிஜ உடம்பே கிழிக்கப்பட்டாலுங் கூட அவர்கள்
அதுபற்றி அணுவளவும் அலட்டிக் கொள்ள மாட்டார்கள்.
அவர்கள் நீலிக்கண்ணீர் வடிக்கத் தெரிந்தவர்கள்.
நீங்கள் நிஜக் கண்ணீர் வடிக்கத் தெரிந்தவர்கள்.
சுவரொட்டிச் சண்டை குடுபிடிக்கும் போது அவர்களுடைய
மயிர் கூட உதிர்வதில்லை.
உங்களுடைய உயிரே உதிர்ந்து போவதுண்டு.
அவர்கள் பாராளுமன்றத்தில் கை குலுக்கிக் கொள்வார்கள்.
நீங்கள் பாதையோரங்களில் கை கலந்து கொள்வீர்கள்.
அவர்கள் அறிவில் ஆதவர்கள்.
நீங்கள் அறிவில்லாதவர்கள்.
அவர்கள் மாற்றுக் கட்சிக்காரனின் மண வைபவங்களில்
கலந்துகொண்டு நட்புப் பாராட்டுவார்கள்.
நீங்களோ இரத்தச் சொந்தங்களின் மரணச் சடங்கில் கூட
கலந்து கொள்ளாது பகைமை பாராட்டுவீர்கள்.
அவர்கள் கோபம் சில நாட்களுக்கு மட்டும்.
உங்கள் பகைமையோ பல பரம்பரைகளுக்குத் தொடரும்.
உங்களுக்குக் கட்சி என்பது உங்கள் உடம்பில் ஓடும் உதிரம்
போன்றது, மதம் மாறினாலும் கூட நீங்கள் கட்சி மாற
மாட்டீர்கள்



ஆனால் அவர்களுக்கு கட்சி என்பது
அவர்கள் அணியும் ஆடை போன்றது.
ஆகவே ஆடை மாற்றுவதுபோல் அவர்கள் அடிக்கடி கட்சி
மாறுவார்கள்
நீங்கள் உயிரோடிருக்கும் போது உங்கள் வியர்வையை
வழங்குவீர்கள்.
அவர்கள் அதை நறுமணமாகப் பூசிக் கொள்வார்கள்.
நீங்கள் மரணித்தால் உங்கள் இரத்தத்தை வழங்குவீர்கள்.
அவர்கள் அதை வெற்றித் திலகமாக அணிந்து
கொள்வார்கள்
நீங்கள் உயிர்வாழும்போது தொண்டர்கள் ஆவீர்கள்.
அவர்கள் உங்கள் தோள்களின் மீது உலாவரும்
தலைவர்கள் ஆவார்கள்.
நீங்கள் மரணித்தால் பெரும் தியாகிகள் ஆவீர்கள்
அவர்கள் உங்கள் மரணத்திலும் அரசியல் ஆதாயம் தேடும்
பெரும் வியாபாரிகள் ஆவார்கள்.
உங்கள் தாய்மார்களின் கண்களில் மகனை இழந்த சோகம்
துயர கங்கையாய் பொங்கும்.
அவர்கள் தாய்மார்களின் கண்களில் மகன் மந்திரியான
சந்தோஷம் ஆனந்த கங்கையாய் பாயும்.
உங்கள் தாரம் மஞ்சள் கயிற்றை இழப்பாள்.
அவர்கள் தாரம் தங்கக் கயிற்றை அணிவாள்.
உங்கள் மனைவி சோகம் ததும்ப வீட்டுக்குள் முடங்கி
'இத்தா' இருப்பாள்.
அவர்கள் மனைவி சொகுசு விமானங்களில் உலகம்
சுற்றுவாள்.
உங்கள் குஞ்சு குறுமான்கள் 'உண்ண உணவு இல்லையே'
என்று கண்ணீர் விட்டுக் கதறுவார்கள்.
அவர்கள் செல்லப் பிள்ளைகளோ 'உண்ண மாட்டேன்'
என்று அடம்பிடித்து அழுவார்கள்.
உங்கள் குழந்தைகள் ஆநாதைகள் ஆவர்.
அவர்கள் குழந்தைகள் அதிதிகள் ஆவர்.
இது அதிசயமான விலங்கு வேளாண்மை!
நீங்கள் சாணத்தைச் சுமப்பீர்கள்.
அவர்கள் பாணத்தைச் சுவைப்பார்கள்
இது ஓர் அதிசயமான யுத்தம்!
நீங்கள் உங்களது உடல்,



பொருள், ஆவியைத் தியாகம் செய்வீர்கள்.
அவர்கள் 'போரில் கிடைத்த பொக்கிஷங்களை'
ஆனந்தமாக அனுபவிப்பார்கள்.
நீங்கள் வேதனைகளை அறுவடை செய்வீர்கள்.
அவர்கள் சாதனைகளைச் சாகுபடி செய்வார்கள்.
நீங்கள் அவர்களாக முடியாது.
அவர்களும் நீங்களாக முடியாது.
ஏனென்றால் –
நீங்கள் அடிமட்டத்து மக்கள்.
அவர்கள் மேல்மட்டத்து மாந்தர்.
இன்னும் ஏனென்றால் –
நீங்கள் நிஜங்கள்.
அவர்கள் போலிகள்.
முடிவாக
நீங்கள் நீங்கள்தான்.
அவர்கள் அவர்கள்தான்.

உஸ்மான் மரிக்கார்



# தேசிய இனங்களின் இறைமையும் முஸ்லிம்களும்

இறைமை என்பது ஒரு சமூகம் தனக்கெனப் பிறப்புரிமையாகக் கொண்டிருக்கின்ற. அதற்கு வெளியேயுள்ள வேறு எவராலும் பறித்தெடுக்க முடியாத. தம்மைத் தாமே ஆள்கின்ற அதிகாரம் என்று சுருக்கமாக வரைவிலக்கணப்படுத்தலாம். நவீன காலகட்டத்தில் அரசியல் சமூகங்களும் தேசிய இனங்களும் கொண்டிருக்கின்ற இறைமையானது எத்தகைய அரசியல் உள்ளடக்கம் மிக்கது என்பதை வரலாற்று ரீதியாக ஓரளவிற்கு விரிவாக நோக்குவோம்.

மனிதகுல வரலாற்றில் இறைமை எனும் கருத்தாக்கம் அந்தந்த காலகட்டத்தில் நிலவும் சமூக அமைப்புமுறைகளுக்கு ஏற்ப வெவ்வேறுபட்ட பண்புகளைக் கொண்டிருந்தது. இன்று மக்களுக்குச் சொந்தமாக உள்ள இறைமையானது. அன்று மன்னராட்சி காலங்களில் மக்கள் வசம் இருக்கவில்லை. மாறாக மக்களின் முதுகுகளில் உட்கார்ந்து கொண்டு மக்களை ஆட்சி செய்து வந்த மன்னரைச் சுற்றியதாக இருந்தது. மன்னர் போகுமிடமெல்லாம் இறைமை நகர்ந்து செல்லுவதாக இருந்தது.இறைமையின் உள்ளடக்கங்களையும் பரிமாணங்களையும் மன்னர்கள் தமது வசதிக்கும் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கும் ஏற்ப தாமே நிர்ணயித்துக் கொண்டார்கள். மனிதகுல வளர்ச்சிக்கும் பண்பாட்டு மேம்பாட்டிற்கும் ஏற்ப இறைமை என்ற கருத்தாக்கமும் தொடர்ச்சியாக வளர்ச்சி கண்டு வந்தது. பல்வேறு மக்கள் எழுச்சிகளும் புரட்சிகளும் இந்த வளர்ச்சிக்குப் பிரதான பங்காற்றியுள்ளது.

சாம்ராஜ்ய காலகட்டத்தில் மாமன்னர்கள் போர்களின் மூலம் குறுநில, சிறிய, பெரிய மன்னர்கள் வசம் இருந்த இறைமையை தமக்குடைமையாக்கிக் கொண்டார்கள். கொலனித்துவக் காலகட்டத்தில் ஆசிய, ஆபிரிக்க, மத்திய அமெரிக்க சுயஇராஜ்யங்களின் இறைமைகளை மேற்குலக அரசுகள் பறித்தெடுத்துக் கொண்டன. பின்வந்த காலங்களில் சாம்ராஜ்யங்கள் தகர்ந்து முடியரசுகள் தகர்ந்து குடியரசுகள் உருவாகின. கொலனி ஆதிக்கத்திற்கு எதிரான விடுதலைப் போராட்டங்கள் வெடித்தெழுந்து சுதந்திர இளம் அரசுகள் பல உருவாகின. இந்த மாற்றங்களுடன் இறைமையானது -தம்மைத்தாம் ஆளும் உரிமையானது- நேரடியாக மக்களின் கரங்களுக்குச் சென்றது.

இன்றைய காலகட்டத்தில் அரசுக்கும் ஆட்சியாளர்களுக்கும் மக்கள் தமது இறைமையை ஒரு சமூக, அரசியல் ஒப்பந்தத்தின் கீழ் கையளிக்கின்றார்கள். மக்களின் நலன்களுக்கு எதிராக ஆட்சியாளர்கள் செயற்படுகின்ற போது இறைமையை மக்கள் மீளப் பெற்றுக் கொள்கின்றார்கள். மக்களிடம் இறைமையை மீள ஒப்படைக்க மறுக்கும் ஆதிக்க சக்திகளிடம் இருந்து புரட்சிகள் மூலமாக அதனை மீட்டெடுக்கின்றார்கள். இவ்வாறான பல அரசியல் கொந்தளிப்புகளையும் கிளர்ச்சிகளையும் புரட்சிகளையும் அன்றும் இன்றும் கண்டு வருகின்றோம்.

கடந்த நூறு வருடங்களாக நடைபெற்ற, இறைமையை மீட்டெடுக்கும் மக்கள் போராட்டங்களையும் அப்போராட்டங்கள் பெற்ற அதிசயிக்கத்தக்க வெற்றிகளையும் நாம் கற்றும் நேரிலும் அறிந்துள்ளோம். இருந்தும், உலகில் பரந்து கிடக்கும் மக்கள் அனைவரும் தமக்குரிய இறைமையை ஒரேவிதமாக அனுபவிக்க முடியவில்லை. மேற்குலகின் குடிமக்கள் இறைமையை அனுபவிக்கும் அளவிலும் பண்பிலும் கிழக்கு மற்றும் ஆபிரிக்க மக்கள் அனுபவிக்க முடிவதில்லை. இம்மக்கள் பெற்றுக் கொண்ட இறைமையானது ஏகாதிபத்தியங்களினதும் வல்லரசுகளினது கொள்ளைக்கார அரசியல், பொருளாதார, இராணுவக் கொள்கைகள் மூலமாக மக்களிடம் இருந்து பிடுங்கப்பட்டுள்ளது. அல்லது கடுமையாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. உள்ளூர் அரசுகளும் அரசியல் தலைமைகளும் தமது நலன்களுக்காக சொந்த மக்களின் இறைமையை கணிசமான அளவிற்கு மேலாதிக்க அரசுகளுக்கு விலை பேசி விட்டன.

இன்றைய நவீன காலகட்டத்தில் எல்லா தேசிய இனங்களுக்கும், அரசியல் சமூகங்களுக்கும் தம்மைதாம் ஆளும் இறைமையும், ஆட்சிமுறையைத் தீர்மானிக்கும் சுயநிர்ணய உரிமையும் உள்ளது. இது ஐக்கிய நாடுகள் சபை (U.N.O) சாசனம் வரை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள உண்மையாகும். (ஈராக்கினை ஆக்கிரமித்துள்ள அமெரிக்க, பிரித்தானிய கூட்டு இன்று வரை அங்குள்ள மக்களின் விருப்பத்திற்கு மாறாக, தமக்கு விரும்பியவாறு ஒரு சட்டபூர்வ ஆட்சியை நிறுவுவதில் கடுமையான நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றமை இதற்கு)

ஒரு காலத்தில், பிரித்தானிய ஆட்சியாளர்கள் வரைந்து புகுத்திய, அரசியல் சாசனத்தின் கீழ் ஒரு தரப்பிற்கு (சிங்கள அரசியல் தலைமைக்கு) ஒப்படைக்கப்பட்ட அல்லது சிங்கள மேலாதிக்க ஆட்சியாளர்களால் பறித்தெடுக்கப்பட்ட தமது இறைமையை மீளப் பெற்று, தமக்கு விரும்பியவர்களுக்கு ஒப்படைக்கும் கட்டத்தில் இன்று தமிழ் மக்கள் உள்ளனர். தமிழ் மக்களின் இந்த இறைமை உரிமத்தையும்



அவர்களின் ஜனநாயக விருப்பத்தையும் மதித்து மறுபடியும் அவர்களுக்குரிய இறைமையை அவர்களிடமே ஒப்படைக்க மறுத்தால், அது அம்மக்களின் இறைமை மீதான மேலாதிக்கமாகின்றது. ஆதிக்க வெறியாகின்றது. எனவே தமிழ் மக்கள் பலவந்தமாகவோ அல்லது வேறு வழிமுறைகள் மூலமாகவோ தமது இறைமையை மீட்டெடுத்துக் கொள்வார்கள். அதற்கான போராட்டமே பல்வேறு தளங்களில் பல்வேறு வடிவங்களில் கடந்த 60 வருடங்களாக நடைபெற்று தற்போது உக்கிரம் பெற்றும் மக்கள் மயப்பட்டும் உள்ளது.

நெடியதும் கடியதுமான இப் போராட்டத்தின் மூலமாக, சிங்கள மேலாதிக்கத்தின் ஆயுத வலிமையையும் அரசியல் வலிமையையும் பலவீனப்படுத்தி, தமிழ் மக்கள் தமது இறைமையை மீளப்பெற்றுக் கொள்வதை தடுப்பதற்கு ஆதிக்க சக்திகள் புதிய புதிய வழிமுறைகள் மூலமாகத் தொடர்ந்தும் முயன்று வருகின்றன. இதற்கு சந்திரிகா போன்றவர்கள் மாத்திரமல்ல, ரணில் போன்றவர்களும் விதி விலக்கானவர்கள் அல்ல. சந்திரிகா–கதிர்காமர், ரணில்–பீரிஸ், விமல்வீரவன்ச–டில்வின்சில்வா போன்றவர்கள் தமிழ் மக்களின் இறைமையில் ஒரு பகுதியைத் தொடர்ந்து தாம் அனுபவித்துக் கொண்டு, பெரும்பகுதியை தொடர்ந்தும் வல்லரசுகளுக்கும் பிராந்திய வல்லரசுகளுக்கும் தாரைவார்க்கத் தயார் என அவ் ஆதிக்க சக்திகளின் கால்களில் சரணடைகின்றார்கள். இவர்கள் தமிழ் மக்களின் இறைமையை மாத்திரம் அல்ல, சிங்கள, முஸ்லிம், மலையகத் தமிழ் மக்களின் இறைமையையும் கூட மேற்படி [illegible] தாரைவார்க்கின்றார்கள். அந்தவகையில் சந்திரிகா–கதிர்காமர் குழுமம், ரணில்–மிலிந்த குழுமம், ஹக்கீம், ஜேவிபி ஆகியோர் தேசத்துரோகிகள் மாத்திரம் அல்ல தேசங்களின் துரோகிகளாகும்.

சாராம்சத்தில் இது ஒரு எட்டப்பன் வேலையேதான். சொந்த மக்களைக் காட்டிக் கொடுத்து அவர்களது இறைமையை அந்நியர்களுக்கு விலை பேசும் தரகு வேலைதான். இதுவரை மறைமுகமாக மக்களின் இறைமையை விற்று வந்தவர்கள் இப்போது நேரடியாக விலைபேசுகின்றனர்.

பிரதான இரண்டு முகாம்களாகப் பிரிந்து நிற்கும் இந்த எட்டப்பக் கூட்டத்தில் ஆதிக்கப் பேராசைச் சண்டைகள் காரணமாக, இவர்களின் இரகசியச் செயற்பாடுகளும், இரகசிய நிகழ்ச்சி நிரல்களும் அடிக்கடி வெளியே வருகின்றன. மேற்படி புரிதலின் பின்புலத்தில் வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கு இருக்கும் இறைமை பற்றி அடுத்ததாக பரிசீலிப்போம்.

## முஸ்லிம்களின் இறைமை

இலங்கை இன்று ஒரு தேசமாக இல்லை என்பதுதான் அரசியல் யதார்த்தமாகும். இலங்கையை சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையகத்தமிழ் மக்கள் உள்ளடங்கிய ஒரே தேசமாகத் தலைமை தாங்குகின்ற தலைமைத்துவத் தகுதியை சிங்கள அரசியல் தலைமை இழந்து 60 ஆண்டுகளுக்கும் மேலாகின்றது. -எனவே இலங்கையின் இறைமை என்ற வாதங்கள் காலாவதியானதும், அரசியல் கபடத்தனம் மிக்கதுமாகும். இலங்கை ஒரு தேசமாக இல்லை என்ற அரசியல் முடிவில் இருந்துதான் தமிழ் மக்களின், முஸ்லிம் மக்களின் தனியான இறைமை என்ற அம்சம் பிறக்கின்றது.

இலங்கையின் ஆள்புல எல்லை என்பது. பௌதிக ரீதியில் மாங்காய் வடிவான அதன் நிலப்பரப்பும் அதனைச் சுற்றியுள்ள கடல் மற்றும் ஆகாயப் பரப்பும் என்று கொள்ளக் கூடாது. இது சாம்ராஜ்ய காலக் கருத்தியலாகும். மாறாக, ஒரு குறிப்பிட்ட ஆட்சிமுறைக்கு தமது சுய விருப்பத்தைத் தெரிவித்தும், அவ் ஆட்சி முறைக்கு உட்பட்டும் நடந்து கொள்ளும் மக்கள் கூட்டம் இருக்கும் வாழ் விட (இங்கு வாழ்விடம் என்பது பரந்த அர்த்தம் கொண்டது) எல்லைகளை உள்ளடக்கியதுதான் ஒரு ஆட்சி அதி காரத்திற்கான ஆள்புல எல்லையாகும்.

இந்தவகையில் இலங்கையின் ஆள்புல எல்லை மாற்றப்படக் கூடாது எனவும், முழு இறைமையும் தமக்கேயுரியது எனவும் சிங்கள மேலாதிக்கம் உரிமை கோருவதும், இதனை ஐக்கிய இலங்கை, இலங்கையின் ஒருமைப்பாடு என்ற பெயரில் வல்லாதிக்க அரசுகள் ஆதரி த்து நிற்பதும், மறுபுறம், இங்கே உட்புறமாக, வடக்கு கிழக்கு முழுவதும் தமது ஆள்புல எல்லைக் குரியது. அதன் இறைமை முழுவதும் தமக்குரியது என விடுதலைப் புலிகள் உரிமை கோருவதும் சாராம்சத்தில் ஒன்றுதான். சிங்கள பூமிய, தமிழ் மண் என்ற கருத்தாக் கங்கள் இதனைத்தான் உட்சாரமாகக் கொண்டுள்ளது. மக்களை மறந்து விட்டு மண்ணின் மீது வெறியைப் பரப்புகின்றது.

மேலே ஆராயப்பட்டுள்ளதும், சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுமான அரசியல் நியமங்களின் அடிப்ப டையில்தான், வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் இறைமை குறித்த நிலைப்பாட்டிற்கு சிங்களத் தரப்பும் வரவேண்டும் தமிழ்த்தரப்பும் வரவேண்டும். குறிப்பாக வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் தொடர்பான அரசியல் நிலைப்பாட்டிற்கு தமிழ் தரப்பும் விடுதலைப் புலிகளும் வந்தாக

**ஸலாமத்**

வேண்டும். தமிழர் இறைமை குறித்து, மேலே வைக்கப்பட்டுள்ள அத்தனை தர்க்கங்களும் நியாயங்களும் இங்கு முஸ்லிம்களுக்கும் அப்படியே பொருந்தும். எனவே புதிதாகத் தர்க்கித்து நேரத்தை விரயமாக்கத் தேவையில்லை.

அரசியல் அதிகாரத்தை புதிய பண்பில் பெற்றுக் கொள்ளும் தறுவாயில் இருக்கும் தமிழ், முஸ்லிம் மக்கள் இந்த மாறும் கட்டங்களில் மிகவும் அவதானமாகவும் ஜனநாயகப் பண்புகளுடனும் இருக்க வேண்டும். ஐதேகட்சித் தரப்பினை நண்பர்கள் போலவும் வடக்கு கிழக்கு முஸ்லிம்களை எதிரிகள் போலவும் கற்பிதம் செய்யும் ஒரு ஆபத்தான கருத்தியலை விதைத்து, வளர்த்து வருவதில் தமிழ் இனவாதம் முழுமூச்சாகச் செயற்பட்டு வருகின்றது. விடுதலைப் புலிகளும் தமிழ்த் தேசியவாதிகளும் இந்த ஆபத்தான சித்தாந்தப் பிடிக்குள் சிக்குப்பட்டு அதன் பிடியில் இருந்து விடுபட முடியாது அவ்வப் போது அரசியல் தோல்விகளைச் சந்தித்து வருகின்றார்கள். தமிழ்த்தரப்பு இன்று அரசியல் பலமிக்க நிலையில் இருப்பதாகக் கருதிக் கொண்டு, சக முஸ்லிம்களின் இறைமையை மறுதலித்து வருவதைக் காண்கின்றோம். உண்மையில் தர்க்கரீதியில் தமிழர்கள் தமது இறைமையைத் தாமே மறுப்பதற்கு இது ஒப்பானது. அதாவது சிங்களத் தரப்பு தமிழ்த்தரப்பின் இறைமையை மறுப்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நியாயப்படுத்துகின்றது. இந்த அரசியல் சாரத்தைப் புரிந்து கொள்வதில் தமிழ் தரப்பு பின் நிற்கக் கூடாது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-பாதுஷா

# கல்வி உலகம்

## அதிர்ச்சியடையச் செய்யும் மூன்று ஊழல், துஷ்பிரயோக சம்பவங்கள்!

எல்லாத்துறைகளும் சீரழிந்து சிதைந்து வரும் நிலையில் - கல்வித்துறையும் அதற்கு விதிவிலக்கானதல்ல என நமக்கு நிரூபிக்கும் அதிர்ச்சியான தகவல்கள் இலங்கையில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் தரவல்ல இச் செய்திகள் - நமக்கு வெறும் செய்திகள் மட்டுமன்று, எதிர்கால சந்ததியினரின் வீழ்ச்சிக்கான அதிர்ச்சியூட்டும் அறிகுறிகளாகவும் இச் செய்திகள் வெளிப்படுகின்றன.

அண்மையில் நமது கல்வித்துறை நிர்வாகம் தொடர்பாக வெளிவந்த ஊழல்கள், அதிகார துஷ்பிரயோக சம்பவங்களில் என்னை அதிகம் பாதித்த மூன்று சம்பவங்களை குறிப்பிடலாம் என எண்ணுகிறேன்.

1. இவ்வருடம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளிவராமல் இடைநிறுத்தப்பட்டதற்கான காரணம் - பரீட்சை வினாத்தாள்கள் ஏலவே வெளியானமை என்கிற சந்தேகம் சி.ஐ.டி. விசாரணையில் இருப்பது.

2. கண்டி கல்வித் திணைக்களத்தில் இடம்பெற்றுள்ள 10 கோடி ரூபா நிதி மோசடி.

3. பாடசாலை நிதியை மோசடி செய்யும் அதிபர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் நாணயக்கார பாடசாலை அதிபர்களுக்கு எழுத்து மூலமாக விடுத்திருக்கும் எச்சரிக்கை.

இம் மூன்று சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் சாதாரண ஆசிரியர்களோ, பாடசாலை மாணவர்களோ அல்ல. கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்கும் உயர் அதிகாரிகள்; பாடசாலைகளை நிர்வகிக்கும் அதிபர்களாகும்.

ஒரு நாட்டின் பரீட்சைத்தாள்கள் முன்கூட்டியே வெளிவருவது பெருமளவு நிதி மோசடியுடன் சம்பந்தப்பட்ட முயற்சியாக இப்போது அம்பலத்திற்கு வருகிறது. பரீட்சை வினாத்தாள்கள் பணிக்கு பொறுப்பானவர்கள் அதிக நம்பிக்கைக்கு உரியவர்களாகவும் ஒழுக்கமுள்ள உயர் அதிகாரிகளாகவுமே இருப்பர் என அதிகம் நம்பப்படுகிறது. க.பொ.த. உயர்தர சிங்கள மொழி மூலமான வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்பே வெளிவந்தது நமக்கு அதிக அதிர்ச்சியைத் தரவல்லதுதான்.

கண்டிக் கல்வித் திணைக்களத்தில் நடைபெற்றதாக நீதிவிசாரணையில் உள்ள 10 கோடி ரூபா மோசடிச்சம்பவத்துடன் தொடர்புடையவர்களாக மத்திய மாகாணப் பிரதம கணக்காய்வாளர் உட்பட மத்திய மாகாண முக்கிய கல்வி அதிகாரிகளும் இருந்துள்ளனர். இவ்ஐவரும் இப்போது விளக்க மறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நமது கல்வி அதிகாரிகளும் இப்போது சிறைச்சாலையில்....

மூன்றாவதான சம்பவம் - பாடசாலை நிதியில் அதிபர்கள் மோசடி செய்வது தொடர்பானது. திருடாதே, பொய் சொல்லாதே என மாணவர்களுக்கு உபதேசிக்கும் குருவானவர்கள் இப்படிச் செய்கின்றனர் என நீங்கள் ஆச்சரியப்படக்கூடும் - நீங்கள் ஆச்சரியப்படத் தேவையில்லை. இம்மோசடி பல வருடங்களாகத் தொடர்கின்றன என்கிறது கல்வி அமைச்சு.

1982 ஆம் ஆண்டு தொடக்கம் - பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் உருவாக்கப்பட்டது. இதன் பிரதான நோக்கங்களில் ஒன்று இம் மோசடியில் ஈடுபடும் அதிபர்களை கண்காணிப்பதாகும். அதாவது பாடசாலை அபிவிருத்தி நிதியில் பெற்றோர்கள், பழைய மாணவர்களை ஈடுபடுத்தி மோசடிகளைத் தவிர்ப்பது. ஆயிரக்கணக்கான பாடசாலைகளில் பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டங்களே நடைபெறுவதில்லை. இது ஆரம்பப் பாடசாலைகளில் மட்டுமல்ல நாட்டில் உள்ள தேசியப் பாடசாலைகள் தொடக்கம் மத்திய மகா வித்தியாலயங்கள் வரை இதுவே நடைபெறுகிறது என்கிறது கல்வி அமைச்சின் அறிக்கை.

"திருடராய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என்ற பழைய பாடல்தான் ஞாபகத்திற்கு வருகிறது.

நமது வாசகர்களுக்கு
முஸ்லிம் முரசு 1
தொடக்கம் 12 இதழ்கள்
வரை படிக்க ஆர்வம்
உள்ளோர் 150/-
பெறுமதியான காசு
கட்டளையை அனுப்பி
பெற்றுக்கொள்ளலாம்.

# அதிர்வுகள்

-சிராஜ் மஷ்ஹூர்

## நம்பிக்கைகள் இறந்துவிடவில்லைதான்!

தெருவோரங்களிலும் நண்பர்களின் வீடுகளிலும் கருத்தரங்கு மண்டபங்களிலும் இன்னும் இன்னுமான அநேக இடங்களிலும் நாம் எதிர்ப்பட நேரிடுகிற இளைஞர்கள் எவ்வளவு அற்புதமான மனிதர்கள். பல சந்தர்ப்பங்களிலும் அவர்கள் என்னோடு காரசாரமாய் விவாதிக்கிறார்கள். சுரீரென்று பிறக்கும் எதிர்க் கேள்விகளை எழுப்புகிறார்கள். சிலபோது பேசி எந்தப் பயனுமேயில்லை என்ற முன் முடிவ்களோடு மௌனமாய் இருக்கிறார்கள். இந்த இளைஞர்கள் எப்போதும் என்னுள் ஆச்சரிய அலைகளையே எழுப்புகிறார்கள்.

அவர்களது ஆன்மாவின் துடிப்பை என்னால் உணர முடிகிறது. அவர்களுள் குமிழியிடும் வேதனை என்னை வதைக்கிறது. ஆர்வம் மிகுந்த அவர்களது கண்களை எதிர்கொள்ளும் ஒவ்வொரு கணமும் இனம் புரியாத ஒரு உணர்வு ஆழ்மனத்துள் விரவிப் பரவுகிறது. இந்த இளைஞர்கள் தான் நமது வருங்காலத்தின் ஒளிச்சுடர்கள். அறிவுபூர்வமாகச் சிந்திக்கிற எதிர்காலம் பற்றிய கனவுகளைச் சுமந்திருக்கின்ற இந்த இளம் தளிர்கள்தான் மாற்றத்தை இங்கு நிகழ்த்திக் காட்டப் போகிறார்கள் என்று ஆழ்மனம் அடிக்கடி சொல்கிறது.

இவர்களைப்பற்றி எண்ணும்போது ஒடுக்கப்பட்ட கறுப்பு நீக்ரோக்களின் மாபெரும் விடுதலைக் கவிஞனான லேங்ஸ்டன் ஹியூஸின் நினைவு வருகிறது. "பெயருக்கு முன்னால் எந்த அடைமொழியும் இல்லாதவர்கள் உலகம் முழுவதும் இருக்கிறார்கள்" என்று அவன் சொன்னான். நான் அடிக்கடி யோசிப்பதுண்டு. பெயருக்கு முன்னாலும் பின்னாலும் அடைமொழிகளோடு அலைகிற பலர் நமது மக்களுக்காக - நமக்காக என்ன செய்து கிழிக்கிறார்கள்?

இவர்களை விடவும், மிகச் சாதாரணமான மக்களுக்கு இருக்கும் சமூக உணர்வும் விடுதலை வேட்கையும் அதிர்ச்சியூட்டுமளவிற்கு வியப்பூட்டுவன. இவ்வளவு ஆர்வம் நிறைந்த ஆற்றல் மிகுந்த இளம் உள்ளங்களையும் முதிர்ந்த மனங்களையும் சரியான விடுதலைப் பாதையை நோக்கி நகர்த்த முடியாத கையாலாகத்தனம் யாருடையது?

எப்போதும் நாம் அடுத்தவர்களைக் குற்றம் காட்டியே பழக்கப்பட்டவர்கள். பல பதிலளிக்க முடியாத கேள்விகளைச் சமாளிப்பதில் நாம் சாமர்த்திய சாலிகள். நமது அரசியல் தலைமைகளில் இயலாமையைச் சுட்டிச் சுட்டி நமது கைகள் வலிக்கத் தொடங்கிவிட்டன. நாம் ஏன் மற்றவர்களை விடுத்து நம்மைச் சுட்டிக்காட்ட முடியாத கோழைகளாக மாறிப் போயிருக்கிறோம் நமது இயலாமை பற்றிய சங்கடங்களால் உள்ளுக்குள்ளே புழுக்களாய் நெளிகிறோமே - அதை ஏன் நமக்கு நமது மக்களிடமே வெளிப்படையாக ஒத்துக் கொள்ள முடியாமல் இருக்கிறது? சுட்டெரிக்கும் அவமானத்துள் புதைந்தழியும் பொருமல், நமது சுயத்தின் அசிங்கமான முகம்.

சந்தியில் பேசும் நமது ஆவேசங்கள் சரித்திரமாகி விடுவதில்லை. பேச வேண்டிய இடங்களில் நாம் பேசாமடந்தையாகி விடுகிறோம். நமக்குள்ளிருக்கும் கலகக் குரல்கள் இறந்து கொண்டிருக்கின்றன. உறைந்து போன மௌனம், நமது சமூகத்தையே சந்தூக்குக்கு அழைத்துக் கொண்டு செல்கிறது. நாம் இன்னமும் பார்வையாளர்களாகவே இருக்கிறோம். எவ்வளவு வசதியான வேஷம் இது. ஆடுகளத்தில் நாம் இறங்கினால்தான் ஒன்றில் வெற்றி அல்லது தோல்வி என்று வரும். ஆனால் சோம்பேறிப் பார்வையாளனுக்கு யார் வென்றாலும் யார் தோற்றாலும் பிரச்சினையில்லை. தனது ஆதரவுக் குழு தோற்றால் ஒரு கண நேர வேதனை மட்டும் தான் எச்சம். மற்றப்படி அப்படிச் செய்தால் வென்றிருக்கலாம், இப்படிச் செய்தால் வென்றிருக்கலாம் என்ற விமர்சன மேதைமை வேறு.

இதிலிருந்து விலகி விலகிச் செல்லும் இளம் உள்ளங்களைப்பார்க்க - பேச - சந்திக்க நேர்கிற ஒவ்வொரு கணமும் எவ்வளவு இனிமையானது. ***நிசார் கப்பானி*** என்கிற உன்னத அரபுக் கவிஞனை இந்த இடத்தில் ஞாபகப்படுத்தாமல் இருக்க முடியாது.

'கோபமுற்ற ஒரு தலைமுறை
நமக்கு வேண்டும்
வானத்தை உழுதுவிட
வரலாற்றைத் துடைத்தெறிய
நமது சிந்தனைகளைத் தகர்த்தெறிய
கோபமுற்ற ஒரு தலைமுறை
நமக்கு வேண்டும்.
தவறுகளை மன்னிக்காத
வளைந்து கொடுக்காத
ஒரு புதிய தலைமுறை
நமக்கு வேண்டும்'

'அரபுக் குழந்தைகளே
எதிர்காலத்தின் தானியத் தளிர்களே
நீங்களே எமது சங்கிலிகளை உடைப்பீர்கள்'

'அரபுக் குழந்தைகளே
ஜன்னல்கள் அற்ற நமது
தலைமுறையாய்ப் படியாதீர்
கெக்கரிக் கோதுபோல் பயனற்றவர்கள்
எங்களைப் பின்பற்றாதீர்கள்
எங்களை அங்கீகரியாதீர்கள்
எங்கள் கருத்துக்களை
ஏற்றுக் கொள்ளாதீர்கள்
நாங்கள் நேர்மையற்றவர்கள்
நாங்கள் ஏமாற்றுக் காரர்கள்'



'அரபுக் குழந்தைகளே
வசந்த கால மழைத்துளிகளே
எதிர்காலத்தின் தானியத் தளிர்களே
தோல்வியை வெற்றி கொள்ளும்
தலைமுறை நீங்களே'

(இந்தக் கவிதையின் முழுமைக்கு பார்க்க : பலஸ்தீனக் கவிதைகள்)

தோல்வியை வெற்றி கொள்ளும் அந்தத் தலைமுறைக்கான ஏக்கம் மனவெளியில் பரவுகிறது.

5

# பள்ளிமுனைக் கிராமத்தின் கதை

குறுநாவல்

-என்.ஏ.தீரன்-

### அத்தியாயம் 3

மையத்து வீட்டுச் சூழல் உடன் மாறியது. உடன் சனங்கள் தலைவரைச் சூழ.. தலைவர் இறுக்கமான முகபாவத்துடன் கைகளால் சனங்களை அமைதிப்படுத்தி உள்ளே உதுமானை நோக்கி வந்தார்.... உதுமான் அதிர்ந்து போனான். 'மௌத்' தை மறந்தான். கால் இல்லாததையும் மறந்து திடீரென எழ முற்பட்டான். முத்து முகம்மதும் தலைவரின் வருகையில் சந்தோஷத் திகிலடைந்தான்.

உதுமானையும் தாங்கிப் பிடித்தான்.... புலிகடிதத்தை தலைவரிடம் கொடுக்கலாமா...

உள்ளே வந்த தலைவர் அமைதியுடன் ஆனால் உறுதியாக- 'உதுமான் காக்கா! எழும்பாதீங்க! அப்படியே இருங்க! ' என்றார். 'காக்கா' என்ற 'சொந்தக்கார' அழைப்பில் சகலதும் மறந்து மகிழ்ந்த உதுமான் செயலற்று அமர்ந்தான். தலைவரும் உடன் பக்கத்தில் அமர முயல சடுதியில் பெண்கள் பக்கமிருந்து ஒரு வெள்ளை விரிப்பு தலைவர் அமர்விடத்தில் விரிக்கப்பட்டுவிட்டது. அதில் அமர்ந்தார். மையித்து வீட்டில் ஒர திடீர் அமைதி பிறந்தது. தலைவர் உதுமானின் கைகளை ஆறுதலாக பற்றிப் பிடித்தார். 'அழாதீங்க! பொறுமையா இருங்க காக்கா!'

'........' உதுமான் தலைவரின் தேறுதலிலேயே அழுதான் 'எல்லாம் ஐஎன்பிக் கட்சிக்காரன் செஞ்ச வேல.....' என்று செய்லான் ஹாஜியார் உடன் அரசியலை ஆரம்பிக்க- தலைவர் கண்டிப்பான குரலில்- 'ஹாஜியார்! மையத்து வீட்டில் அரசியல் பேச வேண்டாம். சரி, உதுமான் காக்கா! உங்கட கவலையில எனக்கும் பங்கு இருக்கு......'

உடன் செய்லான் ஹாஜியார் குறுக்கிட்டு- 'மெய்தான்.... பங்கிருக்கு. உதுமான்ட மூத்தப்பாட சகலனும், தலவர்ர வாப்பாட சாச்சிர மகண்ட மாமியாரும்.......'

தலைவரின் உஷ்ணப் பார்வையில் மறுபடி வாயை மூடினார். முத்துமுகம்மது தன் பக்கத்திலிருந்த தலைவரை நெஞ்சாரப் பார்த்துக் கொண்டிருந்தான். தலைவருக்கு விரைவில் 'சோடா' வந்தது. முத்துமுகம்மது அதனை பக்குவமாக பாக்குவெட்டியால் திறந்து குழாய் போட்டு தலைவரிடம் நீட்டினான். நீட்டிய போது தலைவர் முத்துமுகம்மதுவின் மார்பினை நோக்கி புன்முறுவல் செய்தார். முத்துமுகம்மது அகமகிழ்ந்து தன் மார்பை பார்த்தான். அதில் தலைவரின் சிறிய படமும் பிறைச் சின்னமும் இன்னமும் இருந்தது.

முத்துமுகம்மது வெட்கத்துடன் அமர்ந்தான். தலைவர் நேராகவே முத்துமுகம்மதைப் பார்த்து- 'தம்பி! உங்கட பேரென்ன?'

'......' தலைவரின் நேரடிப் பேச்சில் விர்விதித்துப் போன முத்துமுகம்மது பதில் சொல்லத் தா.....மதித்து தடுமாறினான். உடனே பற்பல குரல்களில் -



மம்மது! முத்துவம்மது... முத்தம்மது... முத்து... என்றன. பள்ளித்தலைவர் கொஞ்சம் உரக்க- 'அவனா... சேர்? முத்தும்மதூ! காலஞ்சென்ட கொறுக்காபுளியண்ட பேரன்.... ப்ப, நம்மட கச்சில 'எளஞர் அணில' இரிக்கான்'

'முத்துமுஹம்மது!' தலைவர் முதற்தடவையாக அவனது பெயரை அழகாக உச்சரித்து அழைத்து - 'முத்துமுஹம்மது.நல்ல பெயர்! இனி உதுமான் காக்காவுக்கு முத்துமுஹம்மது எப்போதும் உதவியாக இருக்க வேணும் சரியா? முத்து முஹம்மதை நமது கட்சியின் இளைஞர் அணி தலைவர் ஆக்குங்க...'

'சே.....ர் செரி சேர்.... இருப்பன் சேர்' தடுமாறி உளறினான்.

'சரி நடந்தது நடந்திட்டுது.... இனிச் செய்ய ஏதுமில்லை. நீங்க கொஞ்சம் பொறுமைய இருக்கணும்.முதல்ல மையித்து அடக்கிற வேலைகள முடிப்பம். காக்காவுக்கு எத்தின பிள்ளைகள்'

உதுமான் அழுதபடி- 'நெக்கி ரெண்டுதான். ஒரு மகன்... சேர். அந்த சப்பு நாய்தான் சேர் என்ட கிளிய சாஹவெச்சு.... அவன்... தான் சேர்... கொளும்புக்கு... கூட்டிப் போ... ய்... ண்டல்லோ... அல்லோ...

தலைவர் வியப்பாக கேள்விக்குறியுடன் செய்லான் ஹாஜியாரைப் பார்க்க - அவர் உடனடியாக தலைவரை நெருங்கி காதுக்குள் கிணுகிணுத்தார். '...... அதுமட்டுமில்ல சேர்... ன்னா வாற எலக்சனுல ஐஎன்பியில நிக்கிறதுக்கு இரிக்கானாம். கேட்டா, நான் கொளும்புல 'பெரமராஸாட' கையாளுண்டு, செல்றான்...'

சட்டென முத்துமம்மதுக்கு மறுபடி புலிகளின் கடிதம் ஞாபகம் வந்தது. ஓ...ஹ், தலைவரிடம் கொடுக்கலாமா...

'ம், சரி! நான் எதுக்கும் வயற்சேனைப் பொலிஸில ஒன்று போட்டுவிர்றன்.... ஓக்கே, ஓல் ஆர் அண்ட ரூவல்ஸ்..... நோ? என்று கூறிய தலைவர் உதுமானின் கைகளைப் பற்றிக் கொண்டு - 'சரி, உதுமான் காக்கா! ..... குல்லு நப்ஸின் தாயிகதுல் மௌத்...ண்டு அல்லாஹ்ட பேச்சு இருக்கு.... அதுக்கு கட்டுப்படணும். பொறுதிய இருங்க... சரி நான் மறுபடி வாறன்....'

இருந்தபடியே உதுமானுக்கு கைலாகு கொடுத்து 'ஸலாம் கூறிய தலைவரின் தழுவலில் உதுமான் தனை மறந்தான். உடன் பொறுமை அடைந்தான். தலைவர் பக்கத்திலிருந்ததால் ஆயிரம் சப்புச் சுல்தான்களையும் சமாளிக்க ஏலும். 'சட்'டென தலைவர் எழுந்தார்... சுற்றியிருந்த அனைவரும் எழுந்தனர். உதுமான் எழ முத்துமகம்மது கைத்தாங்கலாகப் பிடித்தான்.

'நீங்க எழாதீங்க காக்கா! தம்பி முத்துமுகம்மது, அவரை விடுங்க!' என்ற தலைவர் தன் 'மணிபேர்'ஸை வெளியே எடுத்தார். 'ஸிர்'ரென்று திறந்து இரண்டு ஆயிரம் ரூபாய் தாள்களை உருவி முத்துமுகம்மதுவின் கைகளில் திணித்தார். இரண்டு ஆயிரம் ரூபாய் தாள்களை, கண்டு வாய் பிளந்தனர். செய்லான் ஹாஜியாரின் கண்களில் ஒரு கணம் பொறாமை மின்னி மறைந்தது.

'முத்துமுகம்மது! ஆக வேண்டிய செலவுகளை செய்ங்க! நான் வாறன். எல்லோருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும்' திடீரென, பெண்கள் பக்கம் பார்த்து,- 'லாத்தா.. ஙா... மாமி... புள்ள.... வாறன்'

என்றதும் அத்தனை பெண்களும் மையித்தை மறந்து தலைவரின் முக தரிசனத்தல் மகிழ்ந்து தலையாட்டினர். தலைவர் வெளியே நடந்தார். பிரம்மித்துப் போயிருந்த முத்துமுகம்மது ஒரு செக்கன் தாமதித்து தலைவரின் பின்னால் ஓடினான். தலைவர் வாகனத்தில் ஏறி விட்டார்.

(இன்னும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண நோட்டை விவாகஞ் செய்து, காணிகளை கல்யாணம் கட்டி...

தலைப்பை வாசித்ததும் "இதென்ன .. முல்லா உளர்கிறார்...!" என வாசகர்கள் விழிப்புருவங்களை வளைப்பதை முல்லா அறியாமலில்லை. விஷயத்தோடுதான் தலைப்பினைத் தந்து சில சிந்தனைகளை சீண்டிவிட விழைந்துள்ளேன்.

இன்று நம் சன்மார்க்க சமுதாயத்தை சற்று கவனித்துப் பாருங்கள். அல்லாஹ் வினால் மனுக்குலத்திற்கு ரஹ்மத்தா கவும், நிஃமத்தாகவும் வழங்கப்பட்ட வள்தான் பெண். அந்தப் பெண்ணினம் நம் சமுதாயாத்தில் சரீஆவின் சம்மதமின்றி திருமணம் என்ற போர்வையில் அவதிக்கும், அவமானத்திற்கும் ஆளாகி வருவதை இன்னும் அங்கீகரித்தே வருகிறோம். இதனால் ஏற்படும் சமுதாயப் பாதிப்புக்களை எவரும் சிந்திப்பதில்லை. இதோ.. முல்லா அத்தகைய சமுதாயப் பாதிப்புகள் தரும் சங்கடங்களை வெளி ச்சமிட்டுக் காட்டுகிறேன். முதலில் அவற்றையெல்லாம் வாசியுங்கள்; அப்புறம் யோசியுங்கள்.

## சீதனம் சமுதாயச் சீரழிவின் ஊற்றுவாய்

தீனின் இதயங்களே - இன்று ஒரு முஸ்லிம் நங்கையை கரம்பிடித்துக் கொடுக்க வேண்டுமானால் பெரும்பாலும் சீதனம் என்ற பெயரில் என்ன என்னவெல்லாமோ மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டாரிடம் கேட்கின்றனர். சிறு வட்டத்தினர் மட்டுமே, "சீதனம் எந்த உருவத்திலும் வேண்டாம், நாங்கள் மஹர் தந்து மணம் முடிக்கிறோம்" என்று இஸ்லாமிய விருப்பப்படி விவாகஞ் செய்கின்றனர்.

"சீதனம் என்பது என்ன.. புது விடயமா? பன்னெடுங்காலமாக நம்மிடையே நடைமுறையில் இருந்துவரும் ஒரு வழக்கமும் பழக்கமும் தானே! நம்மவரின் அன்றாட வாழ்வோடு விரவியும், பரவியுமுள்ள இந்தப் பழக்கத்தை விட்டுவிட முடியுமா?" என்ற குரலும் முல்லாவின் செவி சபாவில் எதிரொலிக்கவே செய்கிறது. பன்னெடுங்காலமாக நம்மவரோடு பிணைந்துவிட்ட சீதனக் கொடுப்பனவை நம்மால் விட்டுவிட முடியாதா? தொட்டுத் தொடரத்தான் முடியுமா?

சரீஆ சம்மதிக்காத ஒன்றை அறிவு விலாசம் பெற்று வரும் இன்றைய பரந்த வெளிச்சத்தில் கன வேகத்தோடு வாழ்வியல் வசதிகளைப் பெற்றுவரும் சம காலத்தில் நம்மவரில் பெரும்பாலானோர் சீதனத்தை "சீ..." என ஒதுக்காமல் இன்னும் பிடிவாதமாகப் பிடித்துக் கொண்டிருப்பது எவ்வளவு பெரிய அபத்தம்.

ஆரம்ப காலங்களில் சீதனம் பணத்தோடு மட்டுமே நின்றது. சீர்வரிசைகள் வேண்டுமானால் குடும்ப உறவுகளை மென்மேலும் வளர்த்தெடுக்கும் நோக்கில் ஊருக்கு ஊர் வேறுபட்ட விதங்களில் வீட்டுக்குத் தேவைப்படும் பொருட்களாக, உணவுப் பொருட்களாக விருப்பத்தின் பேரில் தரப்பட்டன. நாளடையில் இந்த சீர் செனத்திகள் கட்டாயமாகத் தரப்பட வேண்டுமென நிர்ப்பந்திக்கப்பட்டமை வேறு விடயம். ஆனால், சீதனம் அப்படியல்ல. முன்னரெல்லாம் ஒரு குறிப்பிட்ட தொகையைப் பணமாகக் கேட்பார்கள். ஆனால், இன்றோ பணமும் காணி, பூமி, என்று நிலப்புலன்களையும் தரும்படி கேட்கின்றார்கள்.

இவை யாவும் கொடுக்க வசதியான குடும்பங்களில் கேட்பதும் கொடுப்பதும் அவரவர் தனிப்பட்ட விஷயங்கள் எனலாமா? சரீஆவின் பார்வையில் தவறு.. தவறுதான். ஆனால் "உள்ளவர்கள்" இப்படித் தம் விருப்பங்களை ஊர்ப்பெருமைக்காக கொடுப்பதால் அந்த மனநிலை சமூகத்தின் நடுத்தர ஏழை அடிமட்ட மக்களையும் கட்டாயப்படுத்தும் போதுதான் சமூகத்தின் சீரழிவு முல்லா போன்றோரின் பார்வையில் படுவதை சமூக மஜ்லிஸ்களில் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

பொதுவாகவே நம் சமூகம் உண்பதிலும், உடுப்பதிலும் பிற இனத்தவர்கள் திரும்பிப் பார்க்கும்படியாக ஆர்வம் கொண்டுள்ளதை மறுக்க முடியாது. கொழும்பு போன்ற நகரங்களில் முஸ்லிம் மண விழா நிகழ்வுகளில் சாப்பாடு முக்கிய இடம் வகிக்கின்றமை பொய்யல்ல. 50 சகன் சாப்பாடு என்றால் 50,000 அதற்கே போய்விடும். அதுவும் புரியாணி வைத்தால் தான் கல்யாணம் கல்யாணமாக இருக்கும் என்ற மன நிலைவேறு.

அல்லாஹ் வழங்கியுள்ள வற்றாத செல்வத்தில் திளைக்கும் வற்றாத செல்வந்தர்கள் சமூகத்தில் தங்களுக்குக் கீழ் மட்டத்தில் வாழும் ஏழை பாழையர்களை எண்ணிப் பார்த்து ஒரு முன்மாதிரியான வழி காட்டலை நமது வீட்டுத் திருமண வைபவங்கள் மூலம் வெளிப்படுத்துவார்களேயானால் சமுதாய சீரழிவை சீதனப் பழக்கத்தை ஓரளவு தணிக்கலாம். ஆனால் நடைமுறை வாழ்வில் சமுதாய செல்வந்தர்கள் அப்படியில்லையே! 3 நட்சத்திர, 5 நட்சத்திர ஹோட்டல்களில் குளு குளு மண்டபத்தில் கஸ்தூரி விழாக்களும் தோல்வி யுறும் அளவிற்கு 200 சகன், 300 சகன் 500 சகன் என்று ஊர்ப் பெருமைக்கு (இதர பணக்காரர்கள் தங்களை "பெரிசாக" மதிக்க வேண்டும் என்ற போலி கௌரவத்தில்) காரணமின்றி தோரணம் கட்டுகின்றனர்.

வழிகாட்ட வேண்டிய சில உலமாக்களே தம் பிள்ளைகளின் திருமணங்களை ஹோட்டலில் ஆடம்பரமாக நடத்தி




வருகை தந்தோருக்கு மோதிரம், கைக் கடிகாரம், சேலை என அன்பளிப்புத் தந்து புதிய கலாச்சாரப் பக்கங்களை எழுதியிருப்பதை "முல்லா" அறிந்தே வைத்திருக்கின்றேன். இப்படியான ஹோட்டல் "வெட்டிங் ஃபங்ஷன்" களுக்கு சமூகத்தின் தலைவர்களும், அரசியல் தலைவர்களும், மார்க்கத்தை கற்றுத் தெளிந்த உலமாக்களும் சமூக நல அமைப்புக்களின் பிரதிநிதிகளும் வருகை தரவே செய்கின்றனர். இவர்களில் எந்தப்பிரிவினரும் - ஏன் உலமாக்களும் கூட "இத்தகைய ஆடம்பரத் திருமணம் வேண்டாம்" எனச் சொல்வதோ, மறுப்பதோ, வெறுப்பதோ இல்லை. "அது அவர்களது பேர்சனல் மெட்டர்" என்று சமாதானமே சொல்வர்.

சமுதாயத்தின் முன்வரிசை முக்கியஸ்தர்களின் இந்த ஏனோ தானோ மனப்பாங்கு தரும் அங்கீகாரம் ஏழை முஸ்லிம்களை, இளம் பெண்களை பாதிக்கிறது எத்தனையோ முஸ்லிம் குமர்ப் பெண்கள் ஏக்கத்தை விழிகளில் தேக்கி வைத்துக் கொண்டு ஜன்னல் ஓவியங்களாகத் தெருக்களையே பார்த்துக் கொண்டிருக்கும் சோகம் சுமந்த காட்சி களே உங்களை வரவேற்கிறது. நாட்டின் நானாப்பக்கங்களிலும் சன்மார்க்க சகோதரர்கள் பெரும்பான்மையாக வாழும் ஊர்களிலும் கிராமங்களிலும் "இத்தகைய" சோகக் காட்சிகளை வெவ்வேறு விதங்களில் காண முடியும்.

பெருநாட்கள் திருநாட்கள் வரும்போது மகிழ்ச்சியோடு பொழுதைக் கழிக்க எங்கெங்கெல்லாமோ போவீர்களே! ஒரு முறை அகதி முகாம் ஒன்றிற்கு குடும்பத்தோடு விஜயம் செய்து பாருங்கள். அழுக்கு ஆடைகளுடன் அடுத்த நேர உணவுக்காக அல்லாடும் கரை சேராத கன்னியரை அரங்கேறாத நாடகங்களின் நாயகிகளை வரிசை வரிசையாகக் காணலாம். உங்கள் சமுதாயத்து நங்கையரைத் தரிசிக்கலாம். இப்படியான கன்னிப் பெண்களுக்கு எப்போது கல்யாணம் வரும்? யார் கல்யாணம் செய்து வைப்பார்கள்? காணி, பூமி, வீடு, தோட்டம், துரவு, கார், ஆட்டோ என சீதனமாகக் கேட்காத உண்மையான இஸ்லாமிய இளைஞர் பட்டாளம் எப்போது நங்கையரைத் தாரமாகக் கரம்பற்ற வரும்?

வரமாட்டார்கள்; எப்போதும் வரப்போவதில்லை. ஏன் தெரியுமா? சமூக அமைப்பு உண்மையான இஸ்லாத்தின் பக்கம் திரும்பாதவரை சமூகத்தின் முன்வரிசை முக்கியஸ்தர்கள் மனம் மாறாத வரை, மஹர் தந்து மணஞ் செய்யும் மன்னர்கள் வரப்போவதில்லை. ஜன்னல் ஓவியங்களும் ஓலை மறைப்பின் காவியங்களும் கரை சேரப்போவதில்லை. இந்நிலை தொடர்ந்தால் என்ன நேரும்?

சில காலங்களுக்கு முன் முஸ்லிம் குமர்ப் பெண்கள் கடத்தப்படுவதாக பரவலாக ஒரு புரளி கிளப்பி விடப்பட்டதே... நினைவிருக்கா? அந்தப் புரளியின் பின்னணியை "முல்லா" துப்புத் துலக்கிய போது "வெண்ணிற பர்த்தாக் கூட்டுக்குள் வெள்ளைப் புறாக்களாக எல்லா ஊர்களிலும் முஸ்லிம் மாணவியர் கல்விக் கூடம் செல்வதைக் கண்டு பொறாமை கொண்ட தீய சக்திகள் முஸ்லிம் பெண் கல்வியை முடக்கிவிடும் திட்டத்தில் கிளப்பிவிட்ட பொய்ப் பிரச்சாரம்" என்ற தகவல் கிடைத்தது. கூடவே சீதனம் எதுவுமே கேளாத பேரினவாத இளைஞர்களின் வலையில் வீழ்த்தப்பட்ட "நம்" சகோதரிகள் வேலி தாண்டிய வெள்ளாடுகளாக கம்பி நீட்டியதாகவும் பிறிதொரு தகவல் முல்லாவுக்குக் கிடைத்தது.

இவ்விரு கருத்தில் எது சரி? என்ற பட்டிமன்றம் வேண்டாம். ஆனால் சிற்சில ஊர்களில், ஆங்காங்கே, அவ்வப்போது, சீதனப்பிரச்சனை இல்லாத பிற இன இளைஞர்களுடன் கம்பி நீட்டும் நிகழ்வுகள் துரதிஷ்ட வசமாக நிகழவே செய்கின்றன. நாம் கதவை மூடிவிட்டால் எதிர் வீடுகளிலும், பக்கத்து வீடுகளிலும் கதவைத் திறந்து வரவேற்கக் காத்திருக்கின்றனர். எதிர்பார்த்திருக்கின்றனர். விழி பூத்திருக்கின்றனர் என்பதை முல்லா சூசகமாக இப்போதே சொல்லி வைத்திருக்கிறேன். அல்-குர்ஆனின் அறிவுரைக்கொப்ப இது குறித்து சிந்திப்போருக்குத் தெளிவு ஏற்படும்.

வெள்ளம் வருமுன் அணை கட்ட நாமெல்லோரும் சிந்திப்போமா?

## புகழ் பெற்ற ஜோக்ஸ்

### நிறைவேற்ற முடியாத வேண்டுகோள்!



எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் சண்டை நடந்தது. இசுரேலிய விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது. படுகாயம் அடைந்த விமானி சிறை பிடிக்கப்பட்டார்.

இராணுவ மருத்துவ மனையில் அவருக்குச் சிகிச்சை நடந்தது. அவரைச் சந்தித்த இராணுவ டாக்டர் "வேறு வழியில்லை. உங்கள் இடது காலை எடுத்தால்தான் நீங்கள் பிழைக்கும் வாய்ப்பு உண்டு" என்றார்.

"டாக்டர்! நீங்கள் எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும். அடுத்த முறை உங்கள் விமானங்கள் எங்கள் நாட்டைத் தாக்கும் போது வெட்டப்பட்ட இந்தக் காலை என் நாட்டின் மீது போடச் செய்யுங்கள்" என்று கெஞ்சினார் அவர்.

"உங்கள் நாட்டுப் பற்றிற்கு என் பாராட்டுகள். நீங்கள் சொன்னபடியே செய்து வீடுகிறேன்." என்றார் டாக்டர்.

அடுத்த வாரமே விமானியைச் சந்தித்த டாக்டர், மீண்டும் உங்களுக்குக் கெட்ட செய்தி சொல்ல வேண்டியுள்ளது. இப்பொழுது உங்கள் வலது காலை எடுக்க வேண்டும்" என்றார்.

"வெட்டப்படும் இந்தக் காலையும் எப்படியாவது எங்கள் நாட்டின் மீது போட்டு விடுங்கள்" என்றார் அவர்.

"அப்படியே செய்கிறேன்" என்றார் டாக்டர்.

அடுத்த மாதம் விமானியைச் சந்தித்த டாக்டர், "இப்பொழுது உங்கள் வலது கையை எடுக்க வேண்டியுள்ளது" என்றார்.

"என் மீது கருணை கொண்டு இதையும் எங்கள் நாட்டின் மீது எறிந்து விடுங்கள்" என்றார் விமானி. அவர் வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டது.

பதினைந்து நாட்களுக்குப் பிறகு மீண்டும் அங்கு வந்த டாக்டர், "இப்பொழுது உங்கள் இடது கையையும் வெட்டி எடுத்தாக வேண்டும்" என்றார்.

"அருள் உள்ளம் கொண்ட தாங்கள் எனக்கு நிறைய உதவி செய்திருக்கிறீர்கள். வெட்டப்பட்ட இந்தக் கையையும் எங்கள் நாட்டின் மீது போட்டு விடுங்கள்" என்றார் விமானி.

"நீங்கள் வேண்டுவது இந்த முறை நடக்காது. அது எங்களால் செய்ய இயலாத செயல்" என்றார் டாக்டர்.

"இத்தனை முறை செய்தீர்கள், ஏன் இந்த முறை செய்ய இயலாது" என்று கேட்டார் விமானி.

"நீங்கள் உங்கள் நாட்டிற்குத் தப்பிக்க முயற்சி செய்வதாக எங்களுக்குச் சந்தேகம் வந்துள்ளது" என்று பதில் சொன்னார் டாக்டர்.

# எங்கே செல்கின்றன நமது பாதைகள்

அங்கம் 3

விடத்தல் தீவு றுஸ்தா

இங்கு என்ன சொல்ல வருகிறோம் என்றால் காலத்தாலும், மனிதர்களாலும், உள தாக்கங்களின் பாதிப்புகளோ, அதற்கான சம்பவங்களோ, செறிவு மிக்க செய்திகளோ, வட புல அப்பாவி முஸ்லிம்களின் ஆறாத் தழும்பில் எவ்விதமான தெம்புகளையோ, ஆறுதல்களையோ, விடுதலைக்கான அடையாளத்தையோ, ஏற்படுத்தவில்லை என்பதுதான்.

இப்படி பலாத்கார வெளியேற்றத்துக்கு பின்னாலான மனோபாவங்கள் சொல்லொணா துயரத்தின் சுழற்சியோடும், உள வேதனை மிகுந்த தாக்கங்களோடும் இவர்களின் பரிணாமம் வளர்வுறும்போது உரிமைகளும் உள் உணர்வுகளும், வெற்றிபெறும் என்று நம்பலாம்.

### அடக்கு முறையின் பகிர்வுகள்

வடக்கு முஸ்லிம்களின் தொன்மை மிகுந்த வாழ்வியலும், சுயஇருப்பின் ஆழத்தில் தோன்றிய வரலாற்று யதார்த்தங்களும் கி. பி. 7ம் நூற்றாண்டுக்கு முன்னிருந்து இஸ்லாமியர் என்கிற சுய கட்டுப்பாடுகளோடும், புறத்தோற்றத்திலான வெளிப்பாடுகளோடும், வாழ்ந்து வந்த ஆதிகாலப்பின்னணியை மறந்தோ அல்லது இருட்டடிப்புச் செய்தோ ஏற்படுத்தப்பட்டு வந்துள்ள சதி முயற்சிகளின் உச்சக்கட்ட முறைமைகள்தான் அடக்கு முறைகளாய் பரிணமித்தன.

அன்றைய காலத்து அரசியல் ஞானோதயங்களோடு அந்நிய நாட்டு ஆதிக்கவாதிகளுக்கு வால்பிடித்தும், சிம்ம சொப்பனமாய் திகழ்ந்தவர்களும், தமிழ் பேசும் மக்களின் தலைவர்கள் என்ற மகுடம் தாங்கி ஒரு மொழி பேசும் இரு இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளையும் கருத்து மோதல்களையும் அன்றே தோற்றுவித்த சாணக்கியமற்றபோக்கு பிற்பட்ட காலத்தின் அது ஆழமாய் வேரூன்றிப்போன மரங்களாய் கொப்புகள் போட்டு தழைக்கலாயிற்று. இதுவே சமூகங்களுக்கிடையிலான கருத்து முரன்பாடுகளுக்கு காரணமாயும் அமைந்தது. மேலோட்டமான உதாராணத்தின் மூலம் பார்ப்போமாக இருந்தால் ஆங்கிலேயரின் காலனித்துவ ஆட்சியின் கீழிருந்த காலத்தில் 1885 காலப்பகுதியில் திரு இராமணாதன் சட்டவாக்க சபையில் தமிழ் மொழிச்சார்புப் பிரதிநிதியாய் இருந்தபோது "இலங்கை சோனகர் இனத்தின் தமிழர் மதத்தால் முகம்ம



திய" என்ற சொல்லாடல் முஸ்லிம் சமூகத்திற்குரிய தனித்துவ ஆளுமைகளோ, தன்னாதிக்க வதிவிட உரித்தாவணங்களோ அல்லது இனத்தோன்றல்களை சந்தேகக் கண்ணோட்டத்தில் வந்தேறு குடிகளாக சித்தரித்து உலகுக்குப் பொய்யான ஒரு தகவலையும் உள்நாட்டுக்குள்ளேயே இனப்பகைமையையும் ஏற்படுத்துமளவிற்கு உட்கருத்து சோடிக்கப்பட்டிருப்பதை தெள்ளத் தெளிவாக அறிந்துகொள்ளலாம். அத்துடன் போதிய தெளிவுபெறாத அரசியல் போக்கும், வரலாற்றுப் பாரம்பரியத்தின் மெய்யியலை புறந்தள்ளுவதாகவும், மனசை நோகடிக்கச் செய்வதாகவும் அமைந்தது எனலாம்.

இத்தியாதி ஆளாதிக்கப் பகிர்வுதான் இலங்கை மத்திய அரசின் போக்கிலும் மிகையோங்கிக் காணப்பட்டது. தேர்தல் காலத்தில் முழு முஸ்லிம்கள்மீதும் பரப்பிவிடுகின்ற மேலோட்டமான ஆசை வார்த்தைகள் இன்றுவரையும் எடுப்பார் கைப்பிள்ளை நிலையினைத் தோற்றுவித்துள்ளது.

நலன் காப்பு என்ற போர்வையில் இஸ்ரவேலிய நாசகாரப் பிரிவை இலங்கைக்கு கொண்டுவர தடையாகச் செயற்பட்ட ஒரு சில முஸ்லிம் பாராளுமன்ற அங்கத்தவர்களை பார்த்து மிகவும் கடும் தொனியில் அன்றைய ஜனாதிபதி "எனது அரசில் விரும்பியோர் இருக்கலாம் விரும்பாதோர் ... வெளியேறலாம்" என்கிற இரும்புப்பிடி ஆணைகளினால்தான் இன்றும் நம்நாடு இரத்தச் சேற்றில் வரலாற்று விடிவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.

ஆயுதப்போராட்டத்தில் ஈடுபடுவோரை எந்தப் பிசாசுகளை வைத்தும் அடக்குவேன் என்பதுதான் அன்றைய ஜனாதிபதியின் கருத்தாக இருந்தது. ஆயுதப் போராட்டம் செய்தவர்கள் தமிழ் மொழி பேசுபவர்கள். இங்கே நாம் இரண்டு விடயங்களைக் கவனிக்க வேண்டும். தமிழ்த் தலைவர்கள் "மொழியால் தமிழர்" என முஸ்லிம்களை நோக்க முற்பட்டதும், முஸ்லிம் உம்மாவுக்கு மிகவும் வெறுப்பும் அருவருப்புமிகுந்த யூத படைகளைக் கொண்டு தமிழ் பேசும் போராளிகளை அடக்க முற்பட்டதையும் மனசைப் புண்படுத்திய செயற்பாட்டையும் கவனிக்க வேண்டும்.

இந்தக்கட்டத்தில் முஸ்லிம்களின் அபிலாசைகளும், கருத்தியலும் எவ்வாறு அமைந்திருக்கும் என கருதுகின்றபோது இரு தரப்பாலும் ஒரு சுதேசிய இனத்தின் சகல வளங்களையும் பறித்தெடுத்துக் கொண்டு வடக்கின் எல்லையோரத்திற்கப்பால் வாழச் சொன்னது. இனக்களைவு சுத்திகரிப்பின் கடைசிச் சூட்சுமமும் பிரயோகிக்கப்பட்ட பிற்பாடு மனித உரிமை பற்றி மௌனமாகவே இருப்பது மிகப் பெரிய மனித உரிமை மீறலின் உச்சக்கட்ட தீமைகளின் அச்சாணியாகவே அது அமையும் என்பதில் சந்தேக மில்லை.

அதுபோன்றே எதிர்மறையான கருத்தாடல்கள், பழிவாங்கும் உணர்வுகள், துரோகிகள் பட்டங்கள் என்பன இன வைராக்கியத்தையும் அடிப்படை மீறல்களையும், சுயமாகவே தோற்றுவிக்கின்றன.

யாழ் நூலகம் எரிக்கப்பட்ட போது எத்தனை முஸ்லிம்கள் கண்ணீர் விட்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? தேசிய பொக்கிஷம் எரியூட்டிய போது கல்வி மழுங்கடிக்கப்பட்டதாக அழுத முஸ்லிம்களின் முகவரிகளை அறிவீர்களா? எங்களுடைய இன ஒற்றுமை இவ்வாறு அமைந்திருக்க செயற்கைத் தாவரங்களாய் வேரோடு பிடுங்கி எறிந்தது மனிதம் செத்துப்போனதற்கு அறிகுறியையா ஏற்படுத்திவிட்டிருக்கிறது.

## வடக்கு முஸ்லிம்களின் துன்பம் கலந்த வாழ்க்கை

பிழைத்துப்போன செயற்பாடுகளால் மிகவும் பாதிப்படைந்தவர்கள் முஸ்லிம்கள் மாத்திரமே. பிற்காலத்தில் விடுதலைப்புலிகள் வட புல முஸ்லிம்களின் வெளியேற்றம் தொடர்பாக மனவருத்தத்தைத் தெரிவித்திருந்ததும் பிழைத்துப்போன செயற்பாடுகளில் ஒரு அங்கமே.

### அடிப்படை மனித உரிமை மீறல்கள்

சமூகங்களுக்கிடையே கருத்தொற்றுமையை ஏற்படுத்தாத சட்டவாக்கத்திலுள்ள குறைபாடுகளினால் கருத்து நிலைகளிலும், வாழ்வியலிலும் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதன் காரணமாகவே பாராளுமன்ற பலவீனம் ஏற்படக் காரணமாகிறது. முஸ்லிம்கள் வெளியேற்றத்தின் போதும் இத்தகைய பலவீனப்போக்கு நிதர்சனமாய்த் தெரியலாயிற்று.

அடக்குமுறைக்கு உட்படுத்தி வெறுங்கையாய் வெளியேற்றப்பட்ட வட புல மக்களின் தாயகக் கோட்பாட்டில் காட்டிக் கொடுப்புகளோ, வேற்றான் மனப்பான்மையோ காணப்படவில்லை. மாறாக விடுதலைப் போராட்டத்தில் ஆயுதமேந்திப் போராடி மரணித்த முஸ்லிம் இளைஞர்களும் இருக்கவே செய்தனர்.

இக்கேள்விக்கு நாம் விரட்டப்பட காரணமாகவும், ஆதாரமாகவும் இருந்த சகல தரப்பும் விடைபகர்ந்தேயாகவேண்டும்.

இதுபோல் பலவீனமாகியுள்ள ஆட்சியமைப்பால் முதலாளித்துவ சுவந்தர்களின் கரங்களுக்கு திரும்பத் திரும்ப ஆட்சியும் அதிகாரமும் போய்ச் சேர்வதும், எமது சமூக விழுமியங்களும், பாதுகாப்பும் கேலிக் கூத்தாக்கப்படுவதும், எந்தத் தீர்வுமே தரப்படாத அரசியல் காய் நகர்த்தலில் வட புல முஸ்லிம்களின் விடுதலை என்பது தலைவிரி கோலமாய் காட்சி தருவதும், கொச்சைப்படுத்தப்பட்ட நிருவாக அமைப்பு முறைகளும் எமது மக்களின் நல்லபிலாசைகளை திரும்பிப் பார்க்கவே வைத்திருக்கிறது.

பாதிக்கப்பட்ட இம்மக்களின் உணர்வுகளை மழுங்கடிக்கச் செய்வது அல்லது வரலாற்றிலிருந்து இவர்களின் கதையை தூக்கி வீசுவது மனிதர்களால் மன்னிக்க முடியாத குற்றமாகவே கருதப்படும்.

(இன்னும் வரும்)

முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருங்கள்

நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக்கொணர முடியும்! சந்தாதாரர்களாக சேருங்கள்! சகோதர சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

சந்தா விபரம்!

| | |
|---|---|
| 3 மாதங்கள் - (12 இதழ்கள்) | 180/ |
| 6 மாதங்கள் - (24 இதழ்கள்) | 360/ |
| 1 வருடம் - (48 இதழ்கள்) | 720/ |

(... மூலம் அனுப்பி வைக்கப்படும்)

காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பி வைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் ... ளிக்கலாம். காசுக் கட்டளையாக அனுப்புவதாக இருந்தால் Muslim Kural Publiction Slave Island Post office எனக் குறிப்பிடவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரம்

-இப்னு அஸூமத்

## முன்னாள் தபால் தொலைத் தொடர்பு அமைச்சர் மரிக்காருக்கு நினைவு முத்திரை வெளியிடப்பட வேண்டும்!

1956இல் பண்டாரநாயக்க ஆட்சியின் போது கடுகன்னாவை தேர்தல் தொகுதியின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினரான சீ.வீ.எஸ் மரிக்கார் தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரானார். பிறப்பில் சோனகரான இவர் படிப்பில் சிங் கள மொழி பண்டிதராக விளங்கியதுடன், பௌத்த தர்மம் பற்றி பாரிய அறிவைக் கொண்டிருந்தார். இதன் காரணமாக "சிங்கள மரிக்கார்" என அழைக்கப்பட்ட இவர், தனது அமைச்சுப் பதவிக் காலத்தில் இலங்கை வானொலிச் சேவை மூலம் தினந்தோறும் அதிகாலை வேளைகளில் பௌத்த தர்ம உபதேசங்களையும் "பிரித்" ஓதுதல் நிகழ்ச் சியினையும் ஆரம்பித்தார்.

எந்தவொரு பௌத்த அமைச்சர்களுமே நினைத்துக் கூட பார்க்காத இந்த மகோன்னதப்பணி குறித்து இன்று வாழ்ந் துவரும் அநேகமான பௌத்தர்கள் மறந்துவிட்டுள்ளனர். அது மட்டுமல்லாது இன்றைய பல்கலைக்கழக உயர்தர மாணவர்களுள் கூட அதிகமானவர்கள் இது தொடர்பில் அறியாதவர்களாகவே இருந்து வருகின்றனர். இந்த உன்னதமான இலங்கையின் புதல்வனுக்காக முத்திரை ஒன்றை வெளியிடுமாறு அரசாங்கத்திடம் கோரி வந்துள்ள போதும் இதுவரை எதுவிதமான நடவடிக்கைகளுமே மேற்கொள்ளப்படவில்லை.

மரிக்கார் அவர்களைப்போல் சிங்கள மொழி, மற்றும் பௌத்த தர்மம் குறித்து பாண்டித்தியம் பெற்றுள்ள மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் மேற்கூறிய பணியை நிறைவேற்ற வேண்டும் என நாங் கள் கேட்டுக் கொள்கின்றோம். பாக்கீர் மாக்கார் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவி எற்றதன் பின்னர் ஆற் றிய முதலாவது உரையை தர்ம பதத்தில் இருந்து சில வாசகங்களைக் கூறியே ஆரம்பித்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

*ஏ - ரணசிங்க, வெலிதர*
*திவயின*

## கிழக்கு மாகாண சிங்கள, முஸ்லிம் மக்களை அரசு பாதுகாப்பது என்பது கேலிக்கூத்து

இடைக்கால நிர்வாக சபையை வழங்கிய பின்னரும் கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்துவரும் சிங்கள, முஸ்லிம் மக்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக அரசாங்கம் கூறுகிறது.

கடந்த காலத்தில் முஸ்லிம் மக்கள் கொலை செய்யப்பட்டதை தடுக்க இயலாது போன அரசு கிழக்கு மாகாண சிங்கள - முஸ்லிம் மக்களைப் பாதுகாப்பதென்பது கேலிக்கூத்தான விடயமாகும். தமிழீழ அரசுக்கு கிழக்கு மாகாணம் இல்லாமல் எதுவுமே செய்ய இயலாது என்பதை பிரபாகரன் நன்கறிவார். வன்னி காட்டை மாத்திரமே வைத்துக் கொண்டு அவரால் எதையும் செய்ய முடியாது என்பதுவும் அவருக்குத் தெரியும்.

கிழக்கு மாகாணத்தில் நிலப்பகுதி அடிப்படையில் யதார்த்த பூர்வமாகப் பார்க்கும் போது எவ்வகையிலும் அப்பகுதிக்கான இடைக்கால நிர்வாகத்தை புலிகளுக்கு வழங்க முடியாது.

*திவயின*

## டோக்கியோ உதவி வடக்கு, கிழக்கு மக்களுக்கல்ல, புலிகளுக்கே!

டோக்கியோ மாநாட்டின் மூலமாக இலங்கைக்கு உதவிகள் எவையும் கிடைக்கவில்லை. உதவி செய்வதற்கான வாக் குறுதி மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது. இதனை 'டோக்கியோ மாயை' எனக் கொள்ள முடியும். அரசாங்கம் இந்த விடயத்தில் மாபெரும் பொய்யை கட்டவிழ்த்து விட்டுள்ளது. இதனை பெரும்பாலான மக்கள் நம்பியும் உள்ளனர்.

வாக்குறுதி வழங்கப்பட்ட இந்த உதவித் தொகை உகந்த ஒரு நிலை நாட்டில் உருவாகி நிபந்தனைகளின் அடிப்படையிலேயே வழங்கப்படும். டோக்கியோ மாநாட்டின் பின்னர் இது தொடர்பில் ஜப்பானின் இலங்கைக்கான விஷேட தூதுவர் யசுஷி அகாஷி தெளிவான அறிக்கை ஒன்றை விடுத்திருந்தார்.

அதாவது 'சமாதான நடவடிக்கைகளின் முன்னேற்றத்திற்கு அமைய மட்டுமே இத்தொகை கிடைக்கும்' என்பதாகும். இந்த உதவித் தொகையை பெறவேண்டுமாயின் மீண்டும் சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்து இறுதித்தீர்வு நோக்கிச் செல்ல வேண்டும்.

அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆற்றியுள்ள உரையின் மூலம் இது தெளிவு படுத்தப்பட்டுள்ளது. இந்த உதவித் தொகை வடக்கு கிழக்கு மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படும். என அவர் தெளிவாகவே கூறியிருந்தார். இதன் போது அவர் இந்த நிதி உதவித் தொகை செலவு செய்யப்படும் போது புலிகள் இயக்கம் அரச தரப்பாகும் என்றும் கூறியிருந்தார்.

எனினும் அகாஷியும், இலங்கை அரசாங்கமும் கூறும் விதத்தில் இந்த உதவித் தொகையை திருப்பி செலுத்தும் போது முழு நாடுமே அதற்கு பொறுப்பு கூறவேண்டும். முழு நாட்டு மக்களில் பெரும்பாலானவர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்து வருகின்றனர் என்பதில்லை. புலிகள் இயக்கமென்பது இந்த நாட்டு மக்களில் மிகவும் சிறு தொகையினராகக் கொண்டதாகும். எனினும் கிடைக்கின்ற கடனுதவித் தொகையை வட்டியுடன் சேர்த்து நாமே செலுத்த வேண்டும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு மக்களுக்கு இந்த நிதி செல்லுமானால் ஓரளவு நியாயமிருக்கின்றது. ஆனால் பிரதமரின் கூற்றுப்படி இது புலிகள் வசம் செல்லுமானால் டோக்கியோ உதவி தொடர்பில் நாங்கள் மகிழ்ச்சியடைவதில் எதுவித பயனும் இல்லை.

*விரிவுரையாளர் தயான் ஜயதிலக்க,*
*திவயின*

## உயிரைப் பறிக்கும் என்பது முன்னரே கூறப்பட்டது.

29 வருடங்களாக ஒன்றாக இணைந்து வாழ்ந்து வந்த லாலி மற்றும் லாடன் சகோதரிகளின் அறுவைச் சிகிச்சை தொடர்பில் உலக ஊடகச் சாதனங்கள் மிகுந்த அக்கறை கொண்டிருந்தன. அவர்களது இழப்பு உலகையே கண்ணீர் வடிக்கச் செய்துள்ளது.

இந்தச் சகோதரிகளின் பெற்றோருக்கு மேலும் 10 குழந்தைகள் இருந்ததன் காரணமாக இவர்கள் ஈரான், தெஹ்ரான் நகரில் உள்ள வைத்தியர் அல்லீஷ சபாயின் அவர்களுடைய வீட்டில், அவரது பராமரிப்பில் வாழ்ந்து வந்துள்ளனர்.



உடலால் இணையப் பெற்றிருப்பினும் இருவரும் இரு வேறு நபர்களாக கவனிக்கப்படல் வேண்டும் என்றும் இருவருக்கும் தனித் தனியாக விவாகம் செய்து வைக்கப்பட வேண்டும் என்றும் ஈரானியக் குடியரசின் முதலாவது மதத் தலைவரான அயதுல்லா ஹ்ருஹுல்லாஹ் கொமெய்னி 1976 இல் விஷேட மதச் சட்டமொன்றில் குறிப்பிட்டிருந்தார். மேலும், இவர்களை பிரிப்பதானது மதத்தின் பிரகாரம் முரண்பாடான விடயமாகும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

தலைகளால் இணைந்த குழந்தைகள் பிறப்பதானது சுமார் 20 இலட்சக் குழந்தைகளுக்கு ஒருமுறை ஏற்படும் பிறப்பாகும் என தெரியவருகிறது. இவ்வாறான குழந்தைகளைப் பிரிப்பதற்காக இதுவரை மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியையே தழுவியுள்ளன. தெஹ்ரான் பல்கலைக்கழக சட்டப்படிப்புப் பட்டதாரிகளான லாலி, மற்றும் லாடான் சகோதரிகள் இந்தப் பயங்கரமான சத்திரசிகிச்சைக்கு உள்ளாகி சமுதாயத்தில் தனித்தனியாக முகங் கொடுக்க துணிவு கொண்டனர்.

1988 இல் முதன் முதலாக மஜீட் ஷமி எனும் வைத்தியர் இவர்களுக்கான சத்திர சிகிச்சையை மேற்கொள்ள முன்வந்தார். எனினும் அது கைக் கூடவில்லை. 1987 இல் இவர்களை பரிசோதனை செய்த ஜேர்மன் ஹீடல்பர்க் பல்கலைக்கழக மருத்துவ நிபுணர்கள் குழு இவர்களுக்கான சத்திர சிகிச்சையை மேற்கொள்வது இவர்களது உயிர்களைப் பாதிக்கும் எனத் தீர்மானித்தது.

*லங்காதீப*

## ஒலுவில் துறைமுகம் வாய்ப் பேச்சளவிலேயே

அம்பாறை மாவட்டத்துக்கு உரிய ஒலுவில் துறைமுக நிர்மாணப் பணிகள் 2003 செப்டம்பர் மாதம் நிறைவு பெறும் என அமைச்சர் ரவூ்ஃப் ஹக்கீம் கூறியிருந்த போதும் அதனது ஆரம்பகட்டப் பணிகள் கூட இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை எனத் தெரிய வருகின்றது.

*வக்ஜன*

## தண்ணீரில் வரைந்த எனது முகம்

நிஜங்களைத்தேடி களைத்து
நிழல்களாவது கிடைத்ததே
என சந்தோசப்பட வைக்கப்பட்டவன்
நான்

தேசத்தை நேசித்து
முடிவில் இரண்டுமே
தூரத்தில் புள்ளியாய்
இமைக்குள் தேங்கிக்கிடந்து.

தீ முக்காடிட்டு
முகம் வெந்து போய் –
எனினும்,
அவதாரங்களை

காலத் தூறல்களின்



மனப் புழுதியின் நாற்றம்.

'கர்கத்' மரங்களுக்கு பசளையிட்டு
'மஸீரா' தென்றல் என்று
புயலைகட்டி இழுத்து வந்த
எனது முற்றத்து அரசியல்வாதி

நிழல்களை பிடித்து வந்து
நிஜமென்று சொல்வதை
நான் ஏற்கத்தயாரில்லை!

நான் நம்பத்தயாரில்லை !

எனது தாய் பலஸ்தீனமல்ல
எனது தந்தை செச்னியாவல்ல
நான் பிறந்தது குஜ்ராத்தோ
வளர்ந்தது காஷ்மீரோ அல்ல.
சீண்டப்பட நான் ஈராக்குமல்ல
ஆனால் –
இவையனைத்தும்
எனக்குள் உண்டு

ஸைத்துன்களை தேடிப்போய்
ரத்தக்கவிதை வாங்கி வந்ததும்
பிறக்கப்போகும்
'துர்ராக்'களுக்காகவும்
நான் சந்தோசிக்கமுடியாது

ஏ.எம்.எம்.நஸீர்.

# ஆறாவது பாங்கு!

இரவில் விழிப்பதாகவும் பகலில் தூங்குவதாகவும் ஊரே மாறிக்கிடந்தது.

அந்த இரவின் அபாயத்தை ஆகாயத்தில் வரைந்து காட்டி அந்திச் சூரியன் முக்காட்டை எடுத்து மூட அந்த எல்லைக் கிராமம் பீதியால் நடுங்கின.

"என்ன நடக்கப் போகிறதோ"?

நிஸார் தூக்குக் கம்பிகளை கழட்டி, எஞ்சிய எலும்புகளையும் புதைத்து, மேசை நிலமெல்லாம் கழுவி முடித்து தட்டியை அடைத்துவிட்டு நேரத்தை நினைத்து வானத்தைப் பார்த்தான். அவன் இறைச்சிக் கடை கழுவி வடிய விட்டிருந்த இரத்தக் கறை வானத்திலும் பரவிக் கிடந்தது.

ஆறரையைத் தாண்டியிருக்கும் என ஊகித்து அவசர அவசரமாக குளித்து முடித்தான்.

எத்தனை தடவைகள் சோப் போட்டும் அகலாத இறைச்சி நெடியை அத்தர் பூசி மறைத்தது. சென்ற பெருநாளுக்கு எடுத்த "றொன்ஸன்" சேட்டை உடுத்து அந்த மெல்லிய துணியால் வெளித் தெரிய ஆயிரம் ரூபாய்த் தாளை மடித்து பக்கட்டில் வைத்தான். கண்ணாடியை எடுத்து முன்பாகவும், இரு பக்கமாகவும் பிடித்துப் பார்த்துக் கொண்டான். அவன் உடம்பெல்லாம் லைலா ஊர்ந்து கொண்டிருந்தாள். அண்மைக்காலமாக நிசாருக்கு ஆமினாவின் மகள் லைலா மீது ஒரு கண்தான்.

நிசார் ஒல்லி என்றாலும் தசைகள் முறுக்கேறி விறைத்த உடம்பு. பொது நிறம், ஆறடியை அண்மித்த உயரம். ஒரு கைக்குட்டையை மூலை வாட்டவாக மடித்து தலையில் கட்டியிருப்பான். சாரண் உடுத்து மடித்துக் கட்டினால் உள்ளே அணிந்த கட்டைக் கால் சட்டையின் கால்கள் வெளியே தெரியும்.

ஒரு சிறு பிள்ளையையும் "என்ன மச்சான்" என்று பழகும் பண்பு.

ஊர் பயத்தால் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தாலும் நிசாரின் கால்கள் லைலாவை நினைத்தே நடந்து கொண்டிருந்தன.

வாழ்வே வெறுத்து விட்ட சோகத்தில் நடைப்பிணங்களாக இரை தூக்கிச் செல்லும் எறும்புகள் போல் கிராமத்தின் ஓரத்தில் இருந்தவர்களெல்லாம் மூட்டை முடிச்சுகளோடு ஆமினாவின் வீடு நோக்கி நகர்ந்து கொண்டிருந்தனர்.

ஆமினா தைரியமானவள் எந்த ஆண்களோடும் கூச்சமின்றி பேசுவாள். கணவர் கலந்தர் நானா அவளது பேச்சில் கட்டுண்ட நாயாய் வாலாட்டித் திரிவார். என்றாலும் கணவனுக்கு துரோகம் நினைக்க மாட்டாள். ஆமினாவுக்கு மார்க்க ஈடுபாடு அதிகம். நோன்பு வந்துவிட்டால் தராவீஹ் தொழுகை, பெருநாள் தொழுகை, தஸ்பீஹ் தொழுகை எல்லாம் அவளது வீட்டிலேதான். ஊரின் நடுவில் சந்தை, பள்ளிவாசல், பாடசாலை என்பனவற்றிற்குச் செல்லும் வீதியில் தான் ஆமினாவின் வீடும் இருந்தது.

"அஸர்" தொழுது "ஸலாம்" கொடுத்த கையோடு எதிர்வீட்டு சல்மாவோடு பேசுவதுபோல் வீதிக்கு வருவாள் மஃரிப் பாங்கு சொல்லும் வரையும் அந்த வீதியில்

**கவியோவியன்**

வருவோர். போவோரோடெல்லாம் பேசிப் பேசியே பொழுதைக் கழிப்பாள். இதனால் ஊரின் பிரச்சினையெல்லாம் ஆமினாவுக்குத் தெரிந்துவிடுவது போல, அவளது வீட்டுப் பிரச்சினைகளும் ஊருக்கே தெரிந்து விடும்.

இது கலந்தர் நானாவுக்குப் பிடிக்காது தான் என்றாலும் அவர் கண்டு கொள்வதில்லை. இவளைத் திருத்த முடியாது என விட்டு விட்ட ஒரு சில பழக்கங்களில் இதுவும் ஒன்று. என்றாலும் அவளது கள்ளம் கபடமற்ற பேச்சை மனதுக்குள் ரசிப்பார்.

ஆமினாவின் மூத்த மகள் லைலா உம்மாவுக்குத் தப்பாமலே பிறந்திருக்கிறாள்.

அவள் வயதை ஒத்த குமரிப் பிள்களையெல்லாம் அவள் வீட்டிலேயே வளைத்துப் போடும் வசீகரம் அவளுக்கு குண்டு. விளையாடுவதில் அப்படியொரு அலாதிப் பிரியம். கண்ணுக்கு அருகே குண்டை வைத்து இலக்கு எறிவதில் கெட்டிக்காரி. அவளோடு விளையாட வரும் ஆண் பிள்ளைகளையே தோற்கடித்து விடுவாள். தாவணி மடிப்பில் குண்டுகளை வைத்து செருகுவாள். அவள் இடுப்பைப் பார்க்கவே ஒரு கும்பல் நிற்கும்.

இவ்வாறு ஆமினாவோடும் அவளது குடும்பத்தோடும் அதிக அறிமுகம் இருந்ததனால்தானோ என்னவோ "மௌத்தாவதானாலும் எல்லாரும் ஒண்டா இருந்து மௌத்தாகுவம்" எனக் கூறி இரவானால் ஊரவர்கள் ஆமினாவின் வீடே கதியென்று கிடந்தனர். ஆமினாவுக்கு ஊரின் நிலவரம் குறித்த கவலை இருந்தாலும் மனிதரோடு மனிதராய் கூடி இருப்பதில்தான் அவளுக்கும் கொண்டாட்டம்.

அரிக்கன் சட்டியில் இஞ்சி உரைத்து தேனீருற்றி அனைவருக்கும் பரிமாறினாள். கலந்தர் நானா சற்று கிண்டலான பேர் வழி. தனது வீட்டுத் திண்ணையை நிறைத்துக் கிடந்தவர்களை சிரிக்க வைக்க நினைத்து "பாருங்க நம்மட வாழ்க்கைய பகலைக்கு பட்டினி ராவைக்கு பொட்டணி"

"சும்மா இருங்க,

மனிசன் பர்ரபாட்டுக்கு உங்களுக்கு பகிடியும் வருகுதா" ஆமினா சிடுசிடுத்தாள். அங்கே குவிந்திருந்த பொட்டணிகளுக்குள்ளிருந்து மணிக்கூடொன்று பத்து மணியைப் பறைந்தது.

நேரம் சொல்லி வைத்து தொடங்கினாற் போல் தூரத்தே சில துப்பாக்கி வேட்டுக்கள் கூடவே சில கூக்குரல்களும்.

ஆமினா முற்றத்திற்கு ஓடிவந்தாள். கிழக்கு வானம் தீப்பிடித்து எரிந்தது. எங்கும் புகை மண்டலம் காதை அடைக்கும் அழுகுரல்களோடே,

**சிறுகதை**

"அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்"

ஐந்து நேரத் தொழுகைக்கான பாங்கையே கேட்டுப் பழக்கப்பட்டவர்களுக்கு ஆறாவது பாங்காய் அபாயத்தை அறிவிக்கும் பாங்கு அன்றுதான் அறிமுகமானது. அது இன்னும் அச்சத்தைக் ஊட்டிற்று.

வீதியால் ஒரு குரல் "மாணிக்க ராசா சுட்டு வாரான் எல்லோரும் ஓடித்தப்புங்க" கூவிக் கொண்டே அக்குரல் காற்றில் கரைந்தது. நிசாரும் அவனது சகாக்களும்



கத்தி கோடரியோடு ஊரின் எல்லையை நோக்கி ஓடினர்.

கண்ணுக்கு எட்டிய தூரத்தில் மரணம் வந்துவிட்டதை உணர்ந்து "யா அல்லாஹ்.. யா அல்லாஹ்" குரல்கள் கம்மின...

பாரூக் நானாவின் வீடு பத்துவதாகவும் மஃமூது காக்காவை அடித்து நெருப்பில் எறிந்து வீசியதாகவும் செய்தி வந்தது.

பெண்களையெல்லாம் ஆமினாவின் வீட்டுக்குள் அமர்த்தி ஆண்கள் கத்தி கோடரியோடு வீட்டைச் சுற்றிப் பாதுகாத்து நின்றனர்.

உச்சக்கட்ட சப்தங்கள் முடிந்தது. ஒருவாறாக துப்பாக்கி வேட்டுக்களும் அடங்கி கூக்குரல்கள் குறைந்து கொண்டிருந்தன. மாணிக்க ராசாவும் அவனது சகாக்களும் பின்வாங்கி ஓடிவிட்டதாக யாரோ ஒருவன் சொல்லிச் சென்றான்.

நிஸார் தனது சகாக்களுடன் கம்பீரமாய் வந்தான். தனது நீளக்கத்தியில் உறைந்திருந்த இரத்தத்தை ஆமினாவின் வீட்டுக் கிணற்றில் கழுவினான். மாணிக்க ராசாவின் துப்பாக்கியைப் பறித்ததாகவும் அவனது சகாக்கள் ஐவரை வெட்டிக் கொன்றதாகவும் மாணிக்க ராசா தப்பித்து ஓடிவிட்டதாகவும் வீராவேசமாய் முழங்கினான். ஆமினாவின் தாயார் தனது பொக்கை வாயால் "எண்ட ராசா சரியான நேரத்துல நீ போகலண்டா காபிர்கள் ஊரையே அழித்திருப்பானுகள்" அவனைப் புகழ்ந்து கரம் பிடித்து முத்தமிட்டாள். நிஸார் கர்வத்துடன் கையைத் துடைத்துக் கொண்டான். அங்கிருந்த குமரிப் பெண்கள் நிஸாரின் வீரம் பற்றி புகழ்ந்து பேசினர். அவனது காலில் பட்டிருந்த காயம் ஒன்றிற்கு அந்த இரவிலும் குப்பிலாம்பு ஒளியில் கையாந்தவரை பிடுங்கி மருதோன்றி அணிந்த கைகள் மருந்து கட்டின.

நிஸாரைக் கண்டுகொள்ளாத லைலா முதன்முறையாக அவனைப்பார்த்து வெட்கப்பட்டாள். தலை குனிந்து கால் விரலால் வட்டம் வரைந்தாள். முந்தானையை சரி செய்தவாறு கடைக் கண்ணால் பாரத்து சிரித்தாள். நிஸாரின் உடம்பிலிருந்த உரோமங்கள் கத்தியாய் குத்திக் கொண்டு நின்றன. நிஸார் சுதாகரித்துக் கொண்டான்.

விடிந்தது எரிந்த சாம்பலுக்குள் உடைந்த முன் பல்லை வைத்தே அப்பாவி மஃமூது காக்காவின் உடல் இனங் காணப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது. அன்றில் ஊரே கண்ணீராகிக் கிடந்தது.

என்றாலும் நிஸாரின் பெருமை ஊரெல்லாம் பரவிற்று. நிஸாரின் வீர தீரச் செயலை ஊரே மெச்சின. குமரிப் பெண்கள் நிஸாரை மணம் முடிக்க ஏங்கினர். பலரின் தொழுகைக்குப் பிந்திய பிரார்த்தனையில் நிஸார் இருந்தான். நிஸார் ஊரின் பாதுகாவலனாகவும் தலைவனாகவும் மதிக்கப்பட்டான்.

பலரும் வாயில் விரல் வைத்து வியக்க நிஸார் தொடர்ந்தும் தனது நீளக் கத்தியை ஆமினாவின் கிணற்றில் கழுவிச் செல்லச் செல்ல ஊரிலிருந்த மாடாடுகளும் குறைந்து கொண்டே சென்றதை அங்கிருந்த யாரும் கண்டு கொள்ளவேயில்லை.

*முற்றும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் - முஸ்லிம் அரசியல் இணக்கமும் யதார்த்தமான தீர்வும்

இது ஒரு சர்ச்சைக்குரிய கட்டுரை யாகும். தமிழ், முஸ்லிம் இரு தரப்புக்களையும் நோக்கி சில நியாயமான அரசியல் கேள்விகளை எழுப்புவதை நோக்கமாகக் கொண்டது. இரு தரப்பினாலும் பேசப்படாது விடப்பட்ட சில கசப்பான விடயங்களை வெளிப்படையாகத் தொட்டுச் செல்லும் நோக்கிலும், இறுதியில் தமிழ்-முஸ்லிம் அரசியல் நல்லுறவை ஏற்படுத்துவதில் ஒரு படிக்கல்லாக அமையும் என்ற எதிர்பார்ப்பிலும் எழுதப்பட்டதாகும்.

அரசியல் பேச்சுவார்த்தையின் வளர்ச்சிப் போக்கில் அடுத்தடுத்த கட்டங்களில் அதிகாரப் பங்கீடு தொடர்பான விடயங்கள் பிரதான அம்சமாக விவாதிக்கப்படுவதாக வைத்துக் கொள்வோம். அப்போது. தனித்தரப்பாக கலந்து கொள்ளவிருக்கும் முஸ்லிம்தரப்பானது என்ன வகையான அரசியல் நிலைப்பாட்டினை தமது மக்களின் ஒருமித்த அரசியல் அபிலாஷைகளாக அங்கு முன்வைக்கப் போகின்றது? அதற்காக இதுவரை எந்தளவிற்கு அரசியல் தயாரிப்புகளை முஸ்லிம் அரசியல் சக்திகள் மேற்கொண்டுள்ளன? இவ்வாறான தயாரிப்புக்களை முழு அளவில் மேற்கொள்வதற்கு இன்னும் எவ்வளவு தூரம் கடினமான பயணம் மேற்கொள்ள வேண்டியுள்ளது? என்பன நமக்கு முன்னுள்ள வினாக்களாகும்.

வடக்கு-கிழக்கு முஸ்லிம் பாராளுமன்றப் பிரதிநிதிகளின் ஒன்றியம் அமைக்கப்பட்டுள்ளமை ஒரு முன்னேற்றகரமான விடயமாகும். ஆனால் அதில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களோ எதிரும் புதிருமான அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்டுள்ள கட்சிகளிலும் அதன் அணிகளிலும் இருப்பவர்கள். இந்த ஒன்றியத்திலுள்ள முஸ்லிம் எம்பிக்கள் அனைவரும் பொதுவான அரசியல் நிலைப்பாட்டில் இருப்பதாக சொல்லளவில் காட்டிக் கொண்டாலும் செயலளவில் பல துருவங்களாகவே உள்ளனர் என்பது சம்பந்தப்பட்ட மக்களுக்குத் தெரியும்.

ஐ.தே.கட்சியை கிழக்கு மாகாணத்தில் பலப்படுத்துவதற்காக சுமார் 10 இற்கு மேற்பட்ட ஐதேகட்சி அரசாங்க அமைச்சர்களைக் கொண்ட பட்டாளத்தை ஐதேகட்சியைச் சேர்ந்த கிழக்கு மாகாண முஸ்லிம் பிரதிநிதிகள், அம்பாறைக்கு அழைத்துச் சென்று திரும்பியதைப் பார்க்கும்போது, இந்த ஐதேக கட்சியின் கிழக்குமாகாண முஸ்லிம் எம்பிக்கள் முஸ்லிம் தனித்தரப்புக் குழுவில் இடம் பெற்றால் அரசியல் பேச்சுவார்த்தையில் எத்தரப்பிற்கு விசுவாசமாகச் செயற்படுவார்கள் என்று, சொல்லத் தேவையில்லை.

முஸ்லிம் கொங்கிரஸ் கட்சியின் ஹக்கீம் அணி ரணிலுக்கு விசுவாசமாகச் செயற்படுகின்றது. அதாவுல்லா, நூர்தீன் மசூர், ஹப்ரத் அணியினர் முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளில் அதிக அக்கறை கொண்டவர்கள் போல தம்மை வெளிப்படுத்தினாலும் அவ்வணியும் மேற்படி இரண்டு சிங்களப் பேரினவாதக் கட்சிகளுடனும் நெருக்கமான உறவினைப் பேணி வருகின்றது. ஒட்டு மொத்தத்தில் முஸ்லிம் கொங்கிரஸ் ஐதேமுன்னணி அரசாங்கத்தின் பங்காளியாக உள்ளது. பேரியல் தலைமை தாங்கும் நுஆ சந்திரிகா அணியுடன் இணைந்து செயற்படுகின்றது.

இவ்வாறான சூழலில் சமஷ்டி ஆட்சிமுறைமை மற்றும் முழு அளவிலான அதிகாரப் பங்கீடு பற்றிய சர்ச்சைக்குரிய பேச்சுவார்த்தைகளின் போது, முஸ்லிம்கள் தனித்தரப்பாக பேச்சுவார்த்தை மேசையில் அமர்கின்றார்கள் என்று வைத்துக் கொண்டால், நிலைமை என்னவாகும்?

தீர்மானகரமான அரசியல் விடயங்கள் விவாதத்திற்கு எடுக்கப்படும்போது அரசுத்தரப்பு, முஸ்லிம் தரப்பு ஆகிய இரு தரப்புகள் ஒருவகை நிலைப்பாட்டிற்கும், விடுதலைப் புலிகள் தரப்பு வேறுவகை நிலைப்பாட்டின் பக்கமும் போய்விடும் எனின், சமனிலை அரசுபக்கம் சாய்வதனால், தமிழ்த் தேசிய அபிலாசைகள் குழிதோண்டிப் புதைக்கப்படும் நிலையை நோக்கி அரசியல் பேச்சுவார்த்தையின் போக்கு அமைந்து விடுவதற்கு அதிகம் வாய்ப்புண்டு என்று தமிழ்த்தரப்பு அஞ்சுவதில் நியாயம் இருக்கின்றது.

இதுபோன்ற ஆபத்தான நிலைமையை இட்டு, விடுதலைப் புலிகளும், தமிழ்தரப்பும் தமிழ்த் தேசிய நலன்பாட்பட்டு, மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பது நியாயமானதே. மறுபுறம், விடுதலைப் புலிகள் வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளை நிராகரிக்கின்ற, முஸ்லிம்களை ஓரங்கட்டுகின்ற, திட்டமிட்டு அடக்குமுறைகளுக்கு உள்ளாக்குகின்ற, நிலைப்பாட்டிலும் செயற்பாட்டிலும் தொடர்ந்தும் இருப்பதானது அரசியல் பகைமையை மேலும் மோசமடையச் செய்யும். நிலவும் முரண்பாடுகளையும் சந்தேகங்களையும் மேலும் உக்கிரப்படுத்தச் செய்யும். முஸ்லிம் தலைமைகள் சிறிலங்கா அரசுதரப்பினை நோக்கி நெருங்கிச் செயற்படுவதை விடுதலைப் புலிகளின் போக்குகள் மேலும் தீவிரப்படுத்தி விடும். கடந்து வந்த வரலாறு இதற்குச் சான்று.



ஜுனைதீன்

முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்குபற்றுவதை ஒட்டுமொத்தமாக நிராகரிக்கும் போக்கினை தமிழ்த்தரப்பு உடனடியாகக் கைவிட வேண்டும். பரந்துபட்ட முஸ்லிம்கள் தேசிய எழுச்சி பெற்று, ஓரணி திரண்டு முஸ்லிம் தேசிய எழுச்சி வடிவில், தமது நியாயமான அபிலாசைகளை ஜனநாயகபூர்வமாகவும் வெளிப்படையாகவும் முன் வைத்ததை கவனத்தில் எடுக்க வேண்டும். ஆளுக்கொரு நியாயம் இருத்தல் ஜனநாயக விரோதமாகும். இது அரசியல் சந்தர்ப்பவாதத் தன்மை கொண்டது. ஒரு தரப்பின் ஜனநாயக உரிமைகளை மறுத்து விட்டு, தேசிய முரண்பாடுகளுக்குத் தீர்வுகாண முடியாதென்பது நமக்கு முன்னுள்ள வரலாறாகும். எனவே, முஸ்லிம்கள் பேச்சுவார்த்தையில் தனித்தரப்பாக கலந்து கொள்வது குறித்த அச்சங்களையும் சந்தேகங்களையும் தமிழ்த்தரப்பு முஸ்லிம் அரசியல் சக்திகளுடன் வெளிப்படையாகப் பேச வேண்டும். அத்துடன் முஸ்லிம்கள் தொடர்பான தமது கடந்தகாலத் தவறுகளை முழுமையான சுயவிமர்சனத்திற்கு உள்ளாக்க வேண்டும். அத்தகைய அரசியல் பொறுப்புணர்ச்சி மிக்க பாத்திரம் இன்று தமிழ்த்தரப்பிற்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

இவ்வாறான அரசியல் கடப்பாடுகள் இருந்தும், தமிழ்த்தரப்பு மேலாதிக்கச் சிந்தாந்தம் மற்றும் ஆதிக்க அரசியல் போக்குகள் காரணமாக இன்றுவரை ஜனநாயகபூர்வமாக எந்தவித காத்திரமான நடவடிக்கைகளையும் எடுக்க முன்வரவில்லை. இதுபற்றி விடுதலைப் புலிகளுக்கு விளங்கப்படுத்தவும் அழுத்தம் கொடுக்கவும் தமிழ்த்தரப்பில் பெரும்பாலும் எவருமில்லை என்ற நிலைதான் காணப்படுகின்றது. ஆங்காங்கு சண்டேலீடர் பத்திரிகையில் ஜெயராஜ், ஈழநாடு பத்திரிகையில் சஞ்சீவ், புலம்பெயர் நாடுகளில் இருந்து வெளிவரும் சில சஞ்சிகைகள் போன்று ஒன்றிரண்டு குரல்களும், இதைவிட, கடந்த சில வருடங்களாக சரிநிகர் பத்திரிகை மற்றும் தமிழீழ மக்கள் கட்சி எனும் அமைப்பும் முஸ்லிம் மக்கள் தொடர்பாக ஜனநாயகபூர்வமான நிலைப்பாடுகளை வெளியிட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

விடுதலைப் புலிகளின் தவறுகளை அரசியல் பண்புடன் சுட்டிக்காட்ட எவரும் முன்வருவதாகத் தெரியவில்லை. விடுதலைப் புலிகளின் எதேச்சாதிகார, ஜனநாயக மறுப்புப் போக்குக் குறித்த அச்சம் இன்னும் தமிழ்ச் சூழலில் அப்படியே நிலைத்திருப்பது இதற்கு காரணமாக அமைகின்றது. விடுதலைப் புலிகளை ஏகபிரதிநிதிகளாக்கி விட்டால் தமது பொறுப்புகள் முடிந்து விட்டதாக தமிழ்த்தரப்பில் பலரும் இன்று ஒதுங்கி நிற்கின்றனர். இன்றைய பேச்சுவார்த்தை காலகட்டத்திலும் கூட அவ்வாறு தமிழ் ஜனநாயக சக்திகள் வறுமையாக இருப்பது அரசியல் ரீதியிலும் சமூக ரீதியிலும் மிகவும் ஆபத்தான போக்காகும். தமிழ்த்தரப்பிற்கு நீண்டகாலப் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியதாகும்.

தமிழ்த் தினசரிகளில், சில வகைக் கட்டுரைகள் சொந்தப் பெயர்களிலும் புனை பெயர்களிலும் இப்போது வெளிவரத் தொடங்கியுள்ளன. தமிழ்-முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்துவது போல கட்டுரைத் தலைப்புக்களை இட்டு விட்டு, முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளைச் சிறுமைப்படுத்துவது. தமிழ்த்தரப்பு தவறுகள் குறித்து கடுமையான மௌனம் சாதிப்பது. அல்லது சுற்றி வளைத்து நியாயப்படுத்துவது. பிரச்சனையைத் தொடக்கி வைத்தது முஸ்லிம்கள்தான் என்ற தொனியில் புனைவுகளை உருவாக்குவது ஆகிய போக்குகளை வெளிப்படுத்தும் கட்டுரைகள் அதிகம் வரத் தொடங்கியுள்ளன. உண்மையில் இவை தமிழ்-முஸ்லிம் அரசியல், சமூக முரண்பாட்டை மேலும் தீவிரப்படுத்தவே வழிவகுக்கின்றது. வெறுப்புக்களை மேலும் ஆழப்படுத்துகின்றது.

மறுபுறம், ஐதேகட்சி, பொ.ஐ முன்னணி ஆகிய கட்சிகளில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் எம்பிக்கள், வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் அதிகாரம் தொடர்பான விடயங்கள் பற்றிப் பேசும் போது, வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதிகள் கூட்டிணைந்து உருவாக்கும் குழுவொன்று தனித்தரப்பாகப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதை கொள்கை அடிப்படையில் ஆதரிக்க வேண்டும். அதற்கான நெருக்குதல்களை தமது கட்சித் தலைமைகளுக்குக் கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலமாக, வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் அபிலாசைகளை தாம் மதித்துச் செயற்படுவதை இந்த முஸ்லிம் எம்பிக்கள் நிரூபிக்க வேண்டும். வெறும் பத்திரிகை அறிக்கைகள் மக்கள் மத்தியில் கணக்கெடுக்கப்படமாட்டாது என்பதைப் புரிந்து கொள்ளல் வேண்டும்.

அதேசமயம், ஐதேகட்சிக்கு அல்லது பொதுசன முன்னணிக்கு வாக்களித்த முஸ்லிம்களையும் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முஸ்லிம் எம்பிக்களையும் தேசியத் துரோகிகள் என்று சொல்வதற்கு முஸ்லிம் கொங்கிரசின் இன்றைய தலைமைக்கு எந்த யோக்கியதையும் கிடையாது. தாம் துரோக நிலைக்கு சரிந்து விட்டதை மறைக்கும் தந்திரமாகத்தான் இவ்வாறான ஆவேசக் குற்றச்சாட்டுக்களைக் கொள்ள வேண்டும். முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளை வென்று கொள்ளும் நோக்குடனும், முஸ்லிம் தரப்பினை அரசியல் ரீதியாகப் பலப்படுத்துவதற்கும் உடனடிச் செயற்பாடாக இருபெரும் சிங்களக் கட்சிக்கு ஆதரவாகச் செயற்படும் வடக்கு கிழக்கு முஸ்லிம்களையும் அரசியல் சக்திகளையும் தமது பக்கம் வென்றெடுக்கும் அரசியல் முதிர்ச்சியுடனும், பரந்த மனப்பான்மையுடனும் முஸ்லிம்கொங்கிரஸ் தலைமைகளின் இரு பிரிவுகளும் உடனடியாகச் செயலில் இறங்கியாக வேண்டும். வடக்கு கிழக்குப் பிராந்தியத்தை ஆள்புல எல்லையாகக் கொள்ளும் ஒரு சமஸ்டி அமைப்பு முறைமையை உள்ளடக்கும் அரசமைப்பு அல்லது அதனையொத்த அரசமைப்பு ஏற்படுத்தப்படவுள்ளது என வைத்துக் கொள்வோம். இந்த ஆள்புல எல்லைக்குள் வரலாற்று பூர்வமாக அமையும் முஸ்லிம் மக்களின் அரசியல் பிரதிநிதிகளும், மக்கள்நலன் நின்று செயற்படும் முஸ்லிம் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் கொண்ட மக்கள் அங்கீகாரம் பெற்ற ஒரு விசேடகுழுவே முஸ்லிம் தனித்தரப்பாக அரசியல் பேச்சுக்களில் பங்கு கொள்ள வேண்டும். இது முஸ்லிம்களின் தரப்பில் கறாரான முன்நிபந்தனையாக இருக்க வேண்டும். இதனையே முஸ்லிம் மக்கள் அனைவரும் தொடர்ச்சியாக வலியுறுத்த வேண்டும்.

மேற்படி விடயங்களையும் வினாக்களையும் சம்பந்தப்பட்ட தரப்புகள் ஆய்விற்கு எடுத்து நியாயமான நேர்மையான முயற்சிகளை எடுக்காது போனால், உண்மையில் இலாபம் அடையப் போவது மறுபடியும் சிங்கள மேலாதிக்கமும் சிங்கள இனவாதமும் அவர்களின் எஜமானர்களாக இருந்து வரும் சர்வதேச ஆதிக்க சக்திகளும்தான்.

---

எமக்கெதிராக
செய்வதெல்லாம் செய்துவிட்டு
அவற்றின் வடுக்களை
அழிப்பதற்கும் ஆற்றுவதற்கும்
எம்மையே நீ பயன்படுத்துகிறாயா?

எம் மனங்களில்
எம் வரலாற்றில்
நீ படியவைத்த கறைகளை
தெரிந்தும் தெரியாமலும்
அழித்து வருகிறோம்

இந்த இடத்தில் நீ
கெட்டிக்காரன்
மஹா தந்திரசாலி,
புத்திசாலியும் தான்



தயாளமும் காட்டி உண்டியும் கொடுத்து
நமது மொழி, பிரதேசம்,
ஒற்றுமை பற்றிக் கதைத்து
நெகிழ வைத்து
அந்த நெகிழ்வில் மனம் கசிந்து

படிந்திருந்த கறை நீக்கி
நல்ல சித்திரம் தீட்டிக் கொள்கின்றனர்.
நமது தூரிகைகளே கோடரிக் காம்பாகி.

அழித்து வருகிறோம்
அழித்து வருகிறோம்

(பாரு, மனசை, இப்ப வெள்ள)

இதைவிட வேறென்ன
துரோகமிருக்கு
நாமே எமக்குப் புரிய?

## உனது பிரச்சாரகனாகி நாமே இழைக்கும் துரோகம்!

கே. முனாஸ்


---

# புகை பிடித்தலற்ற உலகை நோக்கி.....!

(2)

இத்தாவரம் பேய் பிசாசுகளையும், கெட்ட ஆவிகளையும் விரட்டுகின்றதென்றும், நோய்களைக் குணப்படுத்துகின்றதென்றும் அவர்கள் நம்பி வந்தனர். மட்டுமல்லாமல் இத்தாவரத்தை மெல்லும் போதும், கருகிக் கொண்டிருக்கும் அதன் புகையை முகரும் போதும் உடம்பில் ஒரு வகை தெம்பு ஏற்படுவதையும் அவர்கள் உணர்ந்தனர். இத்தாவரம் Tobacco என்ற பெயரிலேயே அவர்கள் மத்தியில் அறிமுகமாகியிருந்தது. இது செவ்விந்தியப் பதமாகும்.

ஜீன் நிகொட் (JEAN NICOT) என்பவர் பிரான்ஸ் நாட்டின் தூதுவராக போர்த்துக்கல்லில் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளை அங்கே காணப்பட்ட சில Tobacco தாவர இலைகளை,



அக்காலை பிரான்ஸின் அரசியாக விளங்கிய கதரின் டி மெடிசி (Catherine de medici) என்பவருக்கு அடிக்கடி ஏற்பட்டுவந்த தலைவலியை சொஸ்த்தப்படுத்த உபயோகிப்பதற்காக அனுப்பி வைத்தார். இத்தூதுவரின் கைங்கரியத்தைக் கௌரவிக்கும் முகமாக அவரது பெயரை இப்புகையிலையில் காணப்படும் சக்திமிக்க மூலப்பொருளுக்கு இடப்பட்டு அது நிகொட்டின் (Nicotine) என்று பெயர் பெற்றதாக வரலாறு உண்டு.

புரதான காலத்தில் புகையிலைக்குழாய் (Tobacco Pipe) உம் புகையிலை முகர்வதற்கு பயன்படுத்தப்பட்டது. 16ம் நூற்றாண்டின் செய்யப்பட்ட இத்தகைய புகையிலைக் குழாயொன்று இன்னும் ஜேர்மன் நாட்டு பிரடஸ் டீக் நூதனசாலையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. நான்கு மீற்றர் நீளம்கொண்ட இக்குழாய் 3350 கிராம் இடைப் புகையிலையை வைக்க முடியுமானதாகும்.

கொலம்பஸ் அமெரிக்காவலிருந்து திரும்பி வரும்போது தன்னுடன் கொண்டுவந்த பொருட்களுள் புகையிலைப் பொடியும் அடங்கும். செவ்விந்தியர்கள் இப்பொடியை மூக்கிலிட்டு அதன் மூலம் உடற்தெம்பும் பெற்றுவந்தனர். ஸ்பெயினுக்கு இப்பொடி அறிமுகமானபோது அங்கே அதற்கு கிடைத்த மகத்தான சந்தை வாய்ப்பே ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் கீழைத்தேய நாடுகளிலும் அது அறிமுகமாவதற்குக் காரணமாய் அமைந்தது. 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகள் இப்பொடியின் பொற்காலம் என போற்றப்படுகின்றன. இக்காலப் பிரிவில் பொடியைப் பாதுகாப்பதற்கென தந்தத்தினாலும் சிப்பியினாலும் சிலவேளை தங்கத்தினாலும் பெட்டிகள் செய்யப்பட்டன. 18ஆம் நூற்றாண்டில் ரஷ்ய மன்னர் பிரெட் ரீக் என்பவருக்கு செய்யப்பட்ட இத்தகைய தங்கத்தினாலான பெட்டியொன்று அண்மையில் ஐந்து லட்சம் ஸ்ரேலிங் பவுனிற்கு விற்கப்பட்டது. உஸ்மானிய ஆட்சிக்காலத்தில் துருக்கியினூடாக புகைப்பழக்கம் இஸ்லாமிய உலகிற்கு அறிமுகமானது.

### புகையிலையின் வகைகள்

புகையிலையில் பல வகைகள் உள்ளன. அதிக பாவனையும், பிரபல்யம் கூடியதும் Nicotiana Tobacco என்ற இனமாகும். அதேவேளை மெக்ஸிகோவில் உற்பத்தியாகின்ற ஒருவகை புகையிலையும், பீரு நாட்டில் வளர்கின்ற இரு இனங்களும் சீனாவில் உற்பத்தியாகின்ற வேறொரு இனமும், இன்னும் பல இனங்களும் உள்ளன.

### புகையிலை உற்பத்தி

ஒவ்வொரு வருடமும் சுமார் 6 பில்லியன் கிலோகிராம் புகையிலை சர்வதேச ரீதியாக உற்பத்தி செய்யப்படுகின்றது. உலகின் கணிசமான நாடுகளில் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக புகையிலை விளங்குவது ஈண்டு குறிப்பிடத்தக்கது. புகையிலையை உற்பத்தி செய்யும் நாடுகள் அதனை ஏற்றுமதி செய்வதன் மூலமாகவும் ஏனைய நாடுகள் அதனை இறக்குமதி செய்வதற்கு விதிக்கின்ற சுங்க வரி மூலமாகவும் தமது பொருளாதாரத்தை வளப்படுத்திக் கொள்கின்றன. அமெரிக்கா, சீனா, ரஷ்யா, இந்தோனேசியா, பிரேசில், துருக்கி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் புகையிலை உற்பத்தியில் முன்னணி வகிக்கின்றன.

எச்.அப்துல் நாசர் (ரஹ்மானி)
பொதுச் செயலாளர், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை.

### புகையிலை மூலம் உற்பத்தி செய்யப்படும் சிகரட், சுருட்டு, பீடி

சிகரட் :

16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஸ்பெயினில் சிகரட் முதன்முறையாக செய்யப்பட்டது. இதனை அந்நாட்டுப் பிச்சைக்காரன் ஒருவனே முதன் முதலில் செய்தவனாவான். Cigarette எனும் பதம் கூட Cigarito எனும் ஸ்பானிய பதத்திலிருந்தே தோன்றியது. கி. பி. 1880ஆம் ஆண்டிலேயே சிகரட் செய்வதற்கான இயந்திரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக அமெரிக்கவைச் சேர்ந்த ஜேம்ஸ் போன்ஸக் என்பார் குறிப்பிடுகின்றார். அன்று முதல் சிகரட் பாவனை உலகம் எங்கும் பரவ ஆரம்பித்தது. கிரீமியா தீபகற்பத்தில் 19 ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற யுத்தமொன்றில் பங்குகொண்ட பிரான்ஸ் துருக்கிப் படையினர்கள் சிகரட் புகைப்பதைக் கண்டு அவர்களோடு சேர்ந்திருந்த பிரித்தானியப் படையினர் தாமும் சிகரட்களை அவர்களிடமிருந்து பெற்று தமது நாட்டிற்குக் கொண்டுபோய்ச் சேர்த்தனர். இதன் மூலம் பிரித்தானியாவில் சிகரட் அறிமுகமானது. இன்றைய மொத்த உலக சனத்தொகையில் ஒரு மனிதனுக்கு சுமார் இரண்டு சிகரட் வீதம் தினசரி சிகரட் உற்பத்தி தற்போது நடைபெறுகின்றது.

(இன்னும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களுக்கென்று சுதந்திர ஊடகங்கள் உருவாக்கப்படாமலிருப்பது வேதனைக்குரியது!

ஊடகங்களின் தேவையும் சேவையும் பல வழிகளில் மக்களுக்கு இன்றியமையாததாகவுள்ளது. ஒரு சமூகத்தின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களும், அச்சமூகம் சார்ந்த பிரச்சினைகளும் அபிலாஷைகளும் இதர சமூகங்களைச் சென்றடைவதற்கும் அவை தேசிய, சர்வதேச மயப்படுத்தப்படுவதிலும் ஊடகங்கள் பெரும் பங்கினை வகிப்பதை எவரும் மறுப்பதற்கில்லை. இவ்வாறே ஒரு தனி நபரின் சுதந்திரமான கருத்துக்களை வெளிப்படுத்துவதிலும், கலை ஆற்றல்களை வெளிக்காட்டுவதிலும், இலத்திரனியல் அச்சு ஊடகங்கள் தமக்குரிய பங்கினை வழங்கி வருகின்றன.

இலங்கையில் பல தொலைக்காட்சி, வானொலி அலைவரிசைகள் செயல்ப ட்டுக் கொண்டிருக்கின் றன. பல தினசரி, வாராந்த, மாதா ந்த பத்திரிகைகளும் வெளிவருகின் றன. இருந்தபோதிலும் ஓரிரு தொலைக்காட்சி, வானொலி அலைவரிசைகளும் பத்திரிகைகளும் எந்த சமூகத்தைச் சார்ந்தவர்களால் உருவாக்கப்பட்டதோ அச்சமூகத்தின் கலை, கலாசார விடயங்களை வெளிக்காட்டுவதிலும் அம்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெளியுலகிற்கு வெளிச்சம்போட்டுக் காட்டுவதிலும் காட்டுகின்ற கரிசனை, இதர சமூகங்களினது விடயங்களை ஒலி ஒளி பரப்புச் செய்வதற்கும், பிரசுரிப்பதற்கும் முன்வராததைக் காணக்கூடியதா கவுள்ளது. இவற்றினால் அத்த கைய இலத்திரனியல் அச்சு ஊடகங்கள் தமது ஊடகத்து றையின் தார்மீகப் பொறுப்பை மறந்து செயற்படுவதாகவே கருத முடிகின்றது. இந்நிலையிலேதான் முஸ்லிம் சமூகத்திற்கான சுதந்திரமான பக்கச்சார்பற்ற ஒளி பரப்பு அலைவரிசைகளும், அச்சு ஊடகங்களும், தினசரிப் பத்திரிகைகளும் உருவாக்கப்படுவது சமுதாயத்தின் பெயரில் காலத்தின் அதிமுக்கிய தேவையாக கருதவேண்டியுள்ளது.

இந்நாட்டில் முஸ்லிம்கள் பரந்து வாழ்கின்றனர். ஒரு முஸ்லிம் பிரதேசத்தின் குறைபாடுகள், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இதர பிரதேசத்து முஸ்லிம்களையோ, பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளையோ, அரசியல் தலைவர்களையோ சென்றடைவதில்லை. கடந்த காலங்களில் வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அட்டூழியங்களும் அநியாயங்களும் அவற்றினால் அவர்களின் உயிர், உடமைகளுக்கு எற்பட்ட இழப்புக்கள் வட கிழக்கிற்கு வெளியே வாழ்கின்ற முஸ்லிம்கள் ஏன்? வட கிழக்கிற்குள்ளேயேயுள்ள சில முஸ்லிம் பிரதேசங்களில் வாழுகின்ற முஸ்லிம்கள் கூட சரியான தரவுகளோடு அறியாதவர்களாகவே உள்ளனர். இதற்கான காரணங்களில் ஒன்றாக முஸ்லிம் மக்கள் மத்தியிலிருந்து சுதந்திரமான ( குறைந்தபட்சம் ஒரு தினசரி பத்திரிகை ) ஊடகங்கள் உருவாக்கப்படாமலிருப்பதே என்பதை எல்லோரும் உணர்ந்துள்ளனர். அவ்வாறு உணர்ந்தும் கூட இன்றைய காலகட்டத்தில் இத்தகைய நிலைமையினை மாற்றியமைப்பதற்கு எவரும் முன்வருவதாகத் தெரியவில்லை. அவ்வாறு முன்வந்த போதிலும் அவற்றை நடைமுறை ப்படுத்துவதற்குரிய வழிவகைகளை மேற்கொள்வது நடைமுறைச் சாத்தியமற்றது என நினைத்து அச்சிந்தனைகள் மறக்கப்ப ட்டுவிடுகின்றன. இத்தகைய சிந்த னை பணம் படைத்தவர்களின் மத்தியில் முளைவிட்டாலும் அவற்றினை நடைமுறைப்படுத்து வதற்கு அவர்கள் முன்வருவதில்லை.

முஸ்லிம்களுக்கென்று சுதந்திரமான தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை ஊடகங்கள் இல்லாத குறைபாட்டினாலேயே முஸ்லிம் மக்கள் தொடர்பான இன்னோரென்ன பிரச்சினைகள் தேசிய மயப்படுத்தப்படாமலும் சர்வதேனுமயப்படுத்தப்படாமலும் தொடர்ந்தும் இருட்டடிப்புச் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றின் காரணமாக உலகளாவிய ரீதியில் இலங்கையில் வாழுகின்ற முஸ்லிம்கள் எத்தகைய பிரச்சினைகளும் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றதொரு தவறான தோற்றப்பாடு நிலவுகிறது. குறிப்பாக அரபுலகும் மேற்குலகிலுள்ள முஸ்லிம்களும் இந்நாட்டிலுள்ள முஸ்லிம்களின் பிரச்சினைகளை அறியாதவர்களாகவுள்ளனர். இருந்தபோதிலும் சில இயக்கங்கள் இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் தொடர்பான உண்மைத் தகவல்களை அவ்வப்போது வெளியுலகிற்கு வெிளப்படுத்திக்காட்டுவதில் முனைப்புடன் செயற்பட்டுவருவதை குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

எமது இளம் சந்ததியினர் பிற கலாசார பண்பாடுகளை இதர இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக கேட்டும் பாார்த்தும் பழகி அவைகளைத் தமது கலாசாரங்களாக மாற்றியமைத்துக் கொண்டு அவற்றினால் சீரழியும் துர்ப்பாக்கிய நிலைமையை இன்று குறிப்பாக நகரப்புறங்களில் காணக்கூடியதாவுள்ளது. அண்மைக்காலங்களில் நிகழும் சிற்சில சம்பவங்கள் இவற்றிற்கு சான்று பகிர்கின்றன. இவற்றிற்கோர் உதாரணமாக ஒரு இஸ்லாமிய இளைஞன் தமது பெற்றோரின் சம்மதத்துடன் அவர்கள் முன்னிலையில் அன்னிய வழிபாட்டுத் தளமொன்றில் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாத பெண்ணை திருமணம் செய்துகொண்ட நிகழ்வானது மிகவும் வேதனையையும் அதே நேரத்தில் சிந்திக்கவும் வைத்துள்ளது. இத்தகைய நிலைமைக்கு எமது இளைஞர், யுவதிகள் தள்ளப்பட்டுள்ளதானது எமது கலாசாரங்களும் பண்பாடுகளும் சரிவர அவர்களுக்கு தெளிவுபடுத்தப்படாமலிருப்பதேயாகும். எமது கலாசாரங்கள், பண்பாடுகளை தெளிவுபடுத்துவதற்கான நிகழ்ச்சிகளை ஒலி, ஒளி பரப்புவதற்கு இன்னும் எமக்கான சுதந்திரமான இலத்திரனியல் ஊடகங்கள் தோற்றுவிக்கப்படாமல் இருப்பதை குறிப்பிட்டுக்காட்டாமல் இருக்கமுடியாது.

முஸ்லிம்களின் அரசியல் உரிமைகள் குறித்தோ, வேறு விடயங்கள் தொடர்பாகவோ, அரசியல் தலைவர்களாலும் புத்திஜீவிகளாலும் ஏனைய அமைப்புக்களாலும் முன்வைக்கப்படும் நியாயமான கருத்துக்களும், கோரிக்கைகளும் வெளிப்படுத்தப்படாமல் மூடி மறைக்கப்படுகின்றன. ஆனால் இந்நாட்டில் வாழும் ஏனைய சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அம்மக்களுக்குள்ளான தேவைகள், குறைபாடுகள் அச்சமூதாயத் தலைவர்களாலோ, அமைப்புக்களாலோ முன்மொழியப்படும்போது அவைகள் அச்சமூகங்கள் சார்ந்த அச்சு இலத்திரனியல் ஊடகங்களால் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டு அவை தேசிய, சர்வதேசமயப்படுத்தப்பட்டு அவற்றிற்கான தீர்வுகளைக் காணக்கூடிய வாய்ப்புக்களும் எட்டப்படுகினறன.

முஸ்லிம் சமூதாயத்தில் பல தொழில் அதிபர்களும், கல்விமான்களும், சிந்தனையாளர்களும், ஊடகத்துறையில் ஈடுபாடு கொண்டவர்களும் இருந்தும் கூட இது வரை காலமும் எமக்கென்று சுதந்திர பக்கச்சார்பற்ற இலத்திரனியல் ஊடகங்களோ, தினசரி பதத்திரிகைளோ உருவாக்கப்படாமலிருப்பதும் இவற்றிக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாமலிருப்பதுவும் வேதனைக்குரிய விடயங்களாகும்.

முஸ்லிம்கள் சார்ந்த ஓரிரு வாராந்த, மாதாந்த பத்திரிகைகள் சமுதாயத்திற்கான தமது பங்களிப்பை செய்து வருகின்றன. இருந்த போதிலும் முஸ்லிம் பிரதேசங்களில் அன்றாடம் நிகழும் சம்பங்களை சரிவர அறிந்து கொள்ளமுடியாமல் இருப்பதுவும், சில சம்பவங்கள் ஓரிரு ஊடகங்களில் திரிவு படுத்திக் கூறப்படுவதுவும் பெரும் கவலைக்குரிய விடயங்களாகும். இந்நிலைமை தீர்த்து வைக்கப்பட வேண்டும். சுதந்திரமாக பக்கச்சார்பற்ற நிலையில் வெளிவரும் வாராந்த,

**எம்.எம்.ஏ. ஸமட், கல்முனை**

மாதாந்த பத்திரிகைகளுக்கு செல்வந்தர்களும் ஏனையவர்களும் தமது காத்திரமான பங்களிப்பைச் செய்வார்களேயானால் அப்பத்திரிகைகளை நாளாந்தப் பத்திரிகைகளாக மாற்றியமைக்க இயலும். அவற்றின் மூலம் உண்மை நிலைகளை அன்றாடம் அறியக் கூடிய வாய்ப்பினையும் வசதியினையும் எமது மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க முடியும். அதுமாத்திரமின்றி இத்துறைசார்ந்த பல இளைஞர் யுவதிகள் வேலைவாய்ப்புக்களைக் பெற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பமும் இதன் மூலம் ஏற்படும்.

சமுதாயத்தின் நலன் கருதியும் எமது சந்ததியினர் இஸ்லாமிய கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களோடு எதிர்கால வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் சுதந்திரமான இலத்திரனியல் ஊடகங்கள் உருவாக்கப்படவும் அச்சு ஊடகங்கள் வெளிவரவும் நடவடிக்கைகளை காலவிரயமின்றி மேற்கொள்வதற்கு எம்மிலுள்ள தொழில் அதிபர்களும், செல்வந்தோர்களும், கல்விமான்களும் ஏனைவர்களும் முன்வருவது காலத்தின் கடப்பாடாகவுள்ளது.

# வாசகர் நோக்கு

ஆசிரியருக்கு,

"முஸ்லிம் குரல்" தினசரி ஒலிக்க வேண்டும் என்ற கோஷத்திற்கு எனது வாக்கும் வலுச்சேர்க்கும்.

தனித்தலைமைத்துவம் மற்றும் சமூகப் பிரச்சினைகள் பற்றி ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் மருதமுனையைச் சேர்ந்த ஏ.எச்.எம். மஜீத் அவர்களின் கடந்தகால கருத்து க்களுடன் ஒன்றிப்போன நான் அவரது "பக்கம் சாராது நடுக் கோணாது" தலைப்பிலான முஸ்லிம் குரல் வாசகர் கருத்துதோடு உடன்பட முடியாது உள்ளேன்.

"ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினதும் அமைச்சர் ர.ஃஷ் ஹக்கீமினதும் குறைகள் விமர்சனத்திற்குள்ளாக்கப் படக்கூடாது" என்ற தோரணையில் அவரது கருத்து அமைந்துள்ளது. அமைச்சரின் துதி பாடுவதற்கும் நிறைகளைப் பற்றி எழுதுவதற்கும் தினகரன், தினக்குரல், வீரகேசரி, சுடர் ஒளி போன்ற தேசியத் தினசரிகளும் இன்னும் பல்வேறு பத்திரிகைகளும், ஏடுகளும் தற்போது போட்டிக்குப் புறப்பட்டுள்ளதால் முஸ்லிம் குரலின் ஒரு கல சென்றி மீற்றர் இடைவெளியைத்தானும் வீண் விரயம் செய்வதற்குரிய அவசியம் இல்லை என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்.

தங்கத்தைப் பற்றி விமர்சனமும் விளம்பரமும் செய்ய வேண்டிய கடப்பாடு முஸ்லிம் குரலுக்கு அப்பாற்பட்டது. ஆயினும் "நெருப்புத் தண்ணி" போட்டு அது கலப்படம் - போலி என்று சமூகத்திற்கு காட்டுகின்ற தார்மீகப் பொறுப்பு உண்டு என்பதை "முஸ்லிம் குரல்" உணர வேண்டும். இரும்பின் கறள் - துரு அகற்றி ஆயுதம் செய்யும் வழிவகைகளை முஸ்லிம் குரல் வெளிப்படுத்த வேண்டிய தேவையும் தற்போதைக்கு உண்டு.

கடந்த இதழில் வந்த புத்தளத்து நவ்பியை ஒத்த மற்றுமொருவர் தென் கிழக்கில் வசித்து வருகிறார். ஆனால், மூதூர் கபூர்ஜமான் பதீலா உம்மாவை பலி எடுக்கும் நபர்கள்தான் இனம்காணப்படவில்லை. இவர் நிந்தவூர், பாலமுனை, அட்டாளைச் சேனை, அக்கரைப்பற்று என 30 வயதுக்குள் இதுவரை 5 திருமணங்களைப் புரிந்து பலரை வெளிநாடுகளுக்கு அனுப்பியுள்ளார். இதனை அவரது தனிப்பட்ட பிரச்சினை யாக எடுத்துக் கொள்ள முடியாது. இளம் பேதைப் பெண்களின் ஜீவாதார வாழ்க்கைப் பிரச்சினையும் ஏழைப் பாமரப் பெற்றோரின் கண்ணீர் கதையுமாகும். கொழும்பு லொட்ஜிகளில் தங்கியிருந்து இவர் தன்னிடமுள்ள சாரதி அனுமதிப்பத்திரத்தை இளம் பெண்களிடம் காண்பித்து சோடியாக வெளிநாடு செல்லும் ஆசையை ஊட்டி தனது ஏமாற்று வித்தையை செய்து காட்டி வருகிறார். பின்னர் சாக்குப் போக்காகப் பொய்களைக் கூறி தாம் பிறகு வருவதாகக் கூறி பெண்களை மட்டும் அனுப்பி விட்டு உழைப்பை சூறையாடி வருகிறார். விவாகச் சான்றிதழைக் காட்டி சட்டபூர்வமான மனைவி என்ற கோதாவில் அவர்களின் பெற்றோரை பயமுறுத்துகிறார்.

கடந்த 12 வது இதழின் ஆசிரியர் தலையங்கத்தின் அறை கூவல் போன்று உலமாக்கள், அரசியல்வாதிகள் ஒற்றுமையாகி சமூகத்தைப் பாதுகாக்க தவறியுள்ள இக்கால கட்டத்தில் பத்திரிகை நிறுவனங்களானது தம் சக்திகளை ஒருமுகப்படுத்தி சமூகத்தைப் பாதுகாக்கப் புறப்படுமா? இதில் சமுதாய - சமயப் பார்வையுள்ள பத்திரிகைகளாவது உடனடிச் செயற்பாட்டில் இறங்குமா?

சம்மாந்துறைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்டிருந்த மாவடிப்பள்ளி முஸ்லிம் கிராமம் உட்பட சுமார் பத்துக்கு மேற்பட்ட முஸ்லிம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்வாங்கியே நாவிதன்வெளி மற்றும் காரைதீவு தமிழ்ப் பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட்டுள்ள போதிலும் கோரளைப்பற்று மத்தி (ஓட்டமாவடி) பிரதேச செயலகப் பிரிவு பற்றி தமிழ் தரப்பு போர்க்கொடி தூக்குவது மேலாதிக்க இனவெறியின் வெளிப்பாடே தவிர வேறு என்ன?

முஸ்லிம் குரலில் கடந்த சில வாரங்களுக்கு முன் மறுபிரசுரம் செய்யப்பட்ட உத யன் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் சொல்லப்பட்டது போன்றல்லாமல் கே. டபிள்யு. தேவநாயகம், செல்லையா இராசதுரை, ரங்கநாயகி பத்மநாதன், சௌமியமூர்த்தி தொண்டமான் போன்றோர் இனவெறி சிங்கள அரசுக்கு (1977 - 1994) முட்டுக் கொடுத்தது போன்றதுதான் தற்போது சிங்கள, தமிழ் இனவெறி கொண்ட (ஸ்ரீலங்கா, தமிழீழ) அரசாங்கங்களுக்கு முஸ்லிம்கள் கண் முன்னே செல் அடிக்கப்படும் போதும், கடைகள் தீக்கிரையாக் கப்படும் போதும் முட்டுக் கொடுத்துக் கொண்டு கதிரை சுகம் காண்கிறார்கள்.

அச்சாறு பகுதியல் மனிதாபிமானம் என்ற உபதலைப்பில் கிண்ணியா பெண்மணி ஒருவர் மூதூர்அகதிகளுக்காக தனது விரலுக்கு ஏற்ற வீக்கம் போல 10 ரூபாவைக் கொடுத்து உதவியதாக எழுதப்பட்டிருந்த நெகிழ்வோடு, கடந்த வாரம் வெள்ள அகதிகளுக்கான நிவாரண சேகரிப்பின் போதும் ஒரு நிகழ்வு ஒலுவில் கிராமத்தில் வயோதிப மாது ஒருவர் தனது சேலைத் தலைப்பிலிருந்து 10 ரூபாவை அவிழ்த்துக் கொடுத்து அன்பளிப்புச் செய்தபோதும் ஏற்பட்டது.

மனிதாபிமானத்தை புறாக்களிடமிருந்து அல்லாமல் சக்தி டி.வி. ரங்கா போன்ற பருந்துகளிடமிருந்தா எதிர்பார்க்க முடியும். வஞ்சகர்களிடமிருந்து நயவஞ்சகத்தையன்றி வேறு எதைத்தான் எதிர்பார்க்கலாம்?

பொத்துவில் - கொழும்பு பஸ் லகுகளையில் கொழுத்தப்பட்ட சம்பவம் இதுவரை இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைப் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்பது பத்திரிகைத் தகவல்களிலிருந்து அறிய முடிகிறது. இச்சம்பவம் 1991-06-04ம் திகதி வெளிநாட்டு உல்லாசப் பயணி ஒருவருடன் சேர்த்து 42 முஸ்லிம்கள் பஸ்ஸுடன் உயிருடன் தீயிட்டுக் கொழுத்தப்பட்டார்கள். ஆயினும் முந்திய இதழில் பொத்துவில் கோமாரி பஸ் கொலை பற்றி மட்டுமே சேர்க்கப்பட்டிருந்தது. அத்துடன் அக்கரைப்பற்று "லங்கா ஸ்ரோர்" முன்றலிலும் 12 பேர் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்கள் என்பதும் கவனத்தில் - கணக்கில் சேர்க்கப்படவேண்டும்.

எம். ஏ. மஜுன் நிசா
அக்கரைப்பற்று.

## மக்களாட்சியில்...

மக்களாட்சியில் ஆட்சிப் பொறுப்பு யார் கையில் இருக்கிறதோ அவர்க ளுடைய குணத்தையே மக்களாட்சி பெறுகிறது. நல்லவர்கள், நாணயமா னவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற் றால் மக்களாட்சி நல்லதாகும். இல் லையேல் விபரீதங்கள் விளையும்.

இப்படி அச்சொட்டாக சொன் னவர் காலஞ் சென்ற தமிழக முதல் வர், அறிஞர் அண்ணா. இதைக் குறி த்து வைத்து நல்ல சமயத்தில் நம் கரத்தில் வழங்கினார். தினகரனின் வாரியபொல புதிய நிருபர் யூஎல் முஸம்மில்.

## அகத்தின் அழகு முகத்தில் அல்ல! நகத்தில்!

குறுகலான நகம் - தன்னம்பிக்கைமிக்கவர்கள்.
அகலமான நகம் - உடல் வலிமை மிக்கவர்கள்
சதுர நகம் - அபார நினை வாற்றல் மிக்கவர்கள்
முக்கோண நகம் - நகைச் சுவை உணர்வு கொண்டவர்கள்
ஓவல் வடிவ சிறிய நகம் - முடிவெடுப்பதில் வல்லவர்கள்
ஓவல் வடிவ பெரிய நகம் - சமூக அக்கறை கொண்டவர்கள்

## கபர் குழி மஸ்தான்

இந்தோனேசியாவில் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் மந்திரவாதிகள் அதிகமாக வாழ்ந்தார்கள். அவர்களின் வழித்தோன் றல்களில் பலர் இன்று வரை மந்திர தந்திரங்களி லேயே முழு நம்பிக்கை வைத்து வாழ்ந்து வருகின் றார்கள். சுமந்தோ என்ற 31 வயது இளைஞன் சவக்குழியில் இருந்து 80 வயது பெண்ணின் உடலை எடுத்துச் சாப்பிட்டான். மேலும் இருவரைக் கொன்று தின்றதாகவும் ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியிருக்கின்றான். கொலை செய்யப்பட்ட இருவரின் உடலைத் தின்றதோடு மட்டுமல்லா மல் அதில் ஒருவரின் ஆணுறுப்பை அறுத்து காயப்போட்டு தாயத்தாகவும் அணிந்து கொண்டிருக்கிறான். ஏழு மனிதர்களின் உடலைத் தின்றால் அபரிமிதமான சக்தியைப் பெறலாம் என்ற நம்பிக்கையில் இப்படி செய்ததாக இவன் கூறியிருக்கின்றான். பொலிஸார் இவனை நையப்புடைத்து சிறையில் அடைத்துள்ளனர். குமரி மாவட்டத் தில் 40 ஆண்டுகளுக்கு முன்னால் ஒருவன் மனிதக்கறி சாப்பிட்டது குறிப் பிடத்தக்கது. அவன் பெயர் கபர் குழி மஸ்தான்.

## மரண தண்டனை கூடுமோ? கூடாதா? வள்ளுவர் வழிக்காட்டுகிறார்

மானா மக்கீன் தருவது



சமீப காலமாக மரண தண்ட னை வழங்குவது கூடுமா? கூடா தா? அவசியம் தானா? என்பது பற்றிய சர்ச்சை பலமாகவே நடந்து வருகிறது.

உலகில் உள்ள மொத்த நாடு கள் எத்தனை?

இதில் எத்தனை நாடுகள் மரண தண்டனை வழங்குவதை ரத்துச் செய்துள்ளன. இதற்கு அவைகள் கூறிய விளக்கம் என்ன? அது சரியா? தவறா?

மரண தண்டனையை இன்னும் நடைமுறையில் செயற்படுத்தி வரும் நாடுகள் எத்தனை? இதற்கு இவைகள் கூறும் விளக்கம் என்ன? இது சரியா? தவறா? என்றெல்லாம் இப்போது இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளாமல் உலகப் பொதுமறை என்று சிலரால் போற்றப்படும் திருக்குறளைத் தந்த திருவள்ளுவர் இந்த மரண தண்டனை பற்றி ஏதும் கூறியிருக் கின்றாரா? என்ன சொல்லியிருக் கிறார்? என்பதை மட்டும் ஆய்வு க்கு எடுத்துக் கொண்டபோது கிடைத்த செய்தியை மிகச் சுருக்கமாக உங்கள் பார்வைக்குத் தருகின்றேன்

அறிஞர் கள் விரிவாக ஆராய்ந்து அவர்களது கருத்துக்களைத் அறியத் தரு வார்கள்.

திருக்குறலில் 55 செங் கோன்மை என்ற அதிகாரத்தில் குறள் 541ல்

*ஓர்ந்து கண் ஓடாது*
*இறைபுரிந்து யார்மட்டும்.*
*தேர்ந்து செய் வஃதே முறை.*

ஒருவன் ஒரு குற்றத்தை ஆராய்ந்து யாருக்கும் இரக்கம் காட்டாமல் சமநிலையில் நின்று குற்றத்திற்கு ஏற்ப தண்டனை விதிப்பதே செங்கோல் முறையாகும் என்றும் குறள் 541, 549லும்

*கொலையின் கொடியாரை*
*வேந்து ஒத்தல் பைங்கூழ்*
*களைகட்ட தனோடு நேர்.*
*குறள் 550*

கொலை போன்ற கொடுமையைச் செய்பவரை ஆட்சியாளர் எப்படி தண்டிக்க வேண்டும் என்றால் பயிர்களுக்கு நடுவே வளர்ந்துள்ள களைகளை நீக்குவதுபோல் நீக்க வேண்டும் என்றும் கூறுகின்றார்.

இதில் கொலை போன்ற கொடிய செயல்களை பயிர்களுக்கு நடுவே வளர்ந்துள்ள களைகளுக்கு நிகராக சொல்வதன் பொருள் என்ன? களைகளை மேலோட்டமாக கொஞ்சமோ பாதியாகவோ முக்கால் பகுதியையோ வெட்டினால், கிள்ளி எறிந்தால் அதனால் பயிர்களுக்கு பாதுகாப்பு உண்டாகுமா? களைகளை முழுமையாக கொத்தியோ, பிடுங்கியோ எரிந்தால்தானே பயிர்கள் பாதுகாக்கப்படும்.

எனவே, கொலை போன்ற கொடுமைகள் செய்பவர்களுக்கு மக்களின் நலன்கருதி மரண தண்டனை கொடுப்பதை திருவள்ளுவர் ஆதரிக்கிறார் என்று கூறுவது தவறாகுமா? சிந்திப்போம் - செயல்படுவோம் - சீர்பெறுவோம்.

## ஒரு நற்சிந்தனை



முஸ்லிம்களாகிய நாங்கள் வாயைத் திறந்து மேற்கை விமர்சிக்கத் திராணியற்று இரு ப்பதும் ஆழமாகச் சிந்தித்து அவிசுவாசிக ளின் திட்டங்களையிட்டு நாம் எச்சரிக் கையாக இருக்க வேண்டும். தற்காலி கமான இவ்வுலகில் சோதனைகளை எல்லாம் நாம் பொறுமையுடன் எதிர் கொள்ள வேண்டும்.

## ஹோட்டலில் தாய்பால் உணவு!

சீனாவில் சாங்ஷா நகரில் உள்ள ஒரு ஹோ ட்டலில் தாய்ப்பாலில் தயார் செய்யப்பட்ட உணவுகள் விற்பனை செய்யப்படுகின்றன. ஆறு சீனப் பெண்கள் இந்த ஹோட்டலுக்கு தாய்ப்பாலை விற்பனை செய்துள்ளனர். தாய் ப்பாலில் தயார் செய்யப்பட்ட உணவுகளை ருசி பார்க்கப் பத்திரிகையாளர்கள் மறுத்து விட்டனர்.

ஆனாலும் இந்த ஹோட்டலில் வியாபாரம் நன்றாகவே நடக்கிறது. 108 வகையான உணவுகளை தாய்ப்பாலில் தயார்செய்து விற்பனை செய்ய இந்த ஹோட்டலின் உரி மையாளர் திட்டமிட்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களுக்கு தனி அலகு ஏன் அவசியம்?

இலங்கை வாழ் முஸ்லிம்களின் சமூக அடையாளங்களும், விழுமியங்களும், தனித்துவமும் இந்த நாட்டில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நிலை நிறுத்தப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு பல நூற்றாண்டு காலமாக கட்டிக் காக்கப்படும் முஸ்லிம்களின் சமூக அடையாளங்களுக்கும், அதன் விழுமியங்களுக்கும், தனித்துவத்திற்கும், சுய அந்தஸ்த்துக்கும் தேசிய இருப்புக்கும் பாரிய அச்சுறுத்தல்களும், சவால்களும் அதிகரித்து விட்ட இன்றைய சூழலில் முஸ்லிம்கள் தங்களது அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்காக உடனடியாக இந்த நாட்டில் முஸ்லிம்களை பெரும்பான்மையாக கொண்ட அதிகார அலகு ஒன்று பெறப்பட வேண்டியது அவசியமானதும் காலத்தின் தேவையுமாகும்.

அதிகார அலகுகளும் அதன் பரிமாணங்களும் இந்த நாட்டில் வாழும் எல்லாச் சமூகங்களுக்கிடையிலும் பங்கிடப்பட வேண்டும் என்பதே இன்றைய இனப்பிரச்சினைக்கான நியாயமான, தீர்வாக அமையுமே ஒழிய ஒரு சிறுபான்மை சமூகத்தை ஓரங்கட்டி விட்டு இன்னும் ஒரு சமூகம் அதிகார அலகை அடைவது என்பது நிரந்தரமானதும், நியாயமானதும், கௌரவமானதுமான தீர்வாக அமையப் போவதில்லை என்பதே யதார்த்தமாகும்.

அப்துல் ஜப்பார் சமீம்,
கல்முனை

இந்த யதார்த்தத்தை நடுநிலையுடனும், மனச்சாட்சியுடனும் நோக்கினால் தமிழ் மக்கள் தங்களுக்கென ஒரு சுயமான ஆட்சி அதிகாரத்தையுடைய ஒரு அலகை கோருவது நியாயமானால் தமிழ் மக்கள் சந்தித்த அவலங்ளுக்கு குறைவில்லாத அவலங்களை சந்தித்த முஸ்லிம்கள் ஏன் ஒரு சுய ஆட்சி அதிகார அலகை கோரக்கூடாது? அவ்வாறு முஸ்லிம்கள் ஒரு அதிகார அலகை கோருவதை சிங்களப் பேரினவாதமும் தமிழ் பேரினவாதமும், அதன் போராட்டக் குழுக்களும் ஏன் நியாயத்துக்கு புறம்பாக மாறுபட்ட கோணத்தில் பார்க்க வேண்டும்.

இனப்பிரச்சினைக்கான இறுதி தீர்வு வருகின்ற போது சிங்களப் பெரும்பான்மை பிராந்தியம், தமிழ் பெரும்பான்மை பிராந்தியம் என்று அதிகார அலகுகள் பங்கிடப்படுமாக இருந்தால் அப்பிராந்திய அலகுகளுக்கு வழங்கப்படுகின்ற அதிகாரங்களுக்கு சற்றும் குறைந்திராத அதிகாரங்களை உடைய முஸ்லிம்களின் பெரும்பான்மை பிராந்தியமும் உருவாக்கப்பட வேண்டும் என்பதே முஸ்லிம்களின் கோரிக்கையாகும். இக்கோரிக்கையை முஸ்லிம்கள் முன்னெடுத்துச் செல்வதில் தளர்வு அடைவார்களாக இருந்தால் முஸ்லிம்கள் தொடர்ந்தும் அடக்கப்பட்ட ஒரு சமூக மாகவும், அரசியல் அதிகாரத்தை பறி கொடுத்த சமூகமாகவும் நிர்க்கதியாக நிற்பார்கள் என்பதில் சந்தேகமேயில்லை.

தமிழ் மக்கள் கோரி நிற்கின்ற இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண அலகுக்குள் முஸ்லிம்கள் ஏன் வாழ முடியாது என இன்று சிலர் களநில வரம் தெரியாதவர்கள் போல் அறிக்கை விடுகின்றார்கள். இதற்கு அண்மையில் நடந்த மூதூர் வாழைச்சேனை சம்பவம் நல்ல பதிலாக அமையும்.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற பிரதேசத்தை ஒரு அதிகார அலகாகக் கோருவது தங்களது பாதுகாப்பையும், இறைமையையும், உரிமை களையும், அபிலாஷைகளையும் அடைவதற்கே ஒழிய, சிங்கள தமிழ் மக்களுடன் போட்டி போட்டுக் கொண்டு சண்டைப் பிடிப்பதற்காக அல்ல என்பதை சிங்கள தமிழ் தேசியவாதிகள் தெளிவாக மனசாட்சியுடன் உணர்ந்து கொண்டாக வேண்டும்.

இவ்வாறு ஒரு சுயாட்சி அதிகாரத்தை அடைவதற்காகவே தமிழ் மக்கள் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு அரசை திக்குமுக்காட களம் இறங்கி போராடினார்கள். ஆனால், இவ்வாறான ஒரு இலக்கை அடைவதற்காக ஆயுதங்களில் பெரிதும் நம்பிக்கை வைக்காத முஸ்லிம் சமூகம் மறைந்த மாமனிதர் அல்ஹாஜ் எம்.எச்.எம். அஷ் ரஃப் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் ஸ்தாபனத்தின் மூலம் தங்க ளது அரசியல் பலத்தை அரங்கேற்றினார்கள். அதன் வழியாக இன்று முஸ்லிம்களும் அதிகார அலகை பெருவதற்கு உரித்துடையவர்கள் என்பது நிரூபனமாகி இருக்கின்றது.

ஆயுதங்களை ஏந்தி போராடி மானிடநேயத்தை இரத்த வெள்ளத்தில் ஓட்டினால் மாத்திரம்தான் போராட்டமா? வடக்கு கிழக்கில் முஸ்லிம்கள் இழந்த உயிர்கள், உடமைகள், நிலங்கள், பாதுகாப்பு, உரிமைகள் என்பன முஸ்லிம்களின் போராட்டத்தின் வடிவங்கள் இல்லையா? இரண்டும் போராட்டமே ஆனால் வழிகளே வேறானவை இதனை எந்த மானிட நேயமுள்ள சமூகமும் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்.

முஸ்லிம்களுக்கு ஒரு அதிகார அலகு வழங்கப்படுவதை தமிழ் சமூகம் எதிர்ப்பார்களாக இருந்தால் தமிழ் மக்களுக்கு ஒரு அதிகார அலகு வழங்கப்படுவதை சிங்கள மக்கள் எதிர்ப்பது நியாயமானது என்ற முடிவுக்கு வரவேண்டிவரும்.

ஆதலால் இந்த நாட்டில் எல்லாச் சமூகத்தினரும் சகோதரபாசத்துடனும், நிம்மதியாகவும் சுய அந்தஸ்துடனும், கௌரவமாகவும், தனித்துவமாகவும் வாழ இனப்பிரச்சினைக்கான இறுதி தீர்வின் போது அனைத்து சமூகத்



தினருக்குமான ஒன்றுக்கு ஒன்று சமத்துவமான அதிகாரத்தை உடைய தனி அலகு வழங்கியே ஆகவேண்டும். இதனை அரசு வேறுபட்டவிதத்தில் கையாள முற்பட்டால் முஸ்லிம்கள் இவ்வரசுக்கு தக்கதொரு பாடத்தினை கற்பிப்பதை விட வேறு வழி இருக்க முடியாது.

எது எப்படியாயினும், யார் விரும்பினாலும், விரும்பாவிடிலும் முஸ்லிம்கள் தனி அலகு கோரிக்கையை ஒரு போதும் கைவிடப் போவதில்லை என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள். இப்படியான ஒரு முடிவுக்கு முஸ்லிம்கள் வந்ததற்கான காரணம் இரு பெரும்பான்மை சமூகங்களும் முஸ்லிம்களை கையாண்ட விதமே ஆகும் என்பதை எந்த புத்தி ஜீவியும் ஏற்றே ஆகவேண்டும்.

ஒரு போதும் ஆட்சி அதிகாரத்தை அடைய முடியாத வங்குரோத்து நிலையில் இருந்த ஐ.தே.கட்சியை இன்று ஆட்சி அதிகாரத்தில் அமர்த்திய முஸ்லிம்களின் காலை வாரும் அரசின் நடவடிக்கைகளையும் நன்றிகெட்டத் தனத்தையும் தொடர்ந்தும் சகித்துக் கொண்டிருக்கவும் முடியாது என்ற நிலைக்கு வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் தள்ளப்பட்டிருப்பதால் எதிர்வரும் தேர்தல்களில் ஐ.தே. கட்சி முஸ்லிம்களிடமிருந்து நல்ல பாடத்தைப் படிக்கும் என்பதை இன்றைய அர சியல் நிலவரங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

இனபிரச்சினைக்கான தீர்வு எட்டப்படுவதற்கான பேச்சுவார்த்தை மேசை யில் முஸ்லிம்களின் உரிமைக்குரல் ஒலி க்கப்பட்டு முஸ்லிம்களின் அபிலாஷை கள் தீர்க்கப்படாவிடில் இனி எச்சந்தர்ப்பத்திலும் முஸ்லிம்களின் பிரச்சினைக்குத் தீர்வு வராது என்ற மறைந்த தலைவர் மர்ஹூம் அஷ் - ஷஹீத் அஷ்ரஃப் அவர்களின் வாக்குக்கு ஏற்ப முஸ்லிம் சமூகமும் அதன் ஏகக்குரலான முஸ்லிம் காங்கிரஸினதும் செயற் பாடாக வேண்டும். இதனை விடுத்து முஸ்லிம்களின் பிரதிநிதிகள் பின்னுக்கு முன் முரணான அறிக்கைகளை விடுத்து முஸ்லிம்களின் தாகங்களை திசை திருப்ப முனைவது விவேகமானதாக அமையாது.

முஸ்லிம் மாகாணம், நிர்வாக மாவட்டம், தென்கிழக்கு அலகு என்ற கோரிக்கைகளை முன்வைத்து உருவாகிய கட்சி, அக்கோரிக்கைகளை முன் வைக்க இதுவல்ல தருணம் என பம்மாத்துக் காட்டுவது முஸ்லிம்களையும், முஸ்லிம் காங்கிரஸ் போராளிகளையும், அவர்களது தியாகங்களையும் கொச்சைப்படுத்து வதாக அமைந்துள்ளது. இந்நிலை தொடருமாகவிருந்தால் முஸ்லிம்கள் முஸ்லிம் காங்கிரஸில் நம்பிக்கை இழந்து மாற்று வழிகளைத் தேட முனையலாம். அதுமட்டுமல்லாமல் முஸ்லிம் காங்கிரஸில் இருந்து கொண்டு பதவிகளையும், சொகுசுகளையும் அனுபவிக்க முனையும் அரசியல் தலைவர்களுக்கு தக்கப் பாடங்களை படிப்பித்து அவர்களை அரசியலிலிருந்தும், கட்சியி லிருந்தும் தூக்கி எறிய வியூகம் அமை த்து செயல்படலாம்.

இது குறித்து முஸ்லிம் அரசியல்வா திகள் நல்லதொரு முடிவுக்கு வராது போனால் முஸ்லிம் சமூகத்தைக் காட்டிக் கொடுத்த துரோகிகள் என்ற வரலாற்று அவப்பெயரையும் இவர்கள் சுமந்தாக வேண்டி வரும்.

அதுமட்டுமல்லாது அரசியல் முன்னெடுப்பு மூலம் முஸ்லிம்களுக்கான தீர்வு வராவிடில் முஸ்லிம் இளைஞர்கள் விரக்தியுற்று அரசியல் நிறுவனப்படுத் தலிலிருந்து விலகி அபாயகரமான முடிவுக்குத் தள்ளப்படலாம்.

இவ்வாறான நிலைமைகள் ஏற்படு மாயிருந்தால் ஒருபோதும் யாரும் கௌரவமான சமாதானத்தை அடைய முடியாது. ஆதலால் எல்லாத் தரப்பினரும் இவ்விடயங்களை ஆராய்ந்து முஸ்லிம்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கான அரசியல் முன்னெடுப்புக்களையும் செய்தாக வேண்டும். இதன் மூலமே ஒரு சமத்துவமான அரசியல் அந்தஸ்த்தை எல்லா சமூகத்தினரும் பெறுவர். இதற்காக தீர்க்கதரிசனமான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டாக வேண்டும். இதுவே நாடு, சுபீட்சம் பெற எடுக்கும் நல் முயற்சியும் காலத்தின் தேவையுமாகும்.

## வீது நஷ்டஈட்டுக் கோரிக்கை கனவாக மாறி விடுமா?

அண்மையில் மாளிகாவத்தையில் நடைபெற்ற பேரினவாத தீய சக்திகளின் இனவாத தாக்குதலின் மூலம் முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவும், சிங்களவர்கள் சிறியளவிலும் தாக்கப்பட்டதோடு அவர்களின் உடமைகளும் அழிக்கப்பட்டது. இத்தாக்குதலின் விளைவாக ஏற்பட்ட நஷ்டம் ஒரு கோடிக்கும் அதிகமாகும். இவ்விழப்புக்களுக்கு நஷ்டஈடு வழங்குவதாகவும் அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதாகவும் அமைச்சர் கரு ஜயசூரிய பல தடவைகள் வாக்களித்தார். ஆனால் இதுவரை சாதகமான எத்தகைய பதில்களும் அமைச்சர் தரப்பிலிருந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்கவில்லை. அரசும் இவ்விடயத்தில் மௌனம் சாதித்து வருவதாகத் தெரிகிறது. பல முறை பொது மக்களும் இப்பிரதேச பிரதிநிதிகளும் இது தொடர்பாக அரசிடமும், ஏற்கனவே பாதிப்புக்களை நேரடியாக பார்வையிட்டு வாக்குறுதியளித்துச் சென்ற அமைச்சர்களிடமும் முறையிட்டபோதும்கூட அவர்கள் இவ்விடயத்தில் கரிசனை காட்டுவதாக இதுவரை தெரியவில்லை. நஷ்டஈட்டுப்பத்திரங்கள் முழுமையாக பொறுப்பதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுவிட்டது. அங்கிருந்து சகல பத்திரங்களும் புனரமைப்பு அமைச்சுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுவிட்டது. என்றாலும் பொறுப்பான புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சரின் பொருட்படுத்தாத பொடுபோக்குத்தனத்தினால் பாராளுமன்றத்தில் அதனைச் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது, திட்டமிட்ட வன்முறை நடைபெற்று 8 மாதங்கள் கடந்துவிட்டன. இதனால் தமக்கு நஷ்டஈடு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் இருந்த மக்கள் தற்பொழுது தமது எதிர்பார்ப்பு வீணாகி விடுமோ என கவலை கொள்கின்றனர். உடனடியாக தமது நஷ்டஈட்டுத் தொகையை வழங்குமாறு அரசையும், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளையும் அமைச்சர்களையும் அவர்கள் வேண் டுகின்றனர்.

*பிரதேசவாசிகள்*
*போதிராஜராம மாவத்தை.மாளிகாவத்தை*

# பலஸ்தீன மண்ணில் சமாதானம் மலருமா?

இஸ்ரேலியப் பிரதம மந்திரியாக ஏரியல் ஷரோன் பதவியேற்றவுடன், ஹமாஸ் போராளிகளை முற்றுமுழுதாக அழித்து விடுவதாக வாக்குறுதி அளித்தார். ஆனால் ஏரியல் ஷரோனால் வழங்கப்பட்ட அவ்வாக்குறுதியை அவரால் நிறைவேற்ற முடியவில்லை. பலஸ்தீன மண்ணில் மீண்டும் ஒரு முறை சமாதானப் பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டுள்ளது. இந்த சமாதான முயற்சியை முன்னெடுப்பது அமெரிக்காதான் என்றால் நீங்கள் ஒருவேளை வியப்படையக் கூடும்.

அமெரிக்கா தயாரித்த சமாதான வரைபடத்துடன் அடுத்த கட்ட சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்கு பலஸ்தீனப் பிரதம மந்திரி மஹ்மூத் அப்பாஸ் பலஸ்தீன உயர்மட்டக் குழுவை சந்திப்பதற்கு காஸா பகுதிக்கு விஜயம் செய்துள்ளார். பேச்சுவார்த்தைகள் இரு தரப்புகளிடையேயும் நடைபெற்று வருகின்றன.

அமெரிக்காவின் இச்சமாதானத் திட்டம் எவ்வளவு தூரம் வெற்றியளிக்கும் என்று சொல்ல முடியாது என்கின்றனர் விமர்சகர்கள். ஏனெனில் அமெரிக்காவின் செல்லப்பிள்ளையே இஸ்ரேல் என்பது உலகறிந்த விடயம். இஸ்ரேலானது ஹமாஸ் இயக்கம் உட்பட சகல பலஸ்தீன விடுதலை இயக்கங்களினதும் அரபுலகினதும் பொது எதிரியே இஸ்ரேல்.

ஹமாஸ் இயக்கத்தை அமெரிக்காவோ இஸ்ரேலோ பயங்கரவாதத்தின் மூல ஊற்று என இப்போதும் வர்ணித்தே வருகின்றன. ஆனால் ஹமாஸ் இயக்கத்தின் தோற்றமே இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களின் எல்லை தாண்டிய நிலப்பறிப்பின் விளைவாக உருவாகியது என்பதை இவர்கள் உணருவதில்லை. இஸ்ரேலின் ஆக்கிரமிப்பிலிருந்து மேற்குக் கரை, காஸா பிரதேசத்தை மீட்டெடுப்பதோடு முஸ்லிம்களின் புனித பூமியான பைத்துல் முகத்திஸை விடுவிப்பதுமே இப்போராட்டக் குழுவின் பிரதான நோக்கமாகும்.

இந்த இலக்கை அடைந்து கொள்வதற்குத் தடையாக சமாதானப் போர்வையில் முன்னெடுக்கப்படும் வகையில் ஹமாஸ் இயக்கத்தையும் ஏனைய பலஸ்தீனப் போராட்ட அமைப்புக்களையும் வீழ்த்த அமெரிக்க - இஸ்ரேல் கூட்டு எடுக்கும் முயற்சி காலத்தை வீணடிக்கும் செயலாகவே அமையும். அத்துடன் அத்துமீறி ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து இஸ்ரேலியத் துருப்புக்கள் முற்றாக வாபஸ் வாங்கப்படாமல் சமாதானப் பேச்சுவார்த்தைகள் உறுதியான தடத்தில் கால்பதிப்பது கஷ்டமாகவே உள்ளது.

தமது பூர்வீகத் தாயகம் அந்நியர்களால் பலாத்காரமாக ஆக்கிரமிக்கப்பட்டு ஆளப்படுவதை எதிர்த்தே இதுவரை பலஸ்தீன மக்கள் போராடி வருகின்றனர். இப்போராட்டத்தில் இலட்சக்கணக்கான உயிர்களை அர்ப்பணித்துவிட்ட பலஸ்தீன மக்களின் போராட்டக் குழுக்கள், ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து இஸ்ரேல் படைகள் முற்றாக வாபஸ் வாங்க முன்வந்தால் ஒரு வேளை பூரண யுத்த நிறுத்தத்திற்கு உடன்படலாம்.

"சமாதானத்திற்கான பாதை வரைபு" என்ற இப்புதிய சமாதான முயற்சியினூடாக இஸ்ரேல் இப்பகுதியிலிருந்து வெளியேற



வேண்டும். அத்துமீறிய குடியேற்றங்கள் தொடரக் கூடாது. பலஸ்தீனர்கள் தாக்குதல்களில் ஈடுபடக் கூடாது. பலஸ்தீன அரசாங்கத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் கூட இன்னமும் தொடங்கப்படவில்லை.

இச்சமாதான நடவடிக்கை தொடர்பாக இரு தரப்பினரிடையேயும் பல்வேறு வாத விவாதங்கள் நடைபெற்றே வருகின்றன. இஸ்ரேல் இதனை பல்வேறு நிபந்தனைகளுடனேயே ஏற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவித்துள்ளது. ஏரியல் ஷரோனோ இதனை தான் விரும்பி செய்யவில்லை என்றும் அமெரிக்காவின் நிர்ப்பந்தத்தினாலேயே இதனை தொடருவதாகவும் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். இஸ்ரேல் தரப்பு இச்சமாதான முயற்சி தவிர்க்கப்படல் வேண்டும் என்ற எண்ணத்துடனேயே ஆரம்பத்திலிருந்து இன்றுவரை செயற்பட்டு வருகின்றனர்.

## புதிய விடியலுக்காக புறப்படுவோமா?

ஒரு அர்த்தம் பொதிந்த விடியலின்
புரிதலுக்காக
சற்று விரைந்துகொள்வோம்!
மரண பயம்
தலைநிமிர்ந்திழைத்த
பாயை
தலைக்கட்டி முடித்துவிட்டு
மானிட நேயங்களாலும்
மனிதாபிமானங்களாலும்
எல்லோருக்கும் போதுமானதாய்
ஒரு தோட்டுப் பாயை
நெய்துகொள்வோம்!

சுற்றி நிற்கும்
தோட்டுப் பாயில்
நீங்களும்
நாங்களும்
நிம்மதியாய் இருத்தல் வேண்டும்!
இரவானால்
இனிதாகத் தூங்க வேண்டும்!

ஓய்வு நேரத்தில்
எங்களின் மனக்குறைகளை
நீங்களும்
உங்களின்
எதிர்பார்ப்புகளை
நாங்களும்
பேசிக் கதைத்து
பிணக்குகள் வராமல்
பேணிக் கொள்வோம்!

உங்களுக்குள்
எங்களது
காணி பூமி கடைத்தொகுதிகளும்
எங்களுக்குள்
உங்களது
வாணிபம் சில வயற் பகுதிகளும்
எப்போதும்போல்
உங்களதும்
எங்களதும்
ஆடு மாடு கால்நடைகள்
ஒற்றுமையாய்
ஒரு மேய்ச்சல் நிலத்தில்
மேய்ந்தருந்தி
ஓய்ந்து கொள்ளும்!

உங்களது தொழிலாளிகள்
எங்களது
வயல் தென்னந்தோப்புக்களில்
வழமைபோல்
வந்திருந்து வேலைசெய்து
வடிவாக ஓய்வெடுத்து
வாழ்க்கை வண்டிலை
ஓட்டிக் கொள்ளட்டும்!

எங்களது
அங்காடிகள்
உங்களின் தெருக்களிலே
ஊடுருவி
ஊரார் தேவைகளை
உடனடியாய் நிறைவேற்றி
உடன்பிறவா உறவுகளாய்
உலாவந்து இருக்கட்டும்!

நமக்குள்
பேதங்கள் வந்தவழியை
சற்று
பின்னோக்கிப் பார்த்தல் நன்று
நாம் புறக்கணித்த பேதங்களை
ஏற்று
புரிந்துணர்வுகளை
பொதுவான நேர்கோட்டில் குவித்து
புதிய விடியலுக்காக
புறப்படுவோமா?

-ஓட்டமாவடி யூ.எல்.எம்.நஜீப்.

## முஸ்லிம் குரல் தினசரியாக மலர வேண்டும்!

முஸ்லிம் சமூகத்தின் அடையாளத்தை உறுதிப்படுத்த அரசியல் கட்சி உருவாக வேண்டும். அதனூடாகவே எங்களுடைய இருப்பு பாதுகாப்பு, உரிமை பெறப்பட வேண்டும் என்ற நோக்கில் முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. அதன் பெருமை கண்ணியத்துக்குரிய தலைவர் எம்.எச்எம்.அஷ்ரஃப் அவர்களுக்கே சாரும். அவரின் மறைவுக்குப் பின்னர் சில்லறை சலுகைகள், பணத்திற்காக, கட்சி சமூகத்தை சீரழித்துக் கொண்டிருக்கின்றது.

அதே போன்று சமூகத்தின்... நீண்ட காலத் தேவையாக இருந்த முஸ்லிம் ஊடகம் இன்று அதன் ஆரம்பக் கட்டத்தை ஆரம்பித்து இருக்கின்றது. முஸ்லிம் குரலாக இது உயிர் வாழ வேண்டும். வளர வேண்டும். சமூகத்தை சீர்படுத்த வேண்டும் என்பது என்னைப் போன்ற வாசகர்களின் அங்கலாய்ப்பாகும். இந்தப் பொறுப்பை எடுக்க வேண்டியவர்கள் சமூகத்தில் அக்கறை கொண்ட பிரமுகர்கள், செல்வந்தர்களின் கடமையாகும்.

தற்பொழுது வாரம் ஒரு முறை வெளிவரும் முஸ்லிம் குரல், தினசரிப் பத்திரிகையாக வெளியிடப்பட வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும். முஸ்லிம் குரலை பெரும் சிரமத்திற்கு மத்தியில் வெளியிட்டுக் கொண்டிருக்கும் ஆசிரியர் குழுவுக்கும், பிரதம ஆசிரியருக்குமான எனது பிரார்த்தனையை அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக.

அவர்களின் கஷ்டத்தையும் சிரமத்தையும் அல்லாஹ் பொருந்திக் கொண்டு புனித பணி தொடர வேண்டுகிறேன்.

*-எம். ஐ. ஜஹாப்தீன், பிறைந்துறைச்சேனை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாத்தை தழுவியோர் எதிர்நோக்கும் சவால்கள்

இலங்கையை பொறுத்தவரை புனித இஸ்லாத்தின் பால் கவரப்பட்டு, அதில் இணைந்து கொள்வோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதில் புத்த மதகுருக்களும், கிறிஸ்தவ அமைப்பின் உறுப்பினர்களும் அடங்குவர். இஸ்லாத்தை ஏற்போர் அனைவரும் அதன் கருத்துக்களை ஆழமாக கற்றுத் தேர்ந்து ஈர்க்கப்பட்டவர்கள் அல்ல. சந்தர்ப்ப சூழ்நிலைகள், சில சமூக நிர்ப்பந்தங்கள் அவர்களை புனித இஸ்லாமிய மார்க்கத்தின் பக்கம் திருப்பியுள்ளது. பின்வரும் அடிப்படையில் இஸ்லாத்தை தழுவும் மக்களை வகைப்படுத்தலாம்.

1. புனித குர்ஆனையும், இஸ்லாமிய தத்துவங்கள், வரலாறுகள், கோட்பாடுகளை துறைபோக கற்று, தேடல் மிகுந்த குழுவினர்.

2. வளைகுடா நாடுகளில் தொழில் நிமித்தம் சென்று அங்குள்ள சில பண்பாட்டம்சங்களால் கவரப்பட்டவர்கள்.

3. காதலித்து, திருமணத்திற்காக இஸ்லாத்தை ஏற்க நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள்.

4. வறுமை, சாதிக் கொடுமை போன்ற சமூக நோய்களிலிருந்து பாதுகாவல் பெற இஸ்லாத்தை ஏற்றவர்கள்.


5. கிழக்கில் ஆயுதக்கும்பலின் பலாத்கார ஆட்சேர்ப்புக்கு அஞ்சி, இஸ்லாமிய மார்க்கத்தில் இணைந்து, முஸ்லிம் சமூகத்திடம் தஞ்சமடையும் எண்ணம் கொண்டோர், (இத்தகைய குழுவினர் விரல் விட்டு எண்ணக் கூடிய தொகையினர் என்பதை கவனத்திற் கொள்க)

6. சில முஸ்லிம்களிடம் நெருங்கிப் பழகி, அவர்களின் நடைமுறை வாழ்வை உன்னிப்பாக கவனித்து, அதனால் வசீகரிக்கப்பட்டு, மார்க்கத்தை ஏற்றோர். மற்றும் சில காரணிகளால் இஸ்லாத்தை தழுவுவோர் தொகை அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

இதில் முதல் பிரிவினரால் முஸ்லிம் சமூகத்திற்கு எந்தச் சுமையும், இடைஞ்சலும் கிடையாது. அவர்கள் தனது அறிவின் ஒளித்தீபத்தால் ஏனைய பரம்பரை முஸ்லிம்களுக்கும் பிரச்சாரம் செய்து, கௌரவமான ஒரு வாழ்வை அமைத்துக் கொண்டுள்ளனர். பரம்பரை முஸ்லிம்களிடம் இல்லாத இஸ்லாமிய ஞானமும், தெளிவும் இவர்களிடம் கரைபுரண்டோடும். இவர்கள் இஸ்லாத்தின் பெயரால் யாசகம் கேட்பதுமில்லை, எதனையும் எதிர்பார்ப்பதுமில்லை.

**இரண்டாவது பிரிவினர்.**

தொழில் புரியும் நாடுகளில் இருக்கும் போது இஸ்லாமிய பண்பாட்டு ஒழுக்க மாண்புகளுடன் வாழ்வர். நாடு திரும்பியதும் சூழலும், வீட்டு நிலைமையும், சமூகத்தின் நிர்ப்பந்தமும் இவர்களை இஸ்லாத்தின் மீது பற்றுறுதி இல்லாத நிலையை தோற்றுவித்து விடுகின்றது. எனினும் இவர்களில் பெரும்பாலானோர் இஸ்லாமிய பண்பாடுகளை பெரும் எதிர்ப்பினை தாங்கி, அனுஷ்டிக்கின்றனர். இவர்களும் இஸ்லாத்தின் பெயரால் யாசகம் கேட்கும் நிலைக்குச் செல்வதில்லை.



**மூன்றாவது பிரிவினர்.**

ஒரு புதிய உறவை ஏற்படுத்தி அதனை அறுத்தெறிந்து வாழ முடியாத போது புனித இஸ்லாத்தைத் தழுவி அதன் மூலம் தமது அன்பின் சிகரத்தை தான் நேசிக்கும் ஒருவருக்கு, ஒருத்திக்கு காட்ட முனைவார். பெரும்பாலும் இவர்களிற் சிலர் பெயருக்கே முஸ்லிம்களாக வாழ்வர். குடும்பம், அதன் கலா சார, ஆன்மீகப் பின்னணியைப் பொறுத்து இவர்களின் வாழ்வும் மாற்றமடையும். பெரும்பாலும் இவர்களும் மார்க்கத் தின் பெயரால் வீதிகளில் உலா வருவ தில்லை.

**நான்காவது பிரிவினர்.**

நமது சமூகத்தின் அவதானிப்புக்குரியவர் கள் இவர்கள் தமது மூதாதையர்களின் சமயத்தைத் துறந்து அதன் ஆக்கிரமிப்பு, தீண்டாமை போன்ற சித்திரவதைகளிலிருந்து தப்பிக்கவே இஸ்லாத்தில் நுழைகின்றனர். இஸ்லாமியர்களின் ஆடம்பரமான வாழ்வைக் கண்டு, அதிசயித்து இவர்க ளின் மார்க்கத்தை ஏற்றால் நாமும் இது போன்று வாழலாம் என்ற பெரும் கனவுகளை கண்களில் நிறைத்து இஸ்லாம் என்ற மாளிகைக்குள் காலடி எடுத்து வைக்கின்றனர். ஆனால், இங்குள்ள சமூகக் கட்டமைப்பு அவர்களின் கனவுகளில் 'கல்லெறிந்து' கலைந்து விடுகின்றது.

**இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்**

இஸ்லாத்தைத் தழுவியபின் அவர்கள் இழந்து வருவது அநேகம். இரத்த உறவுகள், பாரம்பரிய வாழ்விடம், சமூகம், உறவுகள், நண்பர்கள், தொழில், கௌரவம் என சொல்லொண்ணா இழப்புகளையும் மனதில் சுமந்தே இஸ்லாத்தில் நுழைகின்றனர். நமது சமூகம் இவர்களை எப்படி வரவேற்கின்றது என்பதே இங்கு முக்கியம். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் வேலையைத் தான் நாம் இவர்களுக்கு இழைக்கின்றோம். குறைந்தளவு "மரியாதை"யைக் கூட நாம் இவர்களுக்கு வழங்குவதில்லை.

ஒருவேளை சோற்றுக்கே கையில் பாத்திரத்துடன் தெருத் தெருவாக அலையும் பரிசைத்தான் நாம் அவர்களுக்கு வழங்கியிருக்கிறோம். உண்ண உணவின்றி, உறையுள் இன்றி, ஒழுங்கான உடையின்றி பரதேசியாக அலையும் இந்த மனிதர்களை நாம் "மௌலா இஸ்லாம்" என்று அடிமைப்படுத்தியுள்ளோம்.

இவர்கள் இஸ்லாத்திற்குத்தான் அடிமைகளாக வந்துள்ளார்கள். சமூகத்திற்கு அல்ல. இவர்களுடன் திருமண சம்பந்தம் வைப்பதைக்கூட நமது சமூகம் கீழ்த்தரமாகவே நோக்குகின்றது. "மௌலா இஸ்லாமியனிடம் திருமண பந்தமா?" என முகம் சுழிக்கின்றனர். பள்ளிவாயல்கள் ஒரு கடிதத்தை வழங்கி தமது சமூகக் கடமை நீங்கி விட்டதாக இவர்களை நட்டாற்றில் விட்டு விடுகின்றன.

சமூக அந்தஸ்தும் இல்லாத, உபசரிப்பும், கவனிப்பும் இல்லாத ஒரு மூன்றாம் தர முஸ்லிம் சமூகம் ஒன்றின் வளர்ச்சிக்கு இந்த உதாசீனங்கள் விதை போடுகின்றன என்பதை நாம் மறந்து விடுகின்றோம்.

**செயற்திட்டங்கள்**

சந்தர்ப்ப வசத்தால் இஸ்லாமிய மார்க்கத்தில் இணைந்துள்ளவர்களுக்கான திட்டமிட்ட எந்த நெறிமுறைகளும் இலங்கையில் இல்லை என்றே கூறலாம். பல சமூக நிறுவனங்கள், இஸ்லாமிய இயக்கங்கள் வெளிநாட்டு உதவியுடன் இயங்கும் அமைப்புகள் போன்ற சக்திகள் ஒருங்கி ணைந்து புதிதாக இஸ்லாத்தை தழுவு கின்றவர்களுக்கு ஆக்கபூர்வமான திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

பெயர் மாற்றம், "கத்னா" போன்ற வெளிக் கிரியைகளை செய்வதன் மூலம், தமது கடமை முடிந்து விட்டதாக பெரும்பாலான இயக்கங்களும், அமைப்புக்களும், நினைக்கின்றன. தீன் பணி செய்யும் இவ்வியக்கங்கள் இவர்களின் உட்கட்டுமான அம்சங்களை கவனத்திற் கொள்வதில்லை. இஸ்லாத்தில் நுழையும் இத்தகையோருக்கு ஒழுங்கமைக்கப்பட்ட பாடநெறி ஒன்று போதிக்கப்பட வேண்டும். இப்பாடத்திட்டம் பல்வேறு தரத்தில் உள்ளவர்களின் தகுதிகளைப் பேணி போதிக்கப்பட வேண்டும். பயிற்சி பாசறைகள் மூலம் ஈமானியத்தான பயிற்சிகளையும், தொழுகை அதனுடன் இணைந்த உப வழக்கங்களையும் "செய்முறை" விளக்கப்பயிற்சிகள் ஊடே ஊட்டப்பட வேண்டும்.

இவர்களுக்கான கற்பித்தலின் போது நவீன "இலக்றோனிக்" கருவிகளையும் பயன்படுத்த வேண்டும். வீடியோ, ஓடியோ, குறுந்திரை போன்றவற்றை பயன்படுத்தி சில விரிவுரைகளைச் செய்யலாம். வாசிப்பு ஆர்வத்தை தூண்டுவதற்குப் பழக்கலாம். இவர்களின் பிள்ளைகளுக்கு அடிப்படைக் கல்வியை புகட்டுவதுடன், தொடர்ந்தும் தடையின்றி கல்வி கற்பதற்கென விசேட புலமை பரிசில் திட்டங்களையும் ஏற்படுத்த வேண்டும்.

யுவதிகளும், ஓரளவு தொழில் பயிற்சி பெற்ற பெண்களும் பிரயோசனமடையும் வண்ணம் தொழில் பயிற்சிகளையும், சுய தொழிலுக்கான முயற்சிகளையும் பயிற்றுவிக்க வேண்டும். தொழில் ஒன்றை செய்து ஜீவியம் நடத்தக் கூடிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். வீடு, சொத்துக்களை இழந்து வரும் இம்மக்களுக்கு ஸகாத் மற்றும் ஸதகா நிதிகள் மூலம் வீடமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கலாம். பொது வசதிகள், கல்வி வசதிகள், மற்றும் முஸ்லிம்களுக்கே உரிய கலை, கலாசார அறிமுகங்கள் பயிற்சிகளைத் தொடராக வழங்குவதன் ஊடாக ஆரோக்கியமுள்ள ஓர் சமூக அமைப்பை கட்டியெழுப்பலாம்.

புதிதாக இஸ்லாத்தைத் தழுவியவர்களின் விடயத்தில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்துகொள்ளும் இஸ்லாமிய சமூக நலன்புரி அமைப்புக்களும், தீன்பணி செய்யும் இயக்கங்களும் அவசியம் இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். தொழுவது, நிவாரணம் வழங்குவது மட்டுமல்ல நமது பணி. இஸ்லாத்தை ஏற்றதன் மூலம் தெருத் தெருவாக அலையும் ஒரு சமூகத்திற்கு கௌரவமான வாழ்வையும், அறிவையும், கலாசாரத்தையும் வழங்க வேண்டும். இதுவே மிகப் பெரிய பணி எனக் குறிப்பிடலாம்.

**-ஓட்டமாவடி அறபாத்.**

எனவே, அனைத்து அமைப்புகளும் ஒன்றிணைந்து ஒரு "கூட்டுழைப்பை" இவர்களின் மேம்பாட்டிற்காக அர்ப்பணிக்க வேண்டும். நன்கு திட்டமிட்டு, ஒழுங்கமைக்கப்பட்டு இத்திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். நீண்ட கால நிரந்தரத் திட்டங்களை முன்வைத்து இஸ்லாமிய நாடுகளின் தூதரகங்கள் ஊடாகவும், இஸ்லாமிய நாடுகளின் மூலமாகவும், நிதிவசதிகளை பெற்றுக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இங்குள்ள நமது கவனிப்பை காணும் இவர்கள் தமது பழைய மார்க்கத்திற்கே திரும்பிச் செல்லும் அவலத்தை உடனடியாக நாம் தடுத்து நிறுத்த வேண்டும். இந்த வசதிகள் என்பது மாற்று மதத்தினரை இஸ்லாத்தின் பக்கம் கவரும் உத்திகள் அல்ல. அதை இஸ்லாம் ஆதரிக்கவும் இல்லை. உள்ளத்தினால் இஸ்லாத்தை ஏற்று, இந்த சமூகத்தை நம்பி வந்துள்ள அவர்களுக்கு "இஸ்லாமிய சமூகம், நெறிப்படுத்தப்பட்ட ஒரு வாழ்வை வழங்குவது அந்த சமூகத்தின் தார்மீகப் பொறுப்பாகும்.

~~இவ்விசிறுபான்மை~~ செய்யும் அனைத்து அமைப்புகளும், இயக்க வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

# தொடரும் தோல்விகளில் துவளும் ஃபௌசியா

## நடந்த கதையின் நகல்

**- அபூ ருஸைக் -**


தலைநகரத்து முஸ்லிம்களில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவள்தான் ஃபௌஷியா. பாலத்துறை பக்கம் களனி கங்கையின் தீரத்தில் - அந்தப் பலகை வீடுகளில் வரிசையில் ஒன்றுதான் இந்தப் ஃபௌஷியாவின் வீடு. பக்கத்தே இருந்த வீடுகளெல்லாம் சுவர் வீடுகளாக - ஒற்றை மாடி வீடுகளாக மாறிவிட்டன. இப்போது. ஆனால் ஃபௌஷியாவின் அந்த வீடு மட்டும் இன்னும் பலகை வீடாகவே பாவம் சுமந்து நிற்கிறது.

அந்தப்பலகை வீட்டில் ஒரு சாதாரண நடுத்தர வாழ்வில் ஃபௌஷியாவின் தாய், தந்தை இருவரும். எப்படியோ அந்தக் குடும்பத்தில் "பிறந்து விட்டோமே" என்று இழுத்துச் செல்கின்றனர். மூத்தவளாக ஃபௌஷியா பிறந்த விட்டதால் குடும்பக் கஷ்டங்களை ஓரளவு ஃபௌஷியா புரிந்தேயிருந்தாள்.

ஃபௌஷியாவின் தந்தை உசைன் நானா பாலத்துறை மார்க்கட்டில் இஞ்சி-பச்சை மிளகாய், தேங்காய், முதலிய மூன்று சாமான்களை மட்டும் கூறு கூறுகளாக வைத்து விற்று அதில் கிடைக்கும் வருமானத்தில்தான் தன் குடும்ப வண்டியை ஓட்டுகிறார்.

தாய் மலே இனத்தைச் சேர்ந்த மாதரசி ...! "பிந்தாரி" என்பது ஃபௌஷியாவின் தாயின் பெயர். ஃபௌஷியாவைத் தொடர்ந்து மூன்று பிள்ளைகள். ஒரு தங்கை, இரண்டு தம்பியர். ஆக அறுவரைக் கொண்ட அடக்கமான குடும்பம்தான்!

எல்லோரையும் போல ஃபௌஷியாவும் - மற்ற சகோதரர்களும் ஒரு முஸ்லிம் கலவன் பாடசாலையில் படித்தனர். மூத்தவள் ஃபௌஷியா ருதுவானதோடு எட்டாம் வகுப்போடு நிறுத்தப்பட்டு விட்டாள். தங்கையும் அப்படியே இடைநடுவில் நின்றுவிட, தம்பியர் இருவரும்தான் தொடர்ந்து பாடசாலைக்குச் செல்கின்றனர்.



உசைன் நானா ஆ ஸ்மா (இ ாப்பு) ரோப்க்கு ஆ ானவர் என்பது அண்டை அயலவர்களுக்கெல்லாம் தெரிந்த விஷயம்! தான் கண்மூடு முன்னமே, மூத்த மகளை - ஃபௌஷியாவை "ஒருவன்" கையில் பிடித்துக் கொடுத்தவிட வேண்டும் என்பது உசைன் நானாவின் அடி மன ஆசை.

கால ஓட்டத்தில் எப்படியோ ஒரு மாப்பிள்ளை வந்து அமைந்தான். மாப்பிள்ளை கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்டவரல்ல. மலையகத்தில் பிறந்தாலும் நீண்டகாலமாக கொழும்பில்தான் வாழ்ந்து வருகிறார். மாப்பிள்ளையைப்பறிறி விசாரித்தும், விசாரிக்காமலும் ஒரு நம்பிக்கையின் பேரில் எப்படியோ ஃபௌஷியாவை கரை சேர்த்தனர்.

ஓராண்டு உருண்டோடியது. ஒரு பெண் குழந்தைக்கு ஃபௌஷியா தாயானாள். விதி சதியால் மாப்பிள்ளை ஒரு ஜில்மாக்காரன் - திருட்டுப் புத்தியுள்ளவன், ஏமாற்றுப் பேர்வழி என்பது ஃபௌஷியாவின் வீட்டாருக்கு நாளடைவில்தான் தெரியலாயிற்று. புதுப்பானை கரிப் பானையாய் ஆகிவிட்ட பின் ஒரு கரு ஃபௌஷியாவின் வயிற்றில் வளரத் துவங்கிவிட்ட பின் ஒட்டிவந்த உறவை வெட்டிவிட யாரால் தான் முடியும்....?

அதனால் பல்லைக் கடித்துக் கொண்டு "எப்படியும் வாழ்ந்து விடுவோம்" என்று தொடர்ந்த இல்லறத்தில் இப்போது ஒரு பெண் சிசுவுக்கு தாயாகிவிட்ட இனிமையில திளைத்துப் போயிருந்த ஃபௌஷியாவை ஒரு இடி செய்தி நிலை குலைய வைத்தது.

ஆம்... போதை வஸ்து (தூள்) விற்பனை விவகாரத்தில் ஃபௌஷியாவின் கணவரும் சம்பந்தம் என்ற குற்றச்சாட்டின் பேரில் பிடிபட்டுவிட்டான் என்பதுதான் அந்தத் தேள் கொட்டிய தீச் செய்தி.

"மகளுக்கு இப்படி நடந்துவிட்டதே.." என்ற தாளாத துக்கம் உசைன் நானாவை உருக்குலையச் செய்துவிட்ட சோகம் என்ன தெரியுமா? மருமகன் பிடிபட்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலைக்கு கொண்டு போகப்பட்டான். என்ற சோகம் சுமந்த சேதி ... அவரின் உயிரைக் குடித்துவிட்டது. இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

இப்போது கையிலே பச்சைக் குழந்தை; நெஞ்சிலே சோகம் இந்த ஃபௌஷியாவுக்கு நாள் செல்லச் செல்ல கணவன் இல்லாத இல்லறம்; தந்தை இல்லாத வாழ்வு ஃபௌஷியாவுக்கு சுமையானது. வீட்டின் செலவுக்குத் தாளம் போடும் பரிதாபம் தலை நீட்டவே, "வருமானத்திற்கு என்ன வழி" என்றறியாமல் மூத்தவள் ஃபௌஷியா தடுமாறினாள். தன் குழந்தைக்குப் பால்மா வாங்கவும் தடுமாறும் நிலை. சில நாட்களில் ....

ஒருமுடிவுக்கு வந்து விட்டாள் இந்த ஃபௌஷியா! அது என்ன முடிவு..? மத்திய கிழக்கு நாடொன்றுக்கு "ஹவுஸ்மேட்" டாக போவது என்பதுதான் அந்த முடிவு. யார் யாரிடமெல்லாமோ சொல்லி, கடன்பட்டு கடவுச் சீட்டு எடுத்து பஹ்ரைனுக்கு தன் குழந்தையைத் தன் தாயிடம் ஒப்படைத்துவிட்டு ஃபௌஷியா பறந்து போய்விட்டாள் மாதங்கள் ஆறு ஓடியே விட்டன. ஆறு மாதங்களுக்கு சம்பளம் எடுத்து ஃபௌஷியா தன் தாய்க்கு சீராக அனுப்பிவைத்தாள். ஏழாவது மாதம் சம்பளம் வரவில்லை. எட்டாவது மாதமும் எதுவுமில்லை. ஒன்பதாவது மாதமும் எதுவுமில்லை. ஏனிந்த மௌனம்..?

பஹ்ரைனிலிருந்து வந்த இன்னொரு "ஹவுஸ் மெய்ட்" ஒருநாள் ஃபௌஷியாவின் வீட்டைத் தேடி வந்தாள். அவள் மூலம் ஃபௌஷியா சில சாமான்களையும், பத்தாயிரம் ரூபா பணத்தையும் அனுப்பி வைத்திருந்தாள். இவற்றையெல்லாம் நேரில் தந்துவிட்டுப் போக வந்த அந்தப் பெண்மணி கூடவே இன்னுமொரு செய்தியையும் சாடமாடையாக உணர்த்திவிட்டாள். அந்தச் செய்தி கேட்டு மகிழ்வதா? நெகிழ்வதா? என்று புரியவில்லை! அவளும் ஒரு பெண்தானே!

தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் ஃபௌஷியாவின் நிலையறிந்து, அவளை மறு மணம் செய்துகொள்ள விரும்பியதை அடுத்து ஃபௌஷியாவும் அந்த தமிழக முஸ்லிமின் பேச்சில் மயங்கி இருவரும் ஒன்றாக இருப்பதுதான் அந்த செய்தி. பஹ்ரைனின் சட்டம் சம்மதித்தால் அங்கேயே நிகாஹ் செய்துகொள்வார்களாம். சம்மதிக்காவிட்டால் இருவரும் இலங்கை வந்து நிகாஹ் செய்து கொள்வார்களாம்.

எப்படியோ தன் மகளுக்கு ஒரு வாழ்வு அமைந்தால் சரி என்ற தாய்மையின் ஏக்கம் மானசீகமாக இம்முடிவை ஏற்றுக் கொண்டது. சில மாதங்களின் பின் இன்னொரு செய்தி இலங்கை இதயங்களை கலங்கச் செய்து விட்டது.

ஊருக்குப் போய் தன் பெற்றோரிடம் சம்மதம் பெற்று வருவதாகக் கூறிச் சென்ற அந்த தமிழ் நாட்டு மாப்பிள்ளை திரும்பி வரவேயில்லையாம். ஃபௌஷியா என்ன செய்வதென அறியாமல் தவிக்கிறாளாம். இடையில் வேலை செய்த வீட்டில் கொடுமை தாங்காது வீடு மாறி பிறைவேட்டாக வேலை செய்கிறாளாம். பாஸ்போர்ட் பழைய முதலாளி (பொஸ்) யிடம் மாட்டிக் கொண்டதாம்! என்ன செய்வாள்.

வீட்டுக்கு அனுப்பவும் கையில் காசில்லை. மறுமண உறவில் பூத்த புதிய உறவுக்கு "அவனை" நம்பி தண்ணீர் போல ஃபௌஷியா செலவளித்திருக்கிறாள். புதிய பாஸ்போர்ட் எடுக்கும் வழிமுறை தெரியவில்லை. ஒரு இலங்கைத் தம்பதி அவ்வப்போது இந்த ஃபௌஷியாவுக்கு உதவி வருகிறார்கள்.

வருடங்கள் இரண்டு முடிந்துவிட்டன. மகள் இன்று வருவாள் எனத்தாய் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்ததுதான் கண்ட பலன்! மகள் ஃபௌஷியா வந்தபாடில்லை. தாய்க்கு மகளைப்பார்க்க முடியவில்லை. மகளுக்கோ தன் மகளை - அந்தப் பச்சைக் குழந்தையை பார்க்கமுடியவில்லை. பாசமாக வளர்க்கவும் முடியவில்லை.

அந்நிய மண்ணிலே பாஸ்போர்ட் இன்றி தாய்நாடு திரும்ப வழியறியாது தவிக்கிறாள் ஃபௌஷியா! கட்டிய புருஷனும் ஒழுங்கில்லை. ஒட்டிய காதலனும் உருப்படியில்லை. வாழ்வில் தொடர்ந்து வந்த தோல்விகளின் அலைக்கழிப்பில் துவளும் இப்படியான ஃபௌஷியாக்கள் ஒருவரா? இருவரா?

நம்மில் ஒருத்தி - நம் நாட்டு சகோதரியின் "இத்தகைய" துயரைத்துடைக்க நம்மிடையே என்ன வழிமுறை இருக்கிறது? யார் இப்படியான பிரச்சனைகளுக்கு வழிகாட்டுவது. உலமாக்களா? அரசியல் தலைவர்களா? தனவந்தர்களா? ஊடகத்தார்களா? எவருமேயில்லை. யாருக்கும் அக்கறையில்லை.

விடிந்தும் விடியாத இந்தப் "பொழுதுகளுக்கு" விமோசனம் எப்போது கிடைக்கும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பொருளும் மனிதர்களும்

இந்நவீன யுகத்தில் எல்லாத் திசைகளிலும் பரவியுள்ள மனித செயற்பாடுகளில் போதைப் பொருட் பாவனையும் ஒன்றாகும். இப்பாவனை வளர்ச்சியடைந்த நாடுகள் முதல் வளர்முக, வறிய நாடுகள் வரையில் பரவியுள்ளன. இப்போதை வஸ்த்துக்கள் சமூக, பொருளாதார, கலாசார ஆரோக்கியத்திற்கு உகந்ததல்ல. அதனால்தான் போதைப் பொருள் பாவனை உலகின் பல நாடுகளிலும் பல விதமான பிரச்சினைகளைத் தோற்றுவித்து வருகிறது. இவை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றனவேயன்றி குறைவடைவதில்லை. இது அனுகுண்டை விட அபாயமானது. அனுகுண்டு உயிர்களை சில வினாடிகளில் கொன்றுவிடும் ஆனால் போதைப் பொருளோ சிறிது சிறிதாக அவஸ்த்தையோடு உயிர்களைக் கொல்லும். மனிதனின் வழமையான, சாதாரண செயற்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியனவே போதைப் பொருட்கள். இதனைப்பாவிக்கையில் மனித செயற்பாடுகள் மாற்றமடைந்து, மனிதனோ போதையூட்டப்பட்டவனாகி விடுகிறான். இதன் விளைவுகள் பலவாறு வெளிப்படும் அவை மனித ஆரோக்கியத்திற்கோ, சமூக நலன்களுக்கோ உகந்தவையாக இருக்காது. அதன் விளைவுகள் மனிதனை அழித்து குடும்பங்களையும், சமூகங்களையும் சிதைத்து விடக்கூடியதாகவே உள்ளன. போதைப் பொருள் பாவனையாளர்களால் பொருளாதார உற்பத்திகளில் முழுமையாக ஈடுபட முடியாததனால் உற்பத்தித் துறை வீழ்ச்சியடைகிறது.

போதைப் பொருள் பாவனையாளர்கள் பலவிதமான நோய்களுக்கு உட்படுகின்றனர். எயிட்ஸ், இருதய நோய், நரம்பியலுடன் தொடர்பான நோய்கள் குறிப்பிடத்தக்கவை. இப்பாவனையால் உடல் கெடுகிறது. போதை ஏற்பட்டால் கண்டிப்பாக உடலில் பாதிப்பேற்படும். உடம்பு சிறிதும் பாதிப்படையாத நிலையில் போதை ஏற்படாது என்பது மருத்துவர்களின் கருத்து. போதை தரக்கூடிய அனைத்தும் மனிதனின் உணர்ச்சி நரம்புகளைத் தூண்டி விபச்சாரம் போன்ற பாவங்களில் வீழ்த்துகிறது.

எயிட்ஸ் நோயாளர்களுள் 75% போதைப் பொருள் பாவனையாளர்களென ஆய்வுகள் கூறுகின்றன. சென்ற ஆண்டு இதே "குடியால் இரத்தக்குழாய் பாதிக்கப்பட்டு இறந்தவர்கள் 12,000 பேர், போதையால் விபத்துக்[redacted]தவர்கள் 8,000. புகை பிடித்தலும் போதைப் பொருள் பாவனையில் அடங்கும்.

"புகைத்தல் சம்பந்தப்பட்ட நோய்களால் வருடம் ஒன்றிற்கு ஐக்கிய அமெரிக்காவில் 40,000 பேரும், மேற்கு ஜேர்மனியில் 140,000 பேரும், பிரித்தானியாவில் 100,000 பேரும், இத்தாலியில் 70,000 பேரும் மரணிக்கின்றனர்."

"அடுத்த 25 ஆண்டுகளுக்குள் 50 கோடி மக்கள் புகை பிடித்தல் காரணமாக இறப்பார்கள் என உலக சுகாதார ஸ்தாபன அறிக்கை கூறுகிறது." "புகைத்தலினால் உலகில் ஒவ்வொரு வினாடிக்கும் ஒருவர் வீதம் மரணித்துக் கொண்டிருக்கும் அதேவேளை புகைத்தலுக்காக செலவளிப்பர்களின் தொகையும் கூடிக்கொண்டே செல்கிறது."

"உலக சுகாதார ஸ்தாபன 1998 ஆம் ஆண்டு அறிக்கையின்படி இலங்கையில் 40 000 ஹெரோயின் பாவனையாளர்கள் உள்ளனர். இவர்களுள் 90% மானவர்கள் ஏற்கனவே புகை பிடிக்கும் பழக்கமுடையவர்களாக இருந்வர்கள் என்பது."



எல்லா நாட்டிலும் போதைப் பொருள் பாவனை காணப்படுகிறது. அவற்றை சில நாடுகள் பிற நாடுகளிலிருந்து தருவிக்கின்றன. ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டிற்குக் கடத்தப்படுவதும் உண்டு. ஒவ்வொரு அரசும் "குடி குடியைக் கெடுக்கும் குடிப்போரது உடல் நலம் கெடும்", "புகைத்தல் புற்று நோயை உண்டுபண்ணும்" என அறிவிக்கத்தான் செய்கின்றன. ஆனால் தகுந்த சட்டங்களையிட்டு தடுப்பதில்லை. மனித வாழ்விற்கு உலைவைக்கும் இவ்வரக்கனை துரத்தியடித்து மானிடப் பிறவிகளை ஆரோக்கியத்துடன் வாழவைக்க ஒவ்வொருவரும் திட சங்கற்பம் பூணவேண்டும்.

அப்பாஸ் எம் மஃரூப்
தேசியக் கல்விக் கல்லூரி,
அட்டாளைச்சேனை




**1998** அப்போது அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த பில் கிளின்டன் மிகவும் கவலை தேய்ந்த முகத்துடன் தொலைக்காட்சியில் தோன்றி - அமெரிக்க மக்களுக்கு ஒரு செய்தியை விடுத்தார்.

# உசாமா பின் லேடன்

அவரது செய்தியின் சாரம் - அமெரிக்காவுக்கு எதிராக மிகப் பெரும் இஸ்லாமிய அடிப்படைவாத சக்தி ஒன்று மிகப்பரந்தளவில் தலை தூக்கிவருவதாகவும் - இவ் எதிர்ப்பு சக்தி ஆப்கானிஸ்தான், சூடான் போன்ற நாடுகளில் நிலை கொண்டிருப்பதாகவும், இவ் அமெரிக்க எதிர்ப்பு சக்திகள் மீது "குருஸ் மிசைல்" தாக்குதலை அமெரிக்க அரசாங்கம் தொடுக்க தொடங்கி விட்டதாகவும் அறிவித்தார் கிளின்டன். அது ஒரு போர்ப் பிரகடனமாகவே இருந்தது.

இப்பிரகடனத்தில்தான் இந்த அமெரிக்க எதிர்ப்புச் சக்திக்கு "ஒஸாமா பின்லேடன்" என்பவர் தலைமை தாங்குவதாகவும், இவரை அழிப்பதும், இவரது இயக்கமான அல்-காய்தா அமைப்பின் வலைப் பின்னல்களைத் தகர்ப்பதுமே இத்தாக்குதல்களின் பிரதான நோக்கமென அமெரிக்க மக்களை ஏமாற்ற முயற்சித்தார் கிளின்டன். ஒஸாமா பின் லேடனால் இலக்கு வைத்து தகர்க்கப்பட்ட கென்யா, தன்சானியாவிலுள்ள அமெரிக்க தூதரகங்கள் மீதான தாக்குதல்களுக்கு இப்போது தொடங்கியுள்ள தாக்குதல்கள் பதிலடியும் பழிவாங்கும் செயலுமாக அமையும் எனவும் பெருமிதப்பட்டுக் கொண்டார். அன்றைய அமெரிக்க ஜனாதிபதி.

அமெரிக்கா, உலக முஸ்லிம்களை திட்டமிட்டு அழிப்பதற்கு ஒரு எதிரியை பின்லேடனின் பெயரால் கட்டமைப்பதை அன்று யாரும் பெரிதாக எடுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். பின்லேடன் பற்றி அப்போது உலகத்திலுள்ள பொது மக்களில் கணிசமானோர் அறிந்திருக்கவில்லை. மிகப் பகிரங்கமாகவே அமெரிக்காவுக்கு எதிரான - முஸ்லிம் சக்தியாக ஒஸாமா 1998 இல் அமெரிக்க ஆளும் தரப்பால் பிரகடனப்படுத்தப்படுகிறார். உலகில் சகல மூலைகளிலும் அமெரிக்காவை எதிர்ப்பதற்கும் அதற்கு சவாலாக பெரும் செல்வத்துடனும் தொழிநுட்ப அறிவுடனும் பெரும் திட்டத்துடனும் ஒஸாமா செயற்பட்டு வருகிறார் என்ற கண்டுபிடிப்பும், அமெரிக்க எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கு உலகின் பல பாகங்களிலும், முஸ்லிம் போராட்ட அமைப்புக்களை ஏற்படுத்தி அவற்றை போஷித்து வளர்த்து அவற்றை இயக்கி வருகிறார் என்கின்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் ஒஸாமா பின்லேடன் மீது அமெரிக்க நிர்வாகத்தினால் சுமத்தப்பட்டன.

அமெரிக்காவின் வரலாற்றில் எப்போதும் தனது எதிரியாக ஒரு தனி மனிதனை குற்றம் சாட்டியது கிடையாது. அச்சமடைந்தது கிடையாது. ஆனால் முதல் தடவையாக பின் லேடனை அமெரிக்க நிர்வாகம் அன்று அமெரிக்காவின் எதிரியாக பிரகடனப்படுத்தியது.

இது நாள் வரை மௌனமாக இருந்த பின் லேடன் அமெரிக்காவுக்கு எதிராக மிகப் பகிரங்கமான போர்ப் பிரகடனத்தை வெளியிட்டார்.

இந்தப் போர்ப் பிரகடனம் வெறுமனே ஒரு கோஷம் மாத்திரமல்ல. மாறாக செயலும் உறுதியான இலக்கும் கொண்ட மிகக் கட்சிதமான பிரகடனம் தான். அமெரிக்காவை உலக முஸ்லிம்களின், அடக்கப்படும் மக்களின் எதிரியாகவே பின்லேடன் வெளிப்படுத்தினார்.

பின்லேடன் ஒரு சாதாரண மனிதனல்ல. அவர் சர்வதேச இஸ்லாமிய சக்திகளின் உயிர் நாடியாக உள்ளார். கொடூரமான அமெரிக்காவின் ஆதிக்கத் திமிரை - அதன் முதுகெலும்மை உடைக்கக் கூடிய வல்லமை வாய்ந்தவராக தன்னை நிலை நிறுத்தியுள்ளார். அவர் இன்றைய இஸ்லாமிய உலகின் போராட்டத்திற்கான தலைமையாகவும் புத்தி கூர்மை மிக்கவராகவும் விளங்குகிறார் என பின்லேடனை இராணுவ ஆய்வாளர்கள் மதிப்பிடுகின்றனர். அவரது பரந்துபட்ட செல்வாக்கு உலகம் பூராகவும் வியாபித்துள்ளது. எதிரிகளை அழிப்பதில் மிக உறுதியான செயற்பாட்டாளராகவும் அவரை வரலாறு நிலை நிறுத்துகிறது. ஒசாமா ஒரு தனி மனிதனல்ல பாரிய ஒரு எதிர்ப்புச் சக்தியின் ஒரு அங்கம் தான். குழுவாக இயங்குவதும் உறுதியான இலக்கை அடைவதற்குமான தியாக சிந்தை பின்லேடனை சார்ந்தவர்களிடம் வியக்குமளவிற்கு உள்ளது என நிரூபிக்கப்பட்டுள்ளது.

1990களில் உலகின் நிலைப்பாட்டில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதன் போக்கினாலும், பல்வேறு தொடர்புகளினாலும் பின்லேடனின் வாழ்வும், உலகக் கண்ணோட்டமும் அவரது அரசியலும் புடம் போடப்படுகிறது.

இஸ்லாத்திற்கும் அமெரிக்காவுக்கும் எதிரான போராட்டம் பல்லாண்டு வரலாற்றைக் கொண்டது. மேற்குமயப்படுத்தல் நவீனத்துவம் என்ற பெயரில் உருவான ஆதிக்கம் என அதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு. ஈரானிய அறிஞரும் அறிவியல் அறிஞருமான "வெல்மன் ஹெவேடா" கிறிஸ்த்தவ ஆதிக்கத்தில் அரச ஆட்சிகளுடனான மோதலின் விளைவாக 16ஆம் நூற்றாண்டு முதல் இஸ்லாமிய நாகரீகம் பல்வேறு சவால்களைச் சந்திக்க வேண்டி ஏற்பட்டது. 11ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் இஸ்லாமிய உலகம் தொடர்ச்சியாக பல பின்னடைவுகளைச் சந்திக்க வேண்டி ஏற்பட்டது. சிலுவை யுத்த வீரர்கள் மத்திய கிழக்குப் பகுதி நாடுகளை, முஸ்லிம் பிரதேசங்களை ஆக்கிரமித்து அங்கு தமது கிறிஸ்தவ நாடுகளை நிறுவினர். அதன் பின் ஸ்பெயின், போத்துக்கல் போன்ற பகுதியிலிருந்து முஸ்லிம்களை விரட்ட ஆரம்பித்தனர். முஸ்லிம்களால் இப் பெரும் ஆக்கிரமிப்புக்களை, யுத்தங்களை எதிர்கொள்ள முடியாமல் போனது. இதனால் இஸ்லாமிய ஆட்சிக்கும் அச்சுறுத்தல் தொடர்ந்தது என்கிறார் அவர்.

தொடர்ச்சியான இவ்வரலாற்றின் சோகங்களின், விளைவுகளின் காரணமாக இஸ்லாமிய சமூகங்களிடம் இருந்து பல்வேறு உறுதி பெற்ற தலைமைகள் - குறிப்பாக இராணுவத் தலைமைகள் வெளிக் கிளம்புகின்றன. பல போர்கள் வருகின்றன. சுல்தான் ஸலாஹுதீன் தொடக்கம் இன்றைய பின்லேடன் வரை.

(ஒஸாமா இன்னும் வருவார்)

# நம்மை நாம் இனங்காணாமல் வாழ்கிறோமே..!

நமது வாழ்வின் அர்த்தங்களுக்கும் இன்று வாழும் நடைமுறைகளுக்குமிடையே வேறுபாடுகளே அதிகமாகிவிட்டது. முஸ்லிம்கள் என்ற பெயரளவு விலாசங்களோடு எமது இஸ்லாமிய அடிப்படைகளையும், பண்புகளையும் வாழ்வின் பல பக்கங்களில் தொலைத்துவிட்டு இன்றைய நவீனத்தின் மீது ஏறிச் சவாரி செய்கிறோம்.

நமது வாழ்வின் உண்மைகளையும் இலட்சியங்களையும் இப்போது யாரிடமோ விற்றவர்களாகவும் இலாபங்களுக்காக கையேந்துபவர்களாகவும் நம்மை நாம் இனங்காட்டிக்கொண்டு பெறுமானங்களை விட்டு விட்டு வெறும் சில்லறைகளையே சேகரித்துள்ளோம்.

உண்மையிலேயே நிகழும் அத்தனை நிகழ்வுகளும் இறைவனின் (கழா-கத்ர்)நாட்டப்படியே நடைபெற்றுக் கொண்டிருப்பதையும் மறந்து செயற்படுகின்றோம். இதனால்தான் நம்மை அறியாமலே இறை கோபங்கள் அவ்வப்போது நம்மைச் சூழ்ந்தும் கொள்கிறது.

அன்றாட வாழ்வின் மீது இறையோனை நோக்கி நடை, உடை, பாவனை முதல், தூக்கம் வரை புனிதங்களோடு இறையச்சம் பேணிச் செயற்படவே இஸ்லாமியனாக இருக்கிறோம். மாறாக நமது செயற்பாடுகளுக்கும் இஸ்லாமியத்திற்கும் தூரமேயில்லை. ஆனால் நமது வாழ்வில் மாற்றுக் கலாசாரங்களின் காரணமாகவும், ஏதோவோர் இனம் புரியாத சூழல்களின் காரணமாகவும் யதார்த்தங்களைத் தேடிக்கொள்ள வேண்டியவர்களாகிவிட்டோம். இன்றைய தேவைகள் இதுதான் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

இவை எல்லாவற்றையும் அடையக்கூடிய சக்தியாக நாமே மாறவேண்டியுள்ளோம். நமது மன வளர்ச்சியும், மனப்பக்குவங்களும், ஆற்றலும் எம்முள் முளைக்க வேண்டும். வெளிப்படையாகத் தெரியும் கண்ணோட்டங்களால் விடயங்களைச் செயற்படுத்திக் கொண்டிருப்பதைவிட எமது சிந்தனைகள் தெளிவு பெற்று உண்மையான அர்த்தங்களைக் கொணர்விக்க வேண்டும்.

வாழ்வுப் பெறுமானங்கள் காலங்களைத் தொலைத்து இஸ்லாமிய அடிப்படைகளை மீறி நெறி தவறிய செயற்பாடுகளைக் கோர்த்து எதிர்கால சமுதாயத்தின் முன்னிலையில் ஒப்படைக்கப்படுமாக இருந்தால் அங்குதான் பெரும் விபரீதங்களை நமது சமூகம் பெற்றுக்கொள்ள வேண்டியதாகிவிடும். இவைகளை விட்டும் விடுபட்டு இறை வசனம் குறிப்பிட்டுள்ளது போல்

*"மனிதர்களே! நிச்சயமாக நாமே உங்களை ஒரு ஆண், பெண்ணிலிருந்து படைத்தோம். நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்காக உங்களைப் பல கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். நிச்சயமாக உங்களில் அல்லாஹ்விடத்தில் மிகுந்த மரியாதைக்குரியவர்கள் உங்களில் மிகுந்த இறையச்சமுடையவர்களே!" (49:13)* நமது மனங்கள் பக்குவமடைய வேண்டும். நமது செயற்பாடுகளின் உறுதி எமது மனிதங்களுடாக முளைக்காத வரை எமது ஒருமைப்பாடுகள், நமது எதிர்பார்ப்புக்கள், நமது இலட்சியங்கள், நமது போராட்டங்கள் ஒவ்வொன்றினதும் இழப்புக்களையே மீளவும் பெற்றுக் கொள்ள வேண்டியவர்களாகுவோம்.

நமது வாழ்வின் உயிரோட்டப் பெறுமானங்கள் நமக்காகக் காத்திருக்கின்றது. நமது இஸ்லாமியத்தின் முழுமைகள் ஒவ்வொருவரிடத்திலும் பக்குவப்படுத்தப்பட்டு இறை கட்டளைகளோடு ஒருங்கிணைய வேண்டும். ஒதுங்கிப் போகவோ, நெறி பிறழ்ந்து போகவோ நமது செயற்பாடுகள் ஒருக்காலமும் இருந்துவிடக்கூடாது.

பிழையான புரிதல்களும் தவறான நடைமுறைகளும் எந்தளவு சமுதாயத்தில் புரையோடிக் கொண்டிருக்கின்றது புரிகிறதா? அல்லது சிந்திக்கிறோமா? ... இல்லவே இல்லை...

நமது இலட்சியங்களும், வெகுமதிகளும் நம்முள் காணப்படும் இருண்ட பக்கங்களால் நிரப்பப்பட்டிருப்பதை விடுவிக்க வேண்டும்.

நமது செயற்பாடுகள் உயர்ந்த இலட்சியங்களோடு கோர்க்கப்பட்ட வாழ்வினுள் அடங்கியிருக்கிறது என்பதை ஒவ்வொருவரும் உணர்வோமாக.

முஹம்மட் இஸ்மாயீல் சித்தி றபீக்கா
சம்மாந்துறை.

# மூதூர் நெருப்பெரிந்த பூமியில் சுய புகழும், நஷ்டஈட்டு விழாவும்



புலிகளின் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்க மூதூர் வருகிறது முஸ்லிம் காங்கிரஸ் அல்-ஹிலால் விழாக் கோலம். கம்படிகள், கோலாட்டம் அதிகாரிகளுக்கும் அரசியல் வாதிகளுக்கும் அமோக வரவேற்பு

பலத்த பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு மத்தியில் காசோலைகளுக்காகக் காத்திருந்த பாதிக்கப்பட்ட மக்களாலும், பொது மக்களாலும் விழா மண்டபம் நிரம்பி வழிகிறது. ஒலிவாங்கிக்கு முன்னால் வருகிறார் சின்னத் தெளபீக் எம்.பி

நாட்டின் சமாதானத்தைக் கொண்டு வந்ததற்காக இன்று ரணில் மட்டுமே புகழப்படுகிறார். சமாதானத்தைக் கொண்டுவந்த ரணில் அரசை அமைக்க முட்டுக் கொடுத்த ரவூ°ப் ஹக்கீமும் புகழப்படவேண்டியவர் என்கிறார்.

திமர் தெளபீக் எம்.பி. வருகிறார். மறைந்த தலைவர் அஷ்ர°ப்பிற்கு கல்முனை ஒரு கண், மூதூர் ஒரு கண். தற்போதைய தலைவருக்கு இரண்டு கண்களும் மூதூரே என்றார்.

தலைவர் - அமைச்சர் ரவூ°ப் ஹக்கீம் வருகிறார். ஒலிவாங்கி முன்னால் இரு தெளபீக்குகளையும் சாடுகிறார் - பாடுகிறார். சின்னத் தெளபீக்கைப் பார்த்து சமாதானத்தின் புகழ் தனக்கு தேவையில்லை என்கிறார். திமர் தெளபீக்கைப் பார்த்து ஒவ்வொரு தந்தையும் தன் மீதுதான் இரக்கம் என்று சொல்வது சகஜம்தான் என்கிறார்.

ஒவ்வொரு நிமிடமும் மரண

நிச்சயம் தலைவர் மரணித்தால் முஸ்லிம் காங்கிரஸை வழிநடத்த வேண்டிய நாளையத் தலைவர்கள் இவ்வாறு பேசக் கூடாது என்கிறார்.

இந்த முட்டுக் கொடுத்த முஸ்லிம் காங்கிரஸுக்கு உயிர்ப்பலிகள் கொடுத்து வாக்களித்த மூதூர் மக்களுக்கு சமாதானத்தின் பயன்களாக பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை, மின்சாரத் தடை, மீன்பிடித் தடை நீளுகிறது பட்டியல்.

புலிகள் மூதூருக்கு வரமுடியும். முஸ்லிம்களுக்கு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு - தமிழ்க் கிராமங்களுக்கு செல்ல முடியாது. மூதூர் வரும் தமிழர்களுக்கு அலுவலகக் கருமங்கள் தவிர்த்து, முஸ்லிம்களுடனான பேச்சு முதல் அனைத்திற்கும் புலிகள் தடை.

கண்டி - யாழ் ஏ-9 நெடுஞ்சாலை திறக்க புலிகளுக்கு அக்கறை. அரசு சட்ட அங்கீகாரம். மூதூர் - கிண்ணியா ஏ-15 நெடுஞ்சாலையை திறக்க புலிகள் தடை அரசு மௌன அங்கீகாரம். மூதூருக்கு மின்சாரம் வர புலிகள் தடை. இறால் குழியில் மின்கம்பங்கள் தறிப்பு. மூதூரின் கண்கள் பல நாட்களாக இருண்டு கிடக்கிறது.

தலைவருக்கு தங்கியிருந்து பார்க்கவோ நேரமில்லை. கடல் வலயம் அரசுக்கும் புலிகளுக்கும் சர்ச்சை. மூதூர் முஸ்லிம்கள் மீன்பிடிக்கச் செல்ல முடியாது. புலிகளால் தினமும் தண்டனை. தலைவர் வந்த தினமும் பலர் புலிகளால் தாக்குதல் கேள்விப்பட்டதாகவும் ஒலிவாங்கியில் சொல்லகிறார் தலைவர்.

காசோலை வழங்கி முடிகிறது. புறப்படுகிறார்கள் இருண்ட கண்டத்தில் இருந்து ஒளிரும் பிரதேசத்தை நோக்கி - இன்றையத் தலைவரும் நாளையத் தலைவர்களும். புகழ் பாடும் அரசியலால் மக்களுக்கு விடிவு எப்போது!

*- மூதூர் செய்தியாளர்*

**ஒருவர் ஒரு கருத்தை சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா?**

நாம் எழுதுவதற்கும், நமது மக்களுக்குள் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கும் விவாதங்களைத் தொடங்கவும், தொடரவும் தயாராகவுள்ளோம்! உங்கள் கருத்துக்களை சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்!

*பிரதம ஆசிரியர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் மூதூர் முஸ்லிம்கள் மீதான வன்முறைகள்

01. 17.04.2003 மூதூர் தோப்பூர் பிரதேசங்களில் முஸ்லிம்கள் மீது தமிழ் ஆயுதபாணிகளால் மேற்கொள்ளப்பட்ட மிக மோசமான தாக்குதல் சம்பவங்களைத் தொடர்ந்து பிரதேச மக்கள் மீது மீண்டும் மீண்டும் பல்வேறு அத்துமீறல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதை தங்களின் மேலான கவனத்திற்கு அறியத் தருகின்றோம்.

02. 15.05.2003 அன்று முகம்மது பரீட் (39) என்ற தாஹா நகரைச் சேர்ந்த மீனவ சகோதரர் ஒருவர் நாவலடி ரஞ்சன் (இவர் ஜபல் நகர் சிலுவை உடைப்பு கலவரங்களின் போது முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களுக்கு பொறுப்பானவர்) மற்றும் கிருபா, சகாயன், ரூபன் என்பவர்களுடன் துப்பாக்கிகளைக் காட்டி இது தமிழர்களின் பிரதேசம் இங்கு முஸ்லிம்கள் மீன் பிடிக்கக் கூடாது என மிரட்டி விரட்டியடித்துள்ளார்.

03. 16.05.2003 (வெள்ளி) பி.ப. 11.10 மணியளவில் தாஹா நகர் மூதூர் - 07 ச் சேர்ந்த அப்துல் மஜீது பஸீர் (34) எனும் சகோதரரின் சுமார் 35.000.00 ரூபா பெறுமதியான வலைகள், தோணியுடன் கிருபா, சகாயன், ரூபன், எமன்ஜூஸ் என்பவர்களால் நாவலடி பிரதேசத்திற்கு கடத்திச் செல்லப்பட்டுள்ளது. இப்பகுதி இராணுவ காவலரன் அருகே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இச்சம்பவம் மூதூர் கத்தோலிக்க தேவாலய பங்குத் தந்தையான அவர்களிடம் முறையிடப்பட்டு அவை மீளப்பெற்றுத் தரப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை.

04. 24.05.2003 தக்வா நகரைச் சேர்ந்த முகைதீன் தம்பி ரஸ்மி (22) என்பவர் கங்கை முகத்துவார பகுதியில் கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டு விரட்டி அடிக்கப்பட்டுள்ளார்.

05. 25.05.2003 நெய்தல் நகரைச் சேர்ந்த நாகூரான் யூனுஸ் (35) சூடக்குடா என்னும் இடத்தில் மீன் பிடிக்க விடப்பட்ட வலைத்தொகுதி (பெறுமதி சுமார் 60.000.00) புலிகளால் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

06. 26.05.2003 அன்று பி.ப. 6.15 மணியளவில் சித்திக் கலீம் (60) எனும் தாஹா நகரைச் சேர்ந்த மீனவர் நாவலடி ரஞ்சன் என்பவரால் பயமுறுத்தப்பட்ட பின் தலைக்கு மேலாக இரு தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. அத்துடன் இம்மீனவரது வலையை ஆற்றிலிருந்து எடுக்கமுடியாது தடைசெய்யப்பட்டது. இதே தினம் மேலும் பல மீனவர்கள் குறித்த நபரின் குழுவினரால் பயமுறுத்தல்களுக்குள்ளாகியது குறிப்பிடத்தக்கது.

07. 27.05.2003 }பீப் நகரைச் சேர்ந்த மீனவ சகோதரர்களான அப்துல் கபீர் பஸ்லின் (23), அந்தோனி முகம்மது றியாஸ் (25) (புதிதாக இஸ்லாத்தைத் தழுவியவர்) என்பவர்களுக்குச் சொந்தமான ரூபா 18,000.00 பெறுமதியான மீன் பிடி வலைகள் மறவர் படை உறுப்பினர்களால் பலாத்காரமாக பறித்தெடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

குறிப்பு:- மூதூர் முஸ்லிம்களின் பொருளாதார இலக்குகள் மீது மிகவும் திட்டமிட்ட வகையில் புலிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் அச்சுறுத்தல்கள் தொடர்கதையாக உள்ளன. இச்செய்திகள் பொதுவாக செய்தி ஊடகங்களில் போதியளவு இடம்பெறாமை எமது மக்களை அதிக ஏமாற்றத்திற்கு உள்ளாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

08. 29.05.2003 மு.ப. 5.30 க்கு தக்வா நகரைச் சேர்ந்த அப்துல் கமீது முபாரக் (35) என்ற ஏழை மீனவரின் மீன்பிடி வலை நாவலடி (கங்கை முகத்துவாரம்) பகுதியில் வைத்து புலிகளின் மறவர் படையைச் சேர்ந்த தாஹா நகர் ரூபன் என்பவரால் துப்பாக்கி மூலம் பயமுறுத்தப்பட்டு சுமார் 35,000 ரூபா பெறுமதியான வலை பறித்தெடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

09. 10.06.2003 அன்று ஜின்னா நகர் (59ஆம் கட்டை) யைச் சேர்ந்த செல்வநாயகம் மற்றும் கோபால் எனும் தமிழ் சகோதர்களுக்குச் சொந்தமான இரு வீடுகள் முஸ்லிம்களால் எரிக்கப்பட்டுள்ளதாக தமிழ் தரப்பினரால் ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு முழு ஜின்னா நகர் முஸ்லிம்களும் பயமுறுத்தப்பட்டுள்ளனர்.

10. 10.06.2003 அதிகாலை மூதூர் ப.நே.கூ.ச திற்குச் சொந்தமான கிளிவெட்டிப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மாதிரி கடைத்தொகுதி புலிகளினால் முற்றாக கொள்ளையடிக்கப்பட்ட பின்னர் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது. இதனால் மூதூர் ப.நே.கூ.ச க்கு ஏற்பட்ட நஷ்டம் 10 இலட்சத்திற்கும் அதிகமென மதிப்பிடப்பட்டுள்ளது. (இக்கடைக்குச் சொந்தமான பொருட்கள் நேற்றே (09.06.2003) லொறிகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது என்பதுடன் இம்மாதிரிக் கடைக்கான கையிருப்பு கணக்குகள் நாளை அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட இருந்தமையும் குறிப்பிடத்தக்கது)

11. 11.06.2003 அன்று கிளிவெட்டி மாதிரிக்கடை கொள்ளையானது மூதூர் பிரதேச முஸ்லிம்களாளேயே மேற்கொள்ளப்பட்டது எனவும் நீல நிற மூதூர் பகுதி வேன் ஒன்றில் வந்தவர்களே மாதிரிக்கடைக்கு தீ வைத்தனர் என்றும் புலிகளால் மிகப்பெரும் புரளியொன்று கிளப்பிவிடப்பட்டது. இச்செயலானது எவ்வகையிலேனும் மூதூர் முஸ்லிம்களின் உணர்வுகளைத் தூண்டி அவர்களை வன்முறையை நோக்கி இழுத்துவிடுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தமை இங்கு கூர்ந்து நோக்கத்தக்கது.

12. 11.06.2003 அன்று மேற்குறித்த வன்முறையைத் தொடர்ந்து ஆஷாத் நகர் (58ஆம் கட்டை) எனும் பகுதியைச் சேர்ந்த 10ஆம் கண்டம் எனும் இடத்தில் அமைந்துள்ள அப்துல் கபூர் (46) எனும் முஸ்லிம் சகோதரரின் வீடு மற்றும் தோட்டம் முற்றாக எரித்து சேதமாக்கப்பட்டுள்ளது. மேற்படி சகோதரரின் காணிகளை ஏலவே தமிழ் அமைப்புகள் அதிக விலை கொடுத்து வாங்க முயன்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

13. 01.07..2003 தோப்பூர் பிரதேசத்தைச் சேர்ந்த முகம்மது பரீட் (39) என்ற முஸ்லிம் சகோதரர் அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகளால் அவரது வீட்டில்வைத்து நள்ளிரவு 1.10 மணியளவில் சுட்டுக்கொள்ளப்பட்டார்.

14. 02.07.2003 ஜாயா நகர் மூதூர்-05ஐ சேர்ந்த அதாவுல்லாஹ் என்றழைக்கப்படும் செய்யது முகம்மது அபூக்கர் (39) என்ற முஸ்லிம் சகோதரர் சுமார் ரூபா 65,000 பெருமாதியான 06 கரவைப் பசுக்கள் ஜபல் நகர் (64ஆம் கட்டை) எனும் இடத்தில் வைத்து புலிகளின் துணைப்படையான மறவர் படையைச் சேர்ந்த உறுப்பினர்களால் பச்சைநூர் என்னும் பகுதிக்கு கடத்திச் செல்லப்பட்டு பின்பு உழவு இயந்திரம் மூலம் சம்பூர் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இது விடயமாக இப்பிரதேச புலிகளின் துணைப்படையின் பொறுப்பாளரான இராசு என்பவரைத் தொடர்பு கொண்ட போது தாம் அதனை செய்யவில்லை என்பதை மறுத்ததுடன் இந்நிகழ்வு முஸ்லிம் வியாபாரிகளாளேயே செய்யப்பட்டுள்ளது. என மிரட்டலுடன் கூறினார்.

15. 06.07.2003 மு.ப. 9.30 மணியளவில் பச்சைநூர் என்னும் வயல் பிரதேசத்தில் வைத்து பின்வரும் முஸ்லிம் விவசாயிகள் மீது பலத்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.
ஐ. இப்ராகிம் சேகுநூர்தீன் (43) - அக்கரைச்சேனை
ஐ. முகம்மது சத்தார் (33) - அக்கரைச்சேனை
மேற்குறித்த இரு முஸ்லிம் விவசாயிகளை அந்தோனி செல்லா, மூர்த்தி குமார் என்ற இரு மறவர் படை உறுப்பினர்களே தாக்கியுள்ளதாக குறித்த விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

16. மூதூர் பிரதேசத்திற்கு வழங்கப்படும் மின்சார வினியோகம் 06.07.2003 அன்று புலிகளின் இரால்குழி பிரதேச மறவர் படை மூலம் துண்டிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இரால்குழி பிரதேசத்திற்குரிய மின்விநியோகம் மேற்கொள்ளப்படும் வரை மூதூர் பிரதேசத்திற்கான மின்விநியோக அனுமதி வழங்கப்பட மாட்டாது. என இலங்கை மினசார சபை ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

17. 07.07.2003 அன்று மு.ப. 6.00 மணியளவில் நாவலடி கங்கை முகத்துவாரப் பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற தக்வாநகரைச் சேர்ந்த முஸ்லிம் மீனவர்களான ஏ.ஆர். ஜூனைது (43), கே.எம். ஜலீல் (36), டபிள்யு.எம். நிஸ்பின் (23) என்பவர்கள் புலிகளின் துணைப்படையான மறவர் படையின் நாவலடிப் பொறுப்பாளரான ரஞ்சன் (இவர் 64ஆம் கட்டை சிலுவை உடைப்பு கலவரங்களின் சூத்திரதாரி) இவருடன் கிருபா, சகாயம், என்ற உறுப்பினர்கள் சகிதம் மீனவர்கள் போல் வேடமிட்டு மேற்குறித்த மீனவர்களை ஏ.கே.47 ரக துப்பாக்கி மூலம் மிரட்டி நாவலடி கரைப்பகுதிக்கு இழுத்துச்சென்று இவர்கள் மீது சுமார் 3.00 மணி நேரமாக மிகக் கொடூரமான முறையில் சித்திரவதை மற்றும் உள இம்சைகளுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் மோசமான காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

18. 10.07.2003 அன்று மு.ப. 7.00 மணியளவில் சித்துழுந்தான் எனும் பகுதியில் வைத்து பின்வரும் முஸ்லிம் சகோதரர்களுக்குச் சொந்தமான வண்டில்கள் மாடுகளுடன் புலிகள் இயக்க உறுப்பினர்களால் பலவந்தமாக பறித்துச் செல்லப்பட்டுள்ளன.

| பெயர் | வயது | இழப்பு |
|---|---|---|
| 1) முஸ்தபா தசூர் | 27 | 60,000.00 |
| 2) நசார் மும்தாஸ் | 24 | 55,000.00 |
| 3) முஸ்தபா பரீஸ் | 26 | 55,000.00 |
| 4) தௌபீக் நசார் | 24 | 40,000.00 |

குறிப்பு:- மேற்குறித்த சகோதரர்களுள் இருவர் புலிகளினால் பலத்த தாக்குதல்களுக்கு இலக்காகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்குறித்த தாக்குதல் சம்பவமானது இலங்கைக் கண்காணிப்பு குழு தலைவருக்கு முஸ்லிம்கள் மீதான அத்துமீறல்கள் இனி இடம்பெறாது என புலிகாள் வாக்குறுதியளிக்கப்பட்ட மறுதினமே நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## நஷ்டஈடும் நாமும்...

மீன்பிடிப் படகுகள் என்பன இத்தாக்குதல்களால் தீயில் சாம்பலாகின. இருப்பதற்கு வீடுகள் இல்லை. தொழில் செய்வதற்கு பொருளாதார உதவிகள் இல்லை - இருந்தவை எல்லாவற்றையும் இழந்தாகிவிட்டது என்கிற கைசேத நிலையில் - நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகளை பாதிக்கப்பட்டோர் எதிர்பார்த்து இருக்கின்றனர். சம்பந்தப்பட்ட உயர் தலைவர்கள், அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க ஆவண செய்வார்களாக!

## ஹக்கீம் ஏன் சொல்லவில்லை?

கடந்தவாரம் மூதூரில் இடம்பெற்ற நஷ்டஈட்டுக் கொடுப்பனவு வைபவத்தில் பேசிய மு.கா.தலைவரான அமைச்சர் ஹக்கீம் "மூதூர் சம்பவத்திற்கு பொறுப்பானவர்களை அடையாளம் காட்டாமல்; வெறும் மேம் போக்காக மூதூர் முஸ் லிம்கள் மீதான இன சொத்தழிப்பை, சமூகங்களிடையேயான இன மோதலாக அர்த்தப்படுத்தி உரையாற்றியது



மூதூர் முஸ்லிம்கள் மத்தியில் பெரும் கவலையையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

மூதூர் முஸ்லிம்களைப் பாதுகாப்பதிலிருந்து தமது அரசாங்கமும், தனது அரசியல் தலைமையும் தவறிவிட்டதை இவ்வைபவத்தில் மு.கா. தலைவர் தார்மீக அடிப்படையில் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். அதனை விடுத்து நஷ்டஈடு வழங்குவதை பெரும் சமுதாயப் பணியாக; தனது அரசியலை நிலைநிறுத் துவத ற்கான யுக்தியாக மாற்றியமைப்பதிலேயே ஹக் கீமின் கவனம் முற்றாகக் குவிந்திருந்ததை - இவ்வைபவ உரையிலிருந்து மூதூர் முஸ்லிம்கள் தெளிவாகப் புரிந்துகொண்டனர். மூதூர் சம்பவத்திற்கு காரணமான புலிகளை - இவ்வைப வத்தில் அமைச்சர் சுட்டிக்காட்டாதிருப்பது யாருக்கு இலாபம்?

முஸ்லிம்களுக்கா? புலிகளுக்கா? நிச்சயமாக முஸ்லிம் தலைமைகளின் இக்கபடத்தனமான அரசியல் கருத்தாடல்களில் இலாபமடைந்து கொண்டிருப்போர் புலிகள்தான். அதனால்தான் அவர்களது காட்டுத் தர்பார் தொடர்கிறது. நமது அரசியல் தலைமைகளின் பலவீனங்களை ஆதாரமாகக் கொண்டு...

## உடதலவின்னை படுகொலை சம்பவத்தில் உயிரிழந்த பத்துப் பேருக்கு காணித்துண்டுகள்

கடந்த பொதுத் தேர்தலின் போது மடவளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 10 முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் தாங்கிய குண்டர்களால் மிக மோசமாகப் படுகொலை செய்யப்பட்டனர். இது தொடர்பான நீதி விசாரணை நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது - இப்படுகொலைகளுக்கு சூத்திரதாரிகளாக நம்பப்படும் முன்னாள் பாதுகாப்பிற்குப் பொறுப்பான அமைச்சர் ரத்வத்தையும் அவரது புதல்வர்களும் சிறையில் அடைக்கப்பட்டு இப்போது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் இலங்கையில் அதிக பரபரப்பை ஏற்படுத்திய இப்படுகொலையில் உயிரிழந்த 10 முஸ்லிம் இளைஞர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடாக 10 காணித்துண்டுகள் வழங்குவதற்கு அமைச்சரவை முடிவு செய்துள்ளது. இதற்கான நடவடிக்கையை அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் மேற்கொண்டிருந்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் அண்மையில் இணைந்துகொண்ட சட்டத்தரணி பைஸல் முஸ்தபாவின் வேண்டுதலின் பேரில்தான் அமைச்சர் இந்நடவடிக்கையை மேற்கொண்டதாகத் தெரிகிறது. தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணிகளே சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

முஸ்லிம் குரலின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட சமூக சக்திகள் - நிறுவனங்கள், உங்கள் ஆதரவையும் விளம்பரங்களையும் எமக்கு தந்துதவுங்கள்.

முஸ்லிம் குரல்
சுவடு 14
18 ஜுலை 2003 Muslim Kural صوت المسلم මුස්ලිම් කුරල් 19 ஜமாதுல்அவ்வல் - 1424
143, Muhandhiram Road, Colombo - 03. Tel: 0777-389127, Fax: 01-665831, E-mail: mm-s@col.lk

## தொடர்ந்தும் ஏமாற்றப்படுகிறோம்!

இலங்கை வாழ் முஸ்லிம்களை எல்லோரும் சேர்ந்து ஏமாற்றுவதற்கு திட்டமிட்டு செயற்படுகின்றார்கள் போல் தெரிகிறது. யாருமே முஸ்லிம்களை நியாயமாக அணுகுவதற்கு தயாரற்ற போக்குகளும் செயல்களுமே நடைபெற்று வருகின்றன. இலங்கையின் ஆட்சி அதிகாரத்திலுள்ள ஐக்கிய தேசிய முன்னணி தலைமையான ரணில் விக்கிரமசிங்கவோ, ஜனாதிபதியாகவுள்ள சந்திரிக்காவோ முஸ்லிம்கள் மீதான நியாயமான அக்கறைகளைக் கொண்டிருக்கிறார்கள் என நாம் நம்புவதற்கான ஆகக்குறைந்த சான்றுகளைக் கூடக்காணோம்.

முஸ்லிம் அரசியல் தலைமைகள் தங்கள் பதவிகளைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் இன்னும் இன்னுமாக பதவிகளை தங்களது தோள்களில் சூடிக் கொள்ளவுமான தந்திரோபாயங்களிலும் அரசியல் குழி பறிப்புகளிலும் சதா ஆழ்ந்து நிற்கின்றன. இடைக்கிடையே இவர்களில் ஒரு சிலர் மக்களுக்காகப் போராடப் போவதாகவும் தாங்கள் மக்களை கைவிட்டு ஒருபோதுமே ஓடிவிடப் போவதில்லை எனவும் "நாடக பாணியில்" வசனங்களை உதிர்த்து வருகின்றனர்.

இந்நிலையில் நமது சமூக அரசியல் அரங்கில் அரசியல்வாதிகள் பற்றிய அபிப்பிராயம் என்றுமில்லாத வகையில் மிகவும் தரம் தாழ்ந்து போய்விட்டது. சூதாடிகளாகவும், ஏமாற்றுக்காரர்களாகவும் சொந்த மக்களுக்காகப் போராட திராணியற்ற கோழைகளாகவும் நமது அரசியல் வாதிகள் மக்கள் அபிப்பிராயங்களில் ஆழப்பதிந்து போய்விட்டனர்.

நியாயமாக நிலைமைகளை அவதானிக்கும் ஒரு சமூகப் பிரஜைக்கு, நமது சமூகப் பாதுகாப்பிலும் இருப்பிலும் அரசியல் வாதிகளின் பாத்திரமும் பங்களிப்பும் வெறும் பூஜ்ஜியமாகவே உருவாகி வளர்ந்து நிற்பதை உணர்தல் முடியும். ஏனெனில் இந்தப்பிரதிநிதிகள் ஆட்சி அதிகாரத்தில் வீற்றிருந்த பொழுதுகளில்தான் பதவிச் சுகத்தில் திளைத்திருந்த வேளையில்தான் நமது மக்களுக்கு மிகப்பெரும் துன்பங்களும் அடிமை வாழ்வும் தலையெழுத்தாக திணிக்கப்பட்டு வந்திருக்கிறது. நமது மக்கள் மீதான படுகொலைகள், தாக்குதல்கள், பொருளா தாரத் தடைகள், ஆக்கிரமிப்புகள், கப்பம் கட்டுதல் இன்றுமே தொடர்கதையாகி வருகின்றது. நமது அரசியல் தலைமைகளால் இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு எதுவுமே செய்ய முடியவில்லை.

"நந்தவனத்தில் ஒரு ஆண்டி, நாலாறு மாதமாய், குயவனை வேண்டி, கொண்டு வந்தானொரு தோண்டி - அதைக் கூத்தாடக் கூத்தாட, போட்டுடைத்தாண்டி" என்ற போக்கில்தான் நமது அரசியல் தலைமைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இப்போது நமக்கு முன்னுள்ள ஒரே நம்பிக்கை நமது சிவில் சமூகம்தான். மக்கள் மத்தியில் இருந்து நமக்கான பாதுகாப்பையும் அரசியல் உத்தரவாதத்தையும் ஏற்படுத்துவதற்கான பணிகளைச் செய்ய வேண்டியுள்ளன. காலத்தை தொடர்ந்தும் வீணே கழித்துக் கொண்டிருக்க முடியாது! மக்களாகிய நாம் உடனடியாக செயலில் இறங்க வேண்டியுள்ளது.

தோழமையுடன்,
பிரதம ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org